# இலக்கிய அறிமுகம்




டாக்டர்.

## மா. இராசமாணிக்கனார்

BALU BROS

# இலக்கிய அறிமுகம்

டாக்டர் மா. இராசமாணிக்கனர்,
M.A., L.T., M.O.L., PH. D.
தமிழ்த் துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

தென்னாட்டுப் பதிப்பகம்
16, பிராட்வே : : சென்னை

பதிப்புரிமை] 1955 [விலை ரூ. 1-0-0

முதற் பதிப்பு—அக்டோபர், 1955

Kabeer Printing Works, Madras (3029)

# முகவுரை

"இலக்கிய அறிமுகம்" என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணம், பெரிய புராணம் என்னும் நூல்களை மாணவர்க்கு 'அறிமுகம்' செய்யும் வகையில் பல நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

பாக்கு மரங்கள் பலவாகவும், தென்னை மரங்கள் இரண்டொன்றும் இருப்பின், அவ்விடத்தைக் 'கமுகந் தோப்பு' என்று அழைப்பதே மரபு. அம்மரபின்படி, புறநானூறு முதலிய இலக்கிய நூல்களோடு தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் சேர்க்கப்பட்டு, "இலக்கிய அறிமுகம்" என்று இந்நூல் பெயர் பெற்றது என்பது இங்கு அறியத்தகும்.

ஒவ்வொரு நூலிலும் உள்ள குறிப்பிடத்தக்க சில காட்சிகள் அல்லது நிகழ்ச்சிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஒரு நூலில் ஒரு செய்யுளில் காணப்படும் செய்திகள் அல்லது பல செய்யுட்களில் காணப்படும் செய்திகள் தொகுத்து நிகழ்ச்சி வடிவத்தில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூலும் மாணவர்க்கு ஏற்ற முறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூல் நன்முறையில் வெளிவர உதவிபுரிந்த் எங்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்கள் திரு. சுப. அண்ணாமலை, B. O. L. (Hons.), வித்துவான் கதி. சுந்தரம், சி. கனகசபாபதி, B.A. (Hons.), புலவர் க. ஆறுமுகனார், B. O. L. (Hons.) ஆகியோர்க்கு எனது நன்றி என்றும் உரியது.

மாணவர்க்கு எளிதில் விளங்கத்தகும் நிகழ்ச்சிகளே இங்குத் தக்க தமிழ் நடையில் தரப்பட்டுள்ளன. இப்புதுமுறைத் துணைப்பாட நூலைக் கல்வி அறிஞர் வரவேற்று ஆதரிப்பர் என்று நம்புகிறேன்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை.
11–9–1955.

மா. இராசமாணிக்கனார்

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வீர வணக்கம் —தொல்காப்பியம் | ... | 1 |
| 2. | வாழ்க்கை அநுபவம் —திருக்குறள் | ... | 13 |
| 3. | குடும்ப விளக்கு —நற்றிணை | ... | 23 |
| 4. | குருவிக் குடும்பம் —குறுந்தொகை | ... | 31 |
| 5. | பைந்தமிழ்ப் பாவை —கலித்தொகை | ... | 40 |
| 6. | நிலாப் பேச்சு —அகநானூறு | ... | 51 |
| 7. | அறிவும் ஆற்றலும் —புறநானூறு | ... | 61 |
| 8. | பூம்புகார்ப் பொற்கொடி —சிலப்பதிகாரம் | ... | 69 |
| 9. | பலசுவைக் காட்சிகள் —மணிமேகலை | ... | 82 |
| 10. | போர்க்களக் காட்சி —கலிங்கத்துப்பரணி | ... | 90 |
| 11. | காதலும் கடமையும் —கம்பராமாயணம் | ... | 101 |
| 12. | அன்பின் சிகரம் —பெரிய புராணம் | ... | 114 |

# 1. வீர வணக்கம்

## 1. பழந்தமிழர் போர்முறை

### ஆநிரை கவர்தல்

"அரசே! பாண்டிய நாட்டு எல்லையில் உள்ள சோழநாட்டு ஊர்களுள் வள்ளுவர் குப்பம் என்பது எங்கள் ஊர். அவ்வூரில் இருந்த ஆநிரைகளை எல்லாம் நேற்றிரவு பாண்டிய நாட்டு வீரர் வந்து கவர முனைந்தனர். எல்லையைக் காத்துவந்த என் போன்ற வீரர்க்கும் பாண்டி வீரர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. எண்ணிக்கையில் மிகுந்திருந்த பாண்டி வீரர் நம் வீரர்களை வென்று பசுநிரைகளைக் கவர்ந்து சென்றனர். நம் வீரருள் ஐம்பதின்மர் இறந்துபட்டனர்," என்று சோழநாட்டு வீரன் ஒருவன் சோழ வேந்தனிடம் சென்று முறையிட்டான்.

### போர்த் தொடக்கம்

சோழ மன்னன் அதனைக் கேட்டுச் சீற்றம் கொண்டான்; அவன் விழிகள் சிவந்தன; மீசை துடித்தது. அவன் தன் தானைத்தலைவரை நோக்கி, "சேனைத் தலைவரே, பாண்டிய வீரர் இவ்வாறு நம் பசுநிரைகளைக் கவர்தல் போர்த் தொடக்கத்திற்குரிய அறிகுறியாகும். இன்னும் ,சில நாட்களில் பாண்டியன் நமது சோழநாட்டின்மீது படையெடுத்து வருவான் என்பது திண்ணம். ஆதலின், எல்லைப்புறத்தை வலுப்படுத்த வேண்டுவது

நமது முதற் கடமையாகும். அதற்கு ஆவன செய்யுங்கள்; நமது நால்வகைப் படைகளையும் போரைச் சமாளிக்கத் தக்க முறையிலும் பாண்டியனைப் புறங்காட்டி ஓடச்செய்யும் வகையிலும் விழிப்போடு இருக்கும்படி ஏற்பாடு செய்யுங்கள்,'' என்று கூறினான்.

**அணிவகுப்பு**

சோழர் சேனைத் தலைவன், அரசன் ஆணைப் படி எல்லைப்புறத்தில் வீரர்களை அணி அணியாக இருக்கச் செய்தான்; திடீரென்று உண்டாகும் படையெடுப்பை எதிர்த்து நிற்கத்தக்க வகையில் பண்பட்ட படைகளைத் தயாரித்தான்.

சோழநாட்டில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், பாண்டிய நாட்டில் நடை பெற்ற செயல்கள் எவை? பாண்டியன் நல்லோரை யில் தன் குடையையும் வாளையும் வடதிசை நோக் கித் தனக்கு முன்னே செல்லவிட்டான். வீரர் சோணாட்டின்மீது செல்லக் கருதி முரசை முழக்கி னர். யானை முதலியன முழக்கமிட்டன. வேந்த னுக்கு வெற்றி உண்டாகும்பொருட்டு வீரர் கொற்ற வைக்கு வழிபாடு இயற்றினர்; பின்னர்ப் படை வகுப்பில் தத்தமக்கு ஏற்ற நிலையை மேற்கொண்ட னர். அரசன் படையெடுத்தலுக்கு அடையாளமாக வஞ்சிப் பூமாலையைச் சூடிக்கொண்டான். அவன் தானை வீரரும் வஞ்சிப் பூக்களைச் சூடிக்கொண்ட னர்; வேந்தன் சிறப்பைப் புகழ்ந்து கூறினர்; பகைவர் நாடு அழியுமே என்று இரங்கினர். அரசன் தன் வீரரை மனமகிழச் செய்து போருக் குப் புறப்பட்டான்.

## பூச்சூடல்

,ு பாண்டியன் சோணுட்டு எல்லையை நெருங்கிஞன்.'' அங்கு எல்லைப்போர் நிகழ்ந்தது. பாண்டியனது படையெடுப்பைச் சோழ வீரர் தடுத்துப் போரிட்டனர். பாண்டியன் தன் எல்லைக்குள் வந்து விட்டான் என்பதை அறிந்த சோழன் சினந்து, "உறங்கிக்கொண்டிருக்கும் புலியை இடறின குருடனைப்போல இப்பாண்டியன் தாளுக வந்து எனது சீற்றத்தைக் கிளப்பிவிட்டான். யான் இவனை வெல்லேனுயின், இச்சோழர் குடியிலிருந்து யான் மாறிப் பிறப்பேன் ஆகுக," என்று வஞ்சினம் கூறினுன்; படையெடுத்தோனை எதிர்ப்பதற்கு அடையாளமாகக் காஞ்சிப் பூமாலையை அணிந்தான். அவன் வீரர்களும் காஞ்சிப் பூக்களைச் சூடிப் போருக்குப் புறப்பட்டனர்.

## தலைக்கொடை

சோழன் பாண்டியனை நோக்கிச் செல்வதற்கு முன்னரே பாண்டியன் சோழநாட்டிற்குள் புகுந்து விட்டான். அவன் வீரர்கள் சோழநாட்டு ஊர்களில் எரியூட்டினர்; பொருள்களைக் கொள்ளை கொண்டனர். சோழர் படையும் பாண்டியர் படையும் ஒன்றை ஒன்று சந்தித்தன. கரிகளும் கரிகளும் மலைந்தன; பரி வீரரும் பரி வீரரும் போரிட்டனர்; காலாட்படையினர் கடும்போர் புரிந்தனர். சோழரைச் சேர்ந்த பெருவீரன் ஒருவன் தனியே நின்று பெருவெள்ளத்தைத் தடுக்கும் அணையைப்போலப் பாண்டியர் சேனையின் ஒரு பகுதியை எதிர்த்து நின்ருன். நெடுநேரம் போரிட்ட பிறகு அவ்வீரன் தலை பகைவரது வாளால் துண்டிக்கப்பட்டது. அப்

பெருவீரனது தலையைப் பிற வீரர்கள் சிறப்பித்துப் பேசினர். அத்தலையைக் கொண்டு சென்று அரசனிடம் கொடுத்தவர்க்கு அரசன் பரிசு வழங்கினான். அத்தலைக்குரிய வீரனுடைய மனைவி, கணவன் பிரிவாற்றாது உயிர் நீத்தாள்.

### களக் காட்சி

சோழன் போரிட்டபொழுது, பாண்டியருடைய வன்மையைத் தாங்காத வீரர் சிலர், அப்பகைவரால் இறத்தலை விரும்பாமல் தம்மேற் பட்ட புண்ணைத் தாமே கிழித்துக்கொண்டு உயிர்விட்டனர். போரில் பேராண்மை காட்டி இறந்தவர்தம் இயல்புகளைப் பாராட்டிக் கூறி வீரர் பலர் வருந்தினர். சோழ வேந்தன் தன் வீரர்க்குப் போரில் ஊக்கம் எழும்படி இனிய பானங்களை வழங்கினான். போரில் இறந்துபட்ட வீரருடைய மனைவிமார் சிலர் தீக் குளித்தனர்; சிலர் தம் கணவரைக் கொன்ற வேலினாலே குத்திக்கொண்டு தாமும் இறந்து பட்டனர்.

### கோட்டைப்போர்

இங்ஙனம், சோழநாட்டில் நிகழ்ந்த கடும் போரில் சோழன் வெற்றி பெற்றான். பாண்டியன் பின்னடைந்து தன்னாட்டு எல்லைக்குள் பதுங்கினான். அண்மையில் இருந்த கோட்டைக்குள் தன் வீரர்களுடன் ஒளிந்துகொண்டான். சோழன் அக் கோட்டையைக் கவரக் கருதி உழிஞைப் பூமாலையைச் சூடினான். வீரர்களும் உழிஞை மலர்களைச் சூடிக்கொண்டனர். திருமால் 'சோ' என்னும் மதிலை அழித்த செயலை அரசனுக்கு ஊக்கம் உண்

டாதற் பொருட்டுச் சிலர் சிறப்பித்துக் கூறினர். சோழ வேந்தன் தன் படைகளுடன் சென்று பாண்டியனது மதிலின்புறத்தே தங்கினான். சோழ வீரர் பகைவரது மதிலின் இயல்பை நன்கு அறிந்து வந்து கூறினர். சோழன் தன் யானைகளை ஏவி, அவற்றின் கொம்புகளைக் கொண்டு மதிற் கதவைப் பிளக்கச் செய்து மதிலைக் கைக்கொள்ள முயன்றான். வீரர் சிலர் மதிலைச் சுற்றிலும் இருந்த காவற்காட்டைக் கடந்து புகுந்தனர்; காவற்காட்டைக் கடந்த பின்னர் அகழியின் புறத்தே தங்கினர்; நாவாய் தோணி முதலியவற்றில் ஏறி அகழியைக் கடக்க முயன்றனர்; அவ்வமயம் மதிலின் புறத்தே இருந்த பாண்டிய வீரர் அவர்களை எதிர்த்தனர். சோழ வீரர் பாண்டிய வீரர்களை வென்று மதில்மேல் ஏற முயன்றனர். அப்பொழுது மதில் மீதிருந்த பலவகைப் பொறிகள் அவர்களை மதிலின்மேல் ஏற முடியாதபடித் தடை செய்தன. ஆயினும், சிலர் அம்மதிலின்மீது ஏணியைச் சாத்தி ஏறி, மதிலுக்கு அப்பால் இருந்த காவற்காட்டில் குதித்தனர்.

### வெற்றி விழா

இங்ஙனம், குதித்தவர் தொகை வரவர மிகுதிப்பட்டது. காவற்காட்டில் இருதிறத்து வீரர்க்கும் கடும் போர் நிகழ்ந்தது. இறுதியில் சோழர்படை வெற்றி கொண்டது. பாண்டியன், சோழன் கையில் அகப்படாமல் கோட்டையில் இருந்து வெளியேறினான். அவன் வெளியேறியதை அறியாத சோழர் படை, கோட்டையின் பல பகுதிகளை அழித்தது. சோழவீரர் அரசனது வாளைத் தூய நீரால் நீராட்டி

னர். சோழப் படையோடு வந்த புலவர்கள், அவன் மதிலைக் கைக்கொண்ட வெற்றியைப் புகழ்ந்தனர். சோழன் தன்னை மகிழ்வித்த புலவர்க்கும் பாணர்க்கும் கூத்தர்க்கும் ஏற்ற பரிசில்கள் வழங்கினான்; போரில் வெற்றிகண்ட பெரு வீரர்க்குத் தக்க சிறப்புக்களைச் செய்தான்.

## தும்பைப் போர்

கோட்டையில் இருந்து வெளியேறிய பாண்டியன் இரவோடு இரவாகப் பெரும் படை திரட்டினான்; சிறந்த படைவீரர்க்குப் போர்ப்பூவாகிய தும்பையையும், விளைநிலன், பொருள், கரி, பரி முதலிய வரிசைகளையும் வழங்கினான். அப்பொழுது காலம் தாழ்க்காமல் போர் செய்வதால் உறுதி உண்டாகும் என்று சிலர் கூறினர். மறுநாட் காலை வெட்டவெளியில் இருதிறப் படைகளும் கடும்போர் புரிந்தன. பாண்டியன் தன்னுட்டை எவ்வாற்ருனும் காப்பாற்ற வேண்டும் என்னும் கருத்துடன் கடும்போர் புரிந்தான். அவன் தேர்கள் குருதி வெள்ளத்தில் பகைவருடைய பிணங்களின்மேல் ஊர்ந்து சென்றன. அவன் உடற்றிய கடும்போரில் சோழ வீரர் பலர் இறந்தனர். அங்ஙனம் இறந்து பட்ட வீரரைக் குறித்துச் சோழநாட்டுப் பாணர் நெருப்பை மூட்டிச் சாப்பண்ணுகிய விளரியைப் பாடினர். போரில் இறந்துபட்ட வீரர் வீரசுவர்க்கம் புகுவர் என்பது அக்காலத்தில் நிலவிய நம்பிக்கையாகும்.

பாண்டியன் தாக்குதல் வரவரக் கடுமையாகியது. அதனுல் சோழர்படை சிறிது பின்வாங்கியது. அப்பொழுது முன்நோக்கிவந்த பாண்டியர்

படையின் பகுதிகளைச் சோழப் பெருவீரர் சிலர் ஆங்காங்கு நின்று தடுத்துப் போர் புரிந்தனர். அவருட்சிலர் தம் கையில் உள்ள வேல்களை எதிரிக ளுடைய யானைகள்மீது எறிந்து வெறுங்கையுடன் நின்றனர்; அந்நிலையிலும் தம் தோளையே கொம் பாகக் கொண்டு ஆண் எருமையைப்போல நின்று எதிர்த்தோரை வெற்றி கொண்டனர். சிலர் பகை வரைக் கொன்று வேலைச் சுழற்றிக்கொண்டு ஆடி னர். வேறு சிலர் தம்மேல் தைத்த வேலைப் பறித்து அதனையே கொண்டு பகைவரோடு போர் புரிந்த னர். அப்பொழுது சோழ வீரர் சிலர் தமது வேல் பட்டு வீழ்ந்த யானைகளின்கீழ் அகப்பட்டு ஆவி துறந்தனர். வீரர் சிலர் தம் உடம்பில் அம்புகள் பட்டு நிலத்தைத் தீண்டாமல் கிடந்தனர். இறுதி யில், சோழர்படை சேரனாட்டு எல்லைக்குள் வந்து விட்டது. பாண்டியன் தன்னாட்டைக் காத்துக் கொள்ளும் அளவில் அன்று வெற்றியடைந்தான். வெற்றிபெற்ற பாண்டியனது தேரின்முன் வீரர் ஆடினர். அத்தேரின்பின் வீரரும் விறலியரும் ஆடினர். போரில் இறந்துபட்ட இருதிறத்து வீரரையும் அவர்தம் மனைவிமார் வந்து கண்டு அவர்தம் உடலங்களைத் தழுவினர்; தம் கணவன் மார் விழுப்புண்ணோடு இறந்ததை அறிந்து மகிழ்ச் சிக்கண்ணீர் சொரிந்தனர். போரின் முடிவில் பாண்டியனும் சோழனும் சிறந்த தம் வீரர்கட்கு உயரிய பட்டங்களையும் பரிசுகளையும் வழங்கினர்.

## போர்க்குப்பின்

தும்பை சூடிப் போர்புரிந்த பாண்டியன் வெற்றி பெற்றவுடன் வாகைப் பூமாலையைச் சூடி

னுன். அவனுடைய அரண்மனையில் வெற்றி முரசம் முழக்கம் இட்டது. சேனையாகிய எல்லையை யுடைய போர்க்களம் என்னும் வயலுள் சினமென்னும் விதையை விதைத்து, வேலாகிய கோலையும் யானையாகிய எருதையும் உடையவனுகிப் புகழை விளைவிக்கும் உழவனுகப் பாண்டியன் உருவகம் செய்து புகழப்பட்டான். "உன்னுடைய புகழை யும் பெருமையையும் எண்ணிச் செருக்கிஞல் பிறரை எள்ளுதலைத் தவிர்க", என்று சான்ருேர் பாண்டியனுக்கு அறிவுரை கூறினர். பாண்டி யனது வெற்றிக் குடையைப் பலர் பலவாறு சிறப் பித்தனர். வீரக் குடியிற் பிறந்து போரில் விழுப் புண் பட்டு இறந்த மாவீரர்க்குப் பிறவீரர் வணக்கம் செலுத்தினர். வீரமகளிர் நூளிஎரி புகுந்ததைப் பாராட்டிப் புலர் நல்லுரை புகன் றனர். செஞ்சோற்றுக் கடன் கழித்த செம்மல்க ளாகிய தானைத் தலைவர் பலரைப் புலவரும் அமைச் சரும் பாராட்டினர். அரசன் போரில் தத்தம் திறமை காட்டி உயிரோடிருந்த வெற்றி வீரர்க்கு வரிசைகள் நல்கினுன்; இறந்துபட்ட வீரர் குடும் பங்கட்குப் பொன்னும் பொருளும் வழங்கினுன்; போரில் உணர்ச்சி ஊட்டி உதவிய புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்கு அவரவர் விரும்பியவற்றை அளித்தான். அனைவரும் மன்னவனை மனமாரப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

### வீரவணக்கம்

போரில் இறந்துபட்ட பாண்டிய வீரருள் ஒருவன் மதுரையைச் சேர்ந்தவன். அவனது பெருவீரத்தைப் பாராட்டிய பாண்டி மன்னன்

அவனை மதுரைவீரன் என்று அழைத்தான். அவ் வீரனுக்காக நினைவுக்குறி ஒன்றை எழுப்ப வேந்தன் விரும்பினான். பாண்டிய நாடு மலைகள் நிறைந்த நாடு; ஆதலால் கல்லுக்குப் பஞ்சமில்லை. மதுரை வீரன் உருவத்தைச் செதுக்க ஏற்ற கல்லைத் தேடி எடுத்து வரும்படி பாண்டியன் சிற்ப வல்லுநரை அனுப்பினான்; சிற்ப வல்லுநர் ஒவ்வொரு மலைக்கும் சென்று ஏற்ற கல்லைத் தேடினர்; இறுதியில் ஏற்ற கற்பாறை ஒன்றைக் கண்டனர்; அக்கல்லை ஒரு வண்டியில் ஏற்றி மதுரை மாநகர்க்குக் கொணர்ந்தனர்; குறித்த நன்னாளில் வேந்தன் விரும்பிய இடத்தில் அக் கல்லை நடுதற்கு ஏற்ற அமைப்பை உண்டாக்கினர்; பின்பு அதனை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தனர். அதன் பின்னர் அக்கல்லில் மதுரை வீரனது உரு வத்தை நன்முறையில் செதுக்கினர்; அவனது உருவத்திற்குக் கீழ் அவனது பெயரும் பீடும் எழுதினர்; பின்னர் அரசன் உட்பட அனைவரும் அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெரும் சிறப் புக்களைச் செய்து வாழ்த்தினர். இவ்வாறு போரில் மாண்ட மதுரை வீரன் வீர வணக்கத்துக்குரிய தெய்வமாக்கப்பட்டான்.

## 2. நடுகல்

### கல்லானாலும் கணவன்

இவ்வாறே சோழ நாட்டுப் பெரு வீரனாக விளங்கி முன்கூறப்பட்ட போரில் தன் தனி வீரத் தைக் காட்டி மடிந்த பொன்னப்பன் என்பவனுக் குச் சோழவேந்தன் கல் நாட்டு விழா எடுத்தான்.

இத்தகைய வீரக் கற்கள் தமிழ் நாட்டில் பலவுண்டு: அவை தமிழ் இளைஞர்கட்குப் போரில் ஊக்கத்தை யும் உணர்ச்சியையும் உண்டாக்கி வந்தன.. "கல் நின்ருன் எந்தை," என்று ஒரு மறக்குடி மகள் தன் தந்தை நடுகல் தெய்வம் ஆனதைக் குறித்து மகிழ்கின்ருள். இங்ஙனம் தெய்வமான கணவனை நினைந்து அவன் மனைவி நாடோறும் வழிபடுதல் வழக்கம். இதனுற்ருன் " கல்லானுலும் கணவன் " என்னும் பழமொழி நம் நாட்டில் எழுந்தது.

## திணையும் துறையும்

பாண்டியனுக்கும் சோழனுக்கும் நடைபெற்ற தாகக் கூறப் பெற்ற போரைப் பற்றிய விவரங்களை எல்லாம் நம் முன்னேர் திணைகளாகவும் துறைக ளாகவும் வகுத்துக் கூறினர். கால் நடைகளைக் கவர்தலும் அவற்றை மீட்டலும் வெட்சித் திணை எனப்படும். இவ்விருவகைச் செயல்களிலும் அமைந்துள்ள படிப்படியான நிகழ்ச்சிகள் துறை கள் என்று பெயர் பெறும்.

பாண்டியன் தானுகவே சோழ நாட்டின்மீது படையெடுத்தது வஞ்சித்திணை எனப்படும். படை யெடுத்த பாண்டியனைச் சோழன் எதிர்த்தமை காஞ்சி என்று சொல்லப்படும். சோழன் பாண்டி யன் மதிலை முற்றுகையிட்டது உழிஞைத் திணை எனப் பெயர் பெறும். கோட்டையைக் காத்து நின்ற பாண்டியன் போர் நிகழ்ச்சி நொச்சித் திணை என்று பெயர் பெறும். இருவரும் பெரு வெளியில் போரிட்டமை தும்பைத் திணை எனப் படும். இருவரில் ஒருவன் வெற்றி பெற்றமை, வாகைத்திணை எனப் பெயர் பெறும்.

**வீரவணக்கம்**

இறந்த வீரனைத் தெய்வமாக்கும் முயற்சியில் ஆறு நிலைகள் கூறப்பட்டுள்ளன. வீரனது உருவத்தைப் பொறிக்கத் தக்க கல்லைக் கண்டறிதல் காட்சி எனப்படும்; அக்கல்லை நடுதற்குரிய அடிப்படை அமைத்தல் கால்கோள் எனப்படும்; அக்கல்லை நீராட்டித் தூய்மை செய்தல் நீர்ப்படை எனப் பெயர் பெறும்; வீரனது உருவத்தைக் கல்லில் செதுக்கி அக்கல்லை நடுதல் நடுகல் எனப்படும்; அவ்வீரனைத் தெய்வமாக்கிச் சிறப்பித்தல் பெரும்படை எனப்படும்; அவ்வீரனை வாழ்த்துதல் வாழ்த்து எனப்படும்.

**நூல் அறிமுகம்**

இங்ஙனம் போர் முறைகளும் வீர வணக்கமும் அரசியலும் இல்வாழ்க்கையும் பற்றிய செய்திகள் எல்லாம் **தொல்காப்பியம்** என்னும் பழந்தமிழ் இலக்கணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியம், தொல்காப்பியர் என்ற மாபெரும் புலவரால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் செய்யப்பட்டது. அஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. நமது மொழிக்கு உயிர் நாடியாக உள்ள எழுத்துக்களின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுவது எழுத்ததிகாரம்; எழுத்துக்களால் ஆகிய சொற்களின் இலக்கணத்தை விளக்கிக் கூறுவது சொல்லதிகாரம்; தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் பேசும் தமிழ் மக்களுடைய அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் சித்திரித்து இலக்கணம் வகுத்துரைப்பது பொருளதிகாரம்.

உலகத்தில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் பொருளதிகாரம் என்னும் ஒன்று இல்லை என்பது இங்கு அறியத்தகும். ஈடும் எடுப்பும் அற்ற இப் பண்டை இலக்கண நூலில், தொல்காப்பியர் காலத்துத் தமிழருடைய அரசியல், சமய நிலை, மொழி நிலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றைப் பரக்கக் காணலாம்.

# 2. வாழ்க்கை அநுபவம்

## 1. வணிகர் அறிவுரை

### முருகப்பர் வாணிகம்

முருகப்பர் சிறந்த கூலவாணிகர்; பர்மாவில் இருந்து அரிசி மூட்டைகளை நம் நாட்டிற்குக் கொணர்ந்து விற்பவர்; அவர் சிறந்த கல்வியும் நிறைந்த ஒழுக்கமும் உடையவர்; அற நெறியினின்று வழுவாத வாழ்க்கை யுடையவர்; இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஒரு தாய் ஈன்ற மக்களாகக் கருதும் மனவிரிவு கொண்டவர்; தம்மால் இயலும் உதவியை எப்பொழுதும் யாருக்கும் செய்யத் தவருதவர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் பொன்னுரைப்படி நடப்பவர்; 'நம்மிடம் அரிசி வாங்குவோர், அதற்கு ஈடாகப் பணத்தைத் தருகின்றனர்; ஆதலால் பண மதிப்பிற்குரிய அரிசியை எவ்வாற்ருனும் குறைக்காமல் கொடுப்பதே நேர்மையானது', என்ற கொள்கையினர்; அக்கொள்கையைத் தவருது நடைமுறையிற் காட்டுபவர்.

### நல்லார் இணக்கம்

இத்தகைய சீரிய பண்புகளால் அவர் சான்ருேர் பலரது நட்புக்கு உரியவர் ஆனுர். அச் சான்ருேருள் பொன்னப்பர் என்னும் சைவ சித்தாந்தி ஒருவராவர். பொன்னப்பர் சமயத்தொடர்பான பல நூல்களைப் பழுதறக் கற்றவர்; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்," என்ற கருத்தினர்;

" ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்னும் வள்ளுவர் வாக்கிற்குச் சிறந்த இலக்கியமாக இலங்குபவர். இத்தகைய சான்றோரை நமது முருகப்பர் உள்ளன்போடு நேசித்துவந்தார். பொன்னப்பரும் முருகப்பரைத் தம் உயிர் நண்பராகக் கருதினர். இந்நல்லார் இணக்கம் நாளும் வளர்பிறை போல வளர்ந்துவந்தது.

நாடோறும் மாலை நேரங்களில் பொன்னப்பரும் முருகப்பரும் ஒரு மணி நேரம் உரையாடி மகிழ்வது வழக்கம்.

## கடலில் மூழ்கிய கப்பல்

முருகப்பர் கோடீசுவரர்; அவர் இரண்டாம் உலகப் போர் தொடங்கிய சமயத்தில் பர்மாவில் இருந்து அரிசி வரவழைக்க ஏற்பாடு செய்தார். அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்ட பெரிய கப்பல் ஒன்று இரங்கூன் துறைமுகத்தை விட்டுச் சென்னை நோக்கிப் புறப்பட்டது. ஆனல், அக்கப்பல் சென்னை வந்து சேரவில்லை; வங்கக் கடலில் வந்துகொண்டிருந்தபோது எக்காரணத்தாலோ கடலில் முழுகிவிட்டது. இதனல் முருகப்பருக்கு ஏற்பட்ட பொருள்இழப்புப் பெரிது.

## பொன்னப்பர் வியப்பு

முருகப்பருக்கு ஏற்பட்ட பெரும் இழப்பை அவர் நண்பர் அனைவரும் கேள்வியுற்றனர். பொன்னப்பர் அதனைக் கேட்டு உளம் பதைத்தார்; வழக்கம்போல் அன்று மாலையில் முருகப்பரைக் காணச் சென்றார். முருகப்பர் வழக்கம்

போலத் தம் ஆருயிர் நண்பரை இன்முகம் காட்டி வரவேற்று உரையாடிக்கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து, இருவரும் சிற்றுண்டி உட்கொண்டு தேநீர் அருந்தினர். பொன்னப்பர் முருகப்பரிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பி வந்தார். வந்தவர் தம்முள், "கப்பல் முழுகியது முருகப்பருக்குத் தெரியாதா? அவர் அதுபற்றி நம்மிடம் ஒன்றும் கூருதிருக்கும்போது நாமே அதைப்பற்றிக் கேட்பது தவருக முடியுமோ? உண்மையாகவே இழப்பு ஏற்பட்டிருந்தால் அவர் கூருது விடுவரோ? நமது நண்பரே கேளாதிருக்கும் பொழுது நாமாக ஏன் கூற வேண்டும் என்று வாளா இருந்தனரோ? என்று பலவாருக எண்ணி, இறுதியில் 'நாம் திரும்பச் சென்று இதனைக் கேட்டறிவதே நல்லது' என்ற முடிவுக்கு வந்தார்.

## இடுக்கண் வருங்கால் நகுக

பொன்னப்பர் மீண்டும் முருகப்பரிடம் சென்ருர். அவரைக் கண்ட முருகப்பர் புன்முறுவலோடு வரவேற்ருர். பொன்னப்பர் வணிகரை நோக்கி, "நண்பரே, தங்கட்கு வந்து சேரவேண்டிய அரிசி மூட்டைகளை ஏற்றிக் கொண்டுவந்த கப்பல், கடலுள் மூழ்கியது என்று கேள்வியுற்றேன்," என்று வருத்தக் குரலுடன் கூறி மேலும் தொடர்ந்து பேசலானுர்.

உடனே வணிகர் இடைமறித்து, மலர்ந்த முகத்தோடு தம் நண்பரைப் பார்த்து, "சித்தாந்த சாத்திரங்களைப் பழுதறப் படித்தவரே, எனக்கு ஏற்பட்ட இழப்பு உண்மைதான். ஆனுல் அதைப் பற்றி யான் கவலைப்படவில்லை. இத்தகைய கடல்

வாணிகத்தில் ஒரோவழி பொருள் இழப்பு ஏற்படு தல் இயல்பு. மேலும் எந்தத் தொழிலிலும் எவ் வகை வாணிகத்திலும் இழப்பு ஏற்படுதல் இயல்பு. ஊதியம் வரும்பொழுது உவகை கொள்வதும், இழப்பு நேரும்பொழுது துன்பப்படுதலும் அறி வுடைய வணிகர் செயல்கள் ஆகா. இன்பத்தை யும் துன்பத்தையும் ஒன்ருகவே கருதும் விரிந்த மனப்பான்மை வணிகரிடம் இருத்தல் வேண்டும். அம்மனப்பான்மையற்ற வணிகன் உண்மை வணி கன் ஆகான். ஊதியம் வரும்பொழுது உவகை அடைவது போலவே, பொருள் இழப்பு நேரும் பொழுதும் உவகை கொள்ளுதல் வேண்டும். இவ் வாறு உவகை கொள்வதே துன்பத்தை வெல்லும் வழியாகும்; மேலும் முயன்று இழந்ததை ஈடு செய்ய ஏற்ற வழியாகும். இக்கருத்தை நான் கூறவில்லை; நம் தமிழகத்துச் சான்ருேருள் தலை மணியாக விளங்கும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

“இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ(து) அஃதொப்ப தில்.”

என்பது அவர் திருவாக்கு. இவ்வாக்கு எனக்கு உறுதுணையாக இருந்து என் மனநிலையை எப் பொழுதும் ஒரே நிலையில் வைத்திருக்கின்றது. ‘எல்லாம் சிவமயம்’ என்று கூறிவரும் சித்தாந்தி யாகிய நீங்கள், இந்தப் பொருள் இழப்பிற்காகத் துயரப்படுதல் ஏற்புடையதாகுமா”? என்ருர்.

# 2. ஒழுக்கத்தின் விழுப்பம்

## வீரப்பர் பெருமை

முருகப்பர் கல்வி கேள்வி ஒழுக்கம் என்னும் மூன்றிலும் சிறந்தவர். அவர் வீட்டுக்கு எதிரில் அவரினும் மேம்பட்ட வீரப்பர் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் தென்மொழி, வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் சிறந்த பயிற்சியுடையவர். அரசாங்க அலுவலராக இருந்து ஒய்வு பெற்றவர். அவர் காலையிலும் மாலையிலும் தம் வீட்டுத் திண்ணைமீது அமர்ந்து கொண்டு நூல்களைப் படிப்பது வழக்கம்; சில சமயங்களில் முருகப்பர், பொன்னப்பர் போன்ற நண்பர்களோடும் உரையாடுதல் வழக்கம்.

## வீரப்பர் பட்ட கடன்

நாடோறும் காலையிலும் மாலையிலும் வீரப்பர் திண்ணையில் அமர்ந்திருக்கும்பொழுது, அவரைக் காணும் முருகப்பரும் பிறரும் அவருக்கு வணக்கம் செலுத்திப் போதல் மரபு. வீரப்பருடைய கல்வியையும் சொல்லாற்றலையும் அறிந்த அத்தெருவினர் அவரிடம் மிக்க மரியாதையாக நடந்து கொண்டனர்; தத்தமக்கு வேண்டிய நல்லுரைகளையும் யோசனைகளையும் அவர்பால் கேட்டு வந்தனர். ஒருநாள் மாலை மூன்றுமணி இருக்கும். வேற்றூரான் ஒருவன் வீரப்பர் வீட்டு வாயிலில் நின்று உரக்கப் பேசினான். வீரப்பர் மூன்று ஆண்டுகட்கு முன்பு அவனிடம் ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி இருந்தார்; அக்கடன் கொடுக்கப் படவில்லை. அவர் எழுதிக் கொடுத்த பத்திரம்

காலமுடிவடைய இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. அதனால் அவ்வேற்றூரான் அவரிடம் வந்து அதனைப் புதுப்பிக்கும்படி நயமான முறையில் வேண்டினான். வீரப்பர் அதற்கு இணங்கவில்லை. அதனால் அம்மனிதன் வயிறு எரிந்து உரக்கப் பேசினான்; அவர்மீது வசைமாரி மொழிந்தான். அவன் பேசிய பேச்சுக்களில் இருந்து வீரப்பர் அவனை வஞ்சிக்க விரும்புகிறார் என்பதை அத்தெருவினர் அறிந்துகொண்டனர். இறுதியில் அவ்வேற்று ஊரான் நடுத்தெருவில் நின்று அழுதான்; பின்னர் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

## வீரப்பரின் வஞ்சகம்

அன்று மாலை ஐந்து மணி அளவில் முருகப்பர் தம் வீட்டிற்கு வந்தார். எதிர் வீட்டுத் திண்ணை மீது வீரப்பர் காணப்படவில்லை. முருகப்பர் மனைவி வீரப்பரைப் பற்றிய செய்தியை விரிவாக எடுத்துரைத்தாள். அதனைக் கேட்டதும் முருகப்பர் இடியோசை கேட்ட நாகம்போல் நடுங்கினார். "வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க மனமில்லாதது பெருங் குற்றம்; வாங்கினவரை ஏமாற்ற முயன்றது அதனினும் பெருங்குற்றம். வீரப்பர் இப்படி இருப்பார் என்பதை நான் கனவிலும் கருதவில்லை. அவரது நாணயக் குறைவு தெருவார் அறியும்படி ஆயிற்றே என்ற கவலையாற் போலும் அவர் திண்ணைமீது அமராமல் உள்ளே அடங்கியிருக்கின்றார்! சிறந்த படிப்பாளி, நிறைந்த ஒழுக்கம் உடையவர் என்று இவரைப் பெருமையாகக் கருதி இருந்தோம். வாங்கிய பணத்தை வஞ்சிக்கக் கூடியவர் என்பது இப்

பொழுதுதான் தெரிந்தது. இனி இவர் முகத்தில் விழித்தலும் தவறே,'' என்று வருத்தத்தோடு கூறினர்.

## மதிப்பிழந்த வீரப்பர்

வீரப்பரது முறைகெட்ட செயல் அவரைப் பெருமையாக நினைத்திருந்த நண்பர்களுக்கெல்லாம் மனவேதனையைத் தந்தது. அவர்கள் அவரிடம் சென்று உரையாடுவதை நிறுத்திவிட்டனர். வீரப்பரும் வெட்கம் உற்றுச் சின்னுட்கள் வரையில் வீட்டைவிட்டு வெளிவராமல் இருந்தார்; ஒரு வாரம் கழிந்த பின்பு வழக்கம்போல் திண்ணைமீது அமரத் தொடங்கினர். ஆனல் அவ்வழியே சென்ற முருகப்பரும் அவர் நண்பரும் முன்போல அவரைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை; பேசவும் இல்லை. அவர்கள் அவரை மிக இழிவாகக் கருதி அலட்சியம் செய்யலாயினர்.

## கண்ணன் தலைவாரும் காட்சி

முருகப்பரது மூத்தமகன் பதினறு வயதுடைய இளைஞன். அவன் பெயர் கண்ணன் என்பது. அவன் காலையில் சமையலுக்கு வேண்டும் காய்கறிகளை வாங்கக் கடைக்குப் போவது வழக்கம்; அங்ஙனம் போகுமுன் நிலைக் கண்ணடி முன் நின்று தலைக்கு வாசனை எண்ணெய் பூசி ஒழுங்காகத் தலையைச் சீவிக்கொள்ளுவான். இந்த முயற்சியில் கால் மணி நேரம் கழியும். முருகப்பர், “ கண்ணு! இன்னுமா கடைக்குப் போகவில்லை?'' என்று அதட்டுவார். “ இதோ போகிறேன்!'' என்று கூறிக்கொண்டே கண்

ணன் படியாத தன் தலைமயிரை அழுத்திச் சீவு வான். அந்த அழுத்தத்திஞல் தலையில் இருந்து இரண்டு மூன்று மயிர்கள் கீழே விழுந்துவிடும்.

கண்ணன் தன் தலைமயிரைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவன். அவன் திங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட கடை ஒன்றிலேயே சென்று தன் முடியைத் திருத்திக் கொள்வான்; உயர்ந்த வாசனை எண்ணெயைத் தான் தலையில் பூசுவான்; ஒரு நாளில் பலமுறை தலையை வாரிக்கொள்வான். சுருங்கக் கூறின், கண்ணை இமைகள் காப்பதுபோலக் கண்ணன் தன் தலைமயிரைக் காத்துவந்தான்.

## உதிர்ந்த மயிர்

இப்படி இருந்தும் தான் அவசரமாக அழுத்திச் சீவும்பொழுது உதிர்ந்த மயிர்களுக்காக அவன் கவலைப்படவில்லை; அவற்றிற்காக வருத்தம் தெரிவிக்கவில்லை. அவற்றை அலட்சியப்படுத்திஞன்; கடைக்குச் சென்று வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு வீடு திரும்பிஞன்.

## மயிர் உணர்த்திய கருத்து

முருகப்பர் நிலைக்கண்ணுடி அருகிற் சென்ற போது உதிர்ந்து கிடந்த மயிர்களைக் கண்டார். அவர் அவற்றை உற்று நோக்கிஞர்; "கண்ணன் இவற்றை அருமையாக வளர்த்தான். இவை அவன் தலையில் இருந்தவரை சீரும் சிறப்பும் பெற்றன; தலையில் இருந்து இழிந்தவுடன் சீரும் சிறப்பும் இழந்தன. தம்மைப் பேணி வளர்த்த கண்ணஞலேயே புறக்கணிக்கப்பட்டுக் கீழே கிடக்கின்றன.

........ஆ ! கண்ணனால் இவை மதிக்கப்பட்டமை போலவே நம்மால் வீரப்பர் மதிக்கப்பட்டார். இவை கண்ணப்பன் தலையில் இருந்த வரையில் சிறப்புற்று இருந்தன. இவை போலவே தம் ஒழுக்க நெறி தவறாத வரையில் வீரப்பர் நம்மால் உயர்வாக மதிக்கப்பட்டார். இவை தலையில் இருந்து இழிந்த பிறகு மதிப்பிழந்தமை போலவே வீரப்பரும் ஒழுக்க உயர்வில் இருந்து 'வஞ்சம் புரிதல்' என்னும் படிக்கு இறங்கிய பிறகு நம்மால் மதிக்கப்படாது ஒழிந்தார்.

### வள்ளுவர் அநுபவம்

"இவ்விரண்டு அநுபவங்களும் அறிவிற்கு விருந்தூட்டுவன. இவற்றைக் கண்கூடாகக் கண்ட பெரியார் திருவள்ளுவர் ஒருவரே. அதனாற்றான் அப்பொய்யா மொழிப் புலவர்,

> "தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை."

என்று இந்த இரண்டு அநுபவங்களையும் ஒரு குறளில் வைத்து ஓதினார் போலும்!" என்று தம்முள் எண்ணி வியந்தார்.

### நூல் அறிமுகம்

மக்களது வாழ்க்கை நலத்திற்குரிய இத்தகைய சீரிய கருத்துக்கள் பலவற்றைத் தெளிவாக உணர்த்தவல்லது திருக்குறள் ஒன்றே. இச்சீரிய நூல் எல்லா நாட்டு மக்களுக்கும் எக்கால வாழ்க்கைக்கும் பொருந்தத்தக்க கருத்துக்களைக் கொண்டிருப்பது. இத்தகைய சிறப்புக்களை வேறு நூல்களில் காணுதல் அருமை. அதனாற்றான் இத்தமிழ்

மறை பல இந்திய மொழிகளிலும் மேனுட்டு மொழி களிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இன்று பல நாட்டு அறிஞர்கள் திருக்குறளைப் படித்துப் படித்து அதிலுள்ள சீரிய கருத்துக்களைப் பாராட்டி மகிழ்கின்றனர். இச்சீரிய நூல் நந்தமிழில் செய்யப்பட்டது என்பதும், இதனைச் செய்தவர் திருவள்ளுவர் என்ற தமிழர் என்பதும், தமிழராக உள்ள நமக்குப் பெருமை தரத் தக்கவை அல்லவா ?

# 3. குடும்ப விளக்கு

## தேனப்பர் குடும்பம்

பொற்றெடி தேனப்பரை மணந்து இல்லறம் நடத்தத் தொடங்கி ஓராண்டு ஆகிவிட்டது. அவர்கள் குடும்பம் முள்ளூரில் அமைந்திருந்தது. தேனப்பர் அவ்வூரில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவரது குடும்பத்தினர் பல தலைமுறைகளாக அங்கே வாழ்ந்த காரணத்தால் அவருக்கு உறவினர் மிகப் பலர் இருந்தனர். தேனப்பரின் உடன் பிறந்தவர் நால்வர். நால்வரும் ஆடவரே. ஆதலால் குடும்பத்தின் சொத்து இவர் ஐவருக்கும் சிறிதளவே கிடைத்தது. ஐவரும் தனித் தனியாகக் குடும்பம் நடத்தினர். தேனப்பரின் குடும்பம் மிகச் சிறிய வருவாயிலேயே நிகழ வேண்டியதாயிற்று.

## பொற்றெடியின் பிறப்பு

பொற்றெடியின் திருமணம் நிகழ்ந்த வரலாறே ஒரு கதை போல் அமையும். அவளது பெற்றோர் மாவூரில் வாழ்ந்தனர். அவள் தந்தை மிகப் பெருஞ் செல்வர். அவருக்கு மாவூரில் அரண்மனை போன்ற வீடும், ஏவல் செய்ய ஏராளமான ஏவலர்களும், பல வேலி நன்செய் நிலங்களும் இருந்தன. பொற்றெடி அவருக்கு மூன்றாவது மகளாகப் பிறந்தாள். அவளது தாய் அமுதம்மையும் செவிலித் தாய்மார் பலரும் அவளைச் சீராட்டி வளர்த்தார்கள்.

## அன்பு அரும்பியது

பூங்கொடி வளர்வது போல், கவலையறியாமல் வளர்ந்த பொற்றெடி மங்கைப் பருவம் அடைந்

தாள். ஒரு நாள் அவள் தன் தோழியரோடு மாவூரின் புறத்தே உள்ள சோலைக்கு விளையாடச் சென்றாள். பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகில் நீலநிறத் தோகை விரித்தாடும் கோலமயிலையும், பால் பொழிவதென மேல் நின்று நிலவெறிக்கும் வெண் மதியையும், அலைவீசி இசை பாடும் கருங் கடலையும், மலையினின்று உருண்டோடும் நீரருவி யையும், இன்னும் எண்ணத் தொலையாத எழில்மிகு பொருள்களையும் படைத்து, அழகுக் களஞ்சிய மாக்கிய கைவல்ல கலைஞனாகிய படைப்புக் கடவு ளின் ஓவியக் கூடமே ஆங்கு வந்துவிட்டதோ என்று ஐயுறுமாறு மாவூர்ச் சோலையில் மலர்கள் வண்ண வண்ணமாகப் பூத்துக் குலுங்கின.

செல்வத்தைச் சேர்த்து வைத்துப் பிறர்க்கு ஈயாமல் வாழும் செல்வர்பாற் சென்று அவர் மயங் கும் வண்ணம் பேசி, அவரிடம் பொருள் பெறும் வஞ்சகரைப்போல், வண்டுகள் மலர்களை நாடி, இசைபாடி, அவற்றின் உள்ளே இருக்கும் தேனைப் பருகின. வஞ்சகர் உண்மையான நண்பரைப் போல நடித்து ஒரு செல்வரையண்டிப் பயன்பெற் றாலும், நீண்ட நாட்களுக்கு அவரிடம் நிலைத்திரா மல் வேறு செல்வரை நாடிப் போவதுபோல் அவ் வண்டுகளும் பல மலர்களை நாடிச் சென்றன.

நிறைந்த நூல்களைக் கற்றுணர்ந்த சான்றோர், ஒழுக்கம் என்னும் வரம்பிற்குள் அடங்கி, தெளிந்த அறிவோடு வாழ்வதைப் போலச் சோலையின் நடுவில் அழகிய துறைகள் அமைத்துக் கட்டப் பெற்ற பொய்கையில் தெளிந்த நீர் நிறைந்திருந் தது. மெல்ல வீசிய தென்றற் காற்று அந்நீரில் சிறு சிறு அலைகளை உண்டாக்கிற்று.

இவற்றையெல்லாம் கண்டு களித்த பொற்றொடி அங்கே மானெனத் துள்ளி விளையாடினாள். மாமரங்களில், இலைகளின் இடையே மறைந்து வாழ்ந்த குயில்கள் அவளது குரலைக் கேட்டுத் தங்களை யொத்துக் கூவும் குயில் ஒன்று பெண்ணுருவந் தாங்கி வந்திருப்பது கண்டு மருண்டன. மலர் களைப் பறித்த வண்ணம் நடந்த பொற்றொடி, ஒரு மல்லிகைப் பந்தலின்கீழ் ஆடவர் இருவர் உரை யாடுவதைக் கண்டு சுற்றுமுற்றும் பார்த்து மருண் டாள்.

மாவூருக்கு அலுவல் காரணமாக வந்திருந்த தேனப்பர் தம் நண்பருடன் அங்கு உரையாடிக் கொண்டிருந்தார். அவர் கண்கள் பொற்றொடியை நோக்கின. அவற்றில் துளும்பிய அன்பு பொற்றொடி யின் நெஞ்சத்தைக் கவர்ந்தது. நாணம் தலைதூக் கவே, அங்கிருந்து மீண்டு தோழியரிடம் வந்தாள்; உயிர்த் தோழியாகப் பழகும் ஒருத்தியைத் தனியே அழைத்துத் தன் உள்ளங் கவர்ந்த ஆடவரது பெயர், ஊர், குடும்பம் ஆகியவற்றை உசாவி யறிந் தாள்; மணந்தால் அவரையே மணப்பது என்று உறுதி கொண்டாள்.

### திருமணம்

பொற்றொடியின் உள்ளக் கருத்தைத் தோழி வாயிலாக அறிந்த அமுதம்மை, அதைத் தம் கண வருக்கு அறிவித்தார். மாவூரில் உள்ளோரிடம் தேனப்பரைப் பற்றி உசாவினார் பொற்றொடியின் தந்தை; மிக்க அறிவும், உயர்ந்த பண்பும், ஒழுக் கமும், அழகும் வாய்ந்த தேனப்பர் வறிய குடும் பத்தைச் சார்ந்தவர் என்பதை அறிந்தார்; செல்வ

மகளின் விருப்பத்தை நிறைவு செய்யவேண்டும் என்னும் எண்ணம் உடையவராயினும், தேனப்பரின் வறிய நிலையை நினைத்துத் தயங்கினர்; திருமணம் பற்றி வீட்டில் ஒன்றும் பேசாது நாள் பல கடத்தினர்; அந்நாட்களில் மகளின் நிலையை, அவளறியாமல் உற்று நோக்கி வந்தார். தந்தையின் மனத்தில் என்ன எண்ணம் உள்ளதோ என்றும், தன் உள்ளம் கவர்ந்தவரை மணக்க இயலாவிடின் யாது செய்வது என்றும் பலவாறு எண்ணி ஏங்கிய பொற்றெடி உடல் மெலிந்தாள். அவளது மெலிவு கண்ட தந்தையின் மனம் நெகிழ்ந்தது. வறுமை யிருப்பினும் அன்பு உள்ள இடத்தில் வாழ்வு அமையும் என்று துணிந்தவராய்த் தம் மகளுக்கும் தேனப்பருக்கும் மணமுடித்தார்.

## குடும்பப் பாங்கு

திருமணம் நிகழ்ந்து ஓராண்டு சென்றது. பொற்றெடியைத் தோளிலும் இடையிலும் தூக்கி வளர்த்த செவிலித் தாயருள் ஒருத்தி மகளின் மனை வளம் காண முள்ளூர்க்குச் சென்றுள்; தேனப்பரின் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கினள்; அவர் பொற்றெடியினிடத்துச் செலுத்தும் அன்பைக் கண்டாள்; பொற்றெடி வீட்டுப் பொருள்களை அழகுற வைத்துக்கொள்வதையும், குடும்பக் கடமைகளை ஒழுங்காகச் செய்வதையும், கணவருக்கு ஆற்றும் கடமைகளை அன்புடன் விரைவாக முடிப்பதையும் கண்டாள்; மாவூர் வீட்டில் ஒரு சிறு வேலைகூடச் செய்தறியாத தன் மகளா இவ்வாறு

ப்பாங்குறக் குடும்பம் நடத்துகிருள் என்று வியந்தூரள்.

**வறுமையிற் பொறுமை**

செவிலித்தாய் சென்றபோது தேனப்பர் மிக்க வறுமையுற்றிருந்தார். அன்ருட உணவுக்கே அவரது வீட்டில் பற்ருக்குறை உண்டாகியிருந்தது. தமது வறுமையைப்பற்றி அவர் யாரிடமும் சொல்வதில்லை. பொற்ருெடியும் அவ்வாறே. கணவரது வறுமையைத் தீர்க்கத் தந்தை வீட்டுச் செல்வத்தை நாடும் உள்ளம் அவளுக்கு ஒரு சிறிதும் இல்லை. மாவூர் அரண்மனையில் பாலும் பழமுமாக உண்டு செல்வமாக வளர்ந்த அவள், கணவர் வீட்டில் ஒரு வேளை இடையிட்டே உணவு உண்டாள். அதாவது காலையில் உண்டால் பகலில் உண்பதில்லை; பகலில் உண்டால் இரவில் உண்பதில்லை. கணவர்க்கு மட்டில் மூன்று வேளையும் உணவிட்டு வந்தாள். அவள் இதுபற்றித் தன்னை வளர்த்த செவிலித் தாயிடம் கூருது மறைத்தாள். ஆனல் செவிலியின் கண்கள் இவ்வுண்மையை எவ்வாருே கண்டறிந்து கண்ணீர் வடித்தன. மகளின் கற்பையும் பொறுமையையும் எண்ணிச் செவிலி வியந்தாள்; மாவூர்க்கு மீண்டாள்.

**இளமை விளையாட்டு**

அங்கே அமுதம்மை செவிலியின் வரவை எதிர்பார்த்து, மகளின் மனைவளம் பற்றிக் கேட்கும் ஆவலோடு இரண்டு நாட்களைக் கழித்தாள். செவிலி அமுதம்மையைக் கண்டு, முள்ளூரில் தான் கண்ட துன்ப நாடகத்தைச் சொல்லத் தொடங்

கிருள் : "அம்மையே, பொற்றெடி இளஞ் சிறுமி யாயிருந்தபோது, செவிலித் தாய்மார் அவளுக்கு ஊட்டுவதற்காகத் தேன் கலந்த பாலைப் பொன் வள்ளத்தில் ஏந்தி, அதை உண்ணுமாறு அவளை வேண்டுவர் ; அவள் மறுப்பாள் ; பூவைப் போன்ற நுனியை உடைய சிறு பிரம்பு ஒன்றை எடுத்து வந்து, அதை ஓங்கிக் கொண்டே, 'உண்பாயாக' என்று அச்சுறுத்துவர். பிரம்பைக் கண்டும் அவள் அஞ்சாமல், அவர்களை எப்படியாவது ஏமாற்றி, காலில் அணிந்த சிறு சிலம்பு கல்லெனை ஒலிக்க வீட்டைச் சுற்றி ஓடி, முற்றத்தில் அமைத்திருக் கும் பந்தர் வரை சென்று நிற்பாள். நரைத்த தலையை உடைய முதிய செவிலியர் அவளைப் பின் தொடர்ந்து ஓடமுடியாமல் ஓடிப் 'பாலை உண்க' என்று வேண்டுவர். 'ஊஹூம் மாட்டேன், போ' என்று இறுதிவரை பால் உண்ண மறுத்து, விளை யாட்டிலேயே நினைவாக இருப்பாள்.

"இவ்வாறு ஒரு சிறிதும் பசிக் கவலையின்றிச் செல்வமாக நம் வீட்டில் வளர்ந்த பொற்றெடி, கணவர் வீட்டில் வாழும் வகையைக் கேள். தன்னை மனைவியாகக் கொண்ட கணவரது குடும்பம் வறுமையுற்றது கண்டும் மனம் நோகாமல் பொறு மையுடன் கடமை செய்து வாழ்கிருள். வறுமை பொறுக்கலாற்ருமல், இங்கு வந்து, அறுசுவை உணவை உண்டு மகிழ அவள் விரும்பவில்லை. தந்தையின் வீட்டில் ஏராளமான செல்வம் இருந் தும் அதைக் கொண்டு கணவரின் வறுமையைத் தீர்க்கவோ, கணவரைப் பிரிந்து தான் மட்டும் இங்கு வந்திருக்கவோ அவள் கருதவில்லை ; ஆனல், ஓடுகின்ற நீரில் இடையிடையே மேடு

மேடாகப் படிந்திருக்கும் மணல் காரணமாக நீர் ஒரே ஓட்டமாக ஓடாமல் விட்டு விட்டு ஓடுவதுபோல் ஒரு வேளை விட்டு மறுவேளை உணவு உண்ணுகிருள்; குடும்பத்தில் நிறைந்த வறுமை இருந்தும் அதை வெளியே சொல்லாமல், அதனுல் வரும் துன்பம் அனைத்தையும் அகத்தே அடக்கிப் பொறுமையாக வாழ்ந்து வருகிருள்.

"அக்காட்சியைக் கண்டு என் மனம் பட்டபாடு சொல்லுந் தரமன்று. செவிலியர் கொடுத்த பாலைப் பருக மறுத்து ஓடிய, விளையாட்டுத் தனமுடைய வளாக இருந்த மகள் இவ்வாறு, வறுமையுற்ற குடும்பத்தைப் பழியின்றிப் பாங்குற நடத்தும் அறிவுத் திறமையும், துன்பத்தைப் பொறுத்து ஒழுகும் ஒழுக்கமும் எப்படிப் பெற்ருளோ? இது மிகவும் வியப்பை யளிக்கின்றது," என்று சொல்லி முடித்தாள்.

### குடும்ப விளக்கு

தாய் வீட்டார் கற்பிக்க முடியாத பல ஒழுக்கங் களைக் கணவன் வீட்டில் கற்று, கடல்போல் பெருகும் துன்பத்தையும் வெளிக்காட்டாது அடக்கிக் குடும்பம் நடத்தும் பெண்ணிற் பெருந் தக்கன யாவுள? அவளே பொறுமையின் திருவுருவம்; கற்புடைப் பெருந் தெய்வம்; குடும்பத்தின் ஒளி விளக்கு; கோதிலாக் குணக்குன்று. வாழ்க பெண்மை.

### நூல் அறிமுகம்

இக் கற்புடைத் தெய்வத்தின் வாழ்க்கையை நற்றிணை யென்னும் சங்க இலக்கியத்தில் 110-ஆம்

எண்ணுள்ள பாடலில் போதனுர் என்னும் புலவர் பெருந்தகை வடித்துக் காட்டுகிருர். சங்க காலத்து எட்டுத் தொகை நூல்களில் நற்றிணையும் ஒன்று. குறுந்தொகை அகநானூறு ஆகியவை போலவே இதுவும் தலைவன் தலைவி கூடி ஒழுகும் அன்பு வாழ்க்கையை அழகுற நவிலும் நூல். எட்டு முதல் பன்னிரண்டடி அளவுள்ள பாடல்கள் நானூற்றைத் தன்னகத்தே கொண்டது இந்நூல்; பல புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்டது. சங்க காலத் தமிழ்மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும், பழக்க வழக்க ஒழுக்கங்களையும் பிறவற்றையும் படம் பிடித்தாற்போல் காட்டும் இவ்வினிய நூல் யாவரும் ஓதி உணர்ந்து இன்புறத் தகுந்ததாகும்.

# 4. குருவிக் குடும்பம்

## இன்பக் குடும்பம்

அறிவாற்றல் நிரம்பப் பெற்ற கணவனும், கற்பும் பொற்பும் மிக்க மனைவியும், அமுத மழலை பேசும் குழந்தையுமாக அன்பென்னும் நெய் வார்த்து இன்பமென்னும் ஒளி விளக்கேற்றி அமைதியாக வாழ்ந்து வந்த குடும்பம் அது. கணவர் வெற்றி வேலர்; மனைவி கனிமொழி; குழந்தை பால்வண்ணன் தனது கள்ளமிலாச் சிரிப்பாலும் குழலைப் பழிக்கும் மழலையாலும் அவர்கள் உள்ளங்களுக்கு உவகை அளித்தான். பால்வண்ணன் பிறந்து, சில ஆண்டுகள் வரை வெற்றி வேலரது குடும்பம், அலைகள் அடங்கியிருக்கும் கடலிலே, இளங் காற்றினால் உந்தப்பட்டு மிதந்து வரும் ஓடம் போல அமைதியாக நடந்தது.

## செலவாற்றுமை

உள்நாட்டு வணிகராகிய அவர், திருமணத்திற்கு முன் வடநாடு சென்று, வாணிகஞ் செய்து ஈட்டிவந்த செல்வம் அனைத்தும் இரவலர்க்கு ஈவதிலும் இசைபட வாழ்வதிலும் செலவாகியது. பொருள் முட்டுப்பாடு சிறிது சிறிதாகத் தலைக் காட்டியது. இஃதறிந்த வெற்றிவேலர், மீண்டும் வடநாடு சென்று பொருள் ஈட்டி வர எண்ணினார். ஆனால், திருமணத்திற்கு முன்னர் எளிதாகத் துணிந்து பயணம் வைத்ததுபோல் இப்பொழுது செய்ய வியலவில்லை. அன்புடைய மனைவியையும் செல்வக் குழந்தையையும் பிரிய வேண்டும் என்னும்

எண்ணம் அவருள்ளத்தை வாட்டியது. ஒரு பகற் பொழுதும் பிரிந்தறியாத அவர்களைவிட்டு நெடு நாள் தனித்திருப்பது எவ்வாறு என எண்ணிப் பல நாள் தயங்கினார்; பயணம் வைப்பதுபற்றி ஒரு முடிவுக்கு வராமல் கவலையில் ஆழ்ந்தார். அவரது அறிவு, செல்வம் சேர்ப்பதன் இன்றியமை யாமையை அடிக்கடி நினைவூட்டியது; குடும்பத் தின் பெருமையையும், உறவினர்க்கு அவர் ஆற்ற வேண்டிய கடமையையும் எடுத்துக் காட்டியது. அவரது அன்புள்ளமோ, மனைவியின் அழகிய முகத்தையும், மகனது சிரிப்பையும் ஒருகால் நினைந்து, பிரிவு நேர்ந்தால் மனைவியின் கண்களில் நீர் ததும்புவதையும் நினைந்து வருந்தியது. இந்நிலையில் செயலற்றிருந்தார் வெற்றி வேலர்.

## செல்வச்சிறப்பு

ஆடவர்க்கு வினையே உயிர் போல்வதாகும். அவர் வினை செய்யாது வாளா இருப்பின், தம் குடும்பத்திற்கும் உறவினர்க்கும் உலகினர்க்கும் உற்ற கடமை செய்தவராகார். வாழ்விற்கு ஊதிய மாகக் கருதப்படும் ஈகையும் புகழும் செல்வம் இல்லையெனில் எவ்வாறு கைகூடும்? வினை செய் தாலன்றிச் செல்வம் எவ்வாறு சேரும்? இவ்வாறு எண்ணித் துணிந்த வெற்றிவேலர் வடநாட்டுப் பயணத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடித்தார். இங்ஙனம் அவரது அறிவுக்கும் உள் ளத்திற்கும் நிகழ்ந்த போரில், இறுதியில் அறிவே வென்றது.

## பிரியா விடை

பயணத்திற்கென குறிப்பிட்ட நாளில் வெற்றி வேலர் தம் ஆருயிர்த் தலைவியிடம் பிரியா விடை பெற முயன்றார். கனிமொழியின் உள்ளத்தில் துன்ப அலைகள் புரண்டன. கண்ணினுள் இருக்கும் கண்ணீர், கணவரோடு தானும் வழித்துணையாகச் செல்ல விழைவது போல் முந்திக்கொண்டு வெளிவர முயன்றது ; பொருளீட்டச் செல்லும் கணவரின் முன்னிலையில் கண்ணீர் விட்டுக் கலங்குதல் முறை யன்று ; ஆதலின், அதைப் பெருமுயற்சியோடு அடக்கிக் கொண்டாள் ; இடுப்பில் இருந்த குழந் தையை நோக்கிய வண்ணம், வாய் பேசாது விடை கொடுத்தாள். கடல்போற் பொங்கும் தனது துன் பத்தினும் கணவர் மேற்கொண்ட கடமையே பெரி தெனக் கனிமொழி கருதினாள் ; அவர் மனம் நோகாதவாறு தன் துன்பவெள்ளத்தை அணையிட் டுத் தடுத்தாள் ; அம்முயற்சியில் வாய்பேசாது விடை கொடுத்த அந்த அம்மையின் கற்பே கற்பு !

## பிரிவாற்றாமை

வெற்றிவேலர் சென்று நாட்கள் பல உருண் டோடின ; சில திங்கள் மறைந்தன. அவரது பிரிவு கனிமொழியின் மனத்தில் நாளுக்குநாள் மிக்க துன்பத்தை விளைவித்தது. அன்புடையாரது பிரிவு வன்புடையார் செய்யும் துன்பத்தினும் கொடியதன்றோ? மனத்திற்கினிய கொழுநரோடு மகிழ்ச்சியாகக் கழித்த நாட்கள் எல்லாம் அவளது நினைவுத்திரையில் எழுந்தன. வீட்டில் கணவர் பயன்படுத்திய பொருள்களைக் கண்ணுறும் போதும், தோட்டத்தில் உள்ள மரநிழல், புற்றரை,

சிறுமேடை இவற்றைப் பார்க்கும் போதும் வேலை களை மறந்து அசைவற்று நின்று விடுவது அவ ளுக்கு வழக்கமாகியது. தோட்டத்தில் அவளுடன் நிகழ்த்திய ஆடல்கள் ஒன்றன்பின் ஒன்ருக நினை விற்கு வந்து அவளது துன்பத்தை வளர்த்தன.

காலை முதல் மாலைவரை குடும்பக் கடமைகளுக் கிடையே கவலையை ஒரு சிறிது மறந்திருந்தாலும் மாலை நேரம் அவளை மிகவும் வாட்டியது. பகலவன் மலைவாயில் வீழ்ந்தவுடன் மேற்கு வானத்தில் செக்கர் நிறம் தோன்றியது; உலகைக் கவ்விக் கொள்வதற்குச் சமயம் பார்ப்பதுபோல், பதுங்கிப் பதுங்கி வந்தது இருள்; தென்றல் மெல்லென வீசியது; வயல்வெளிகளில் மேய்ந்துவிட்டுக் கழுத் தில் மணி அசைய, கொட்டிலில் 'அம்மா',வென் றழைத்துக்கொண்டு காத்திருக்கும் தம் கன்று களைப் பார்க்கும் ஆவல் கண்களில் தவழப் பசுக்கள் விரைந்து நடந்து வந்தன; பசுக்களை மேய்க்கும் கோவலர் குழல் ஊதி மகிழ்ந்தனர்; இவை யாவும் கனிமொழியின் வேதனையை மிகுதிப்படுத்தின.

## குருவிக் குடும்பம்

ஒருநாள் மாலை நேரத்தில் கனிமொழி, தன் வீட்டு வாயிலருகே அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந் திருந்தாள். அப்பொழுது, அந்த வீட்டு இறைப் பில் கூடு கட்டி வாழும் குருவிகள் இரண்டும் வெளியிலிருந்து சரேலெனப் பறந்து வந்தன; கூட்டினருகில் அமர்ந்து, ஓசையிட்டுக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தன; பின்னர் மெதுவாகக் கூட்டினுள் நுழைந்தன. கனிமொழி சிந்தனை யைச் சிறிதே நிறுத்தி அவற்றைக் கவனித்தாள்.

அவை இரண்டும் கணவனும் மனைவியும் போலும்! அதனால்தான் இணைபிரியாது ஓடியாடித் திரிந்தன. அவற்றின் சிறகுகள், பொய்கையிற் பூத்த ஆம்பல் மலர் காலையில் இதழ் குவிந்து வாடியிருப்பது போல் குவிந்திருந்தன. அவற்றைப் பார்த்த கனிமொழி, அவை நாள்தோறும் வாழும் வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாள்.

கதிரவன் தனது செங்கரத்தால் உலக அன்னையைத் துயிலெழுப்பு முன்பே, அக்குருவிகள் துயிலுணர்ந்து எழுந்துவிடும்; அவ்வாறு தாம் எழுந்ததைப் பிறர்க்குத் தெரிவித்துப் பெருமை கொள்வது போல் சிறகுகளை அடித்துக் கொண்டு, கீச்சுக் கீச்சென்று ஒலி எழுப்பும்; பின்பு, தமக்குரிய வினையை மேற்கொள்ளும் ஆடவரைப் போலச் சுறுசுறுப்பாகப் பறந்து வெளியே செல்லும்; அங்குமிங்கும் திரிந்து, வீட்டு முற்றங்களில் வெயிலில் உலர்வதற்காகப் பெண்கள் பரப்பியிருக்கும் தானியங்களின் பக்கலில் அமர்ந்து கொத்தித் தின்னும். நிலத்தில் தவ்வித்தவ்வி அமர்ந்து அவை தானியம் தின்னும் அழகே அழகு! பசியாறிய பிறகு, தெருக்களின் நடுவே அமைந்துள்ள பொதுவிடத்திற்கு அவை பறந்து செல்லும். ஆங்குப் பசுக்களின் சாணம் உலர்ந்து எருவாகி மண்ணோடு கலந்து கிடக்கும். அக்குருவிகள் எருக்களினூடே படிந்து, தம் அலகுகளை அவற்றில் தேய்த்தும், சிறகுகளை அவற்றில் புரட்டியும் நீண்டநேரம் விளையாடும்; பிறகு, வீட்டிறப்பில் கூட்டில் வாழும் குஞ்சுகளை நினைத்துக்கொண்டு, அவற்றுக்கெனத் தானியங்களை வாயிற் கவ்விக் கொண்டு விரைவாகப் பறந்து வரும்; கூட்டில் ஆவலோடு காத்திருக்கும் குஞ்சு

களின் பசியை அடக்கி அவற்ருேடு இனிதே துயிலும்.

இவ்வாறு நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சி கனிமொழியின் நினைவிற்கு வந்ததும் அவள் அக்குருவிகளின் வாழ்க்கையில் நெஞ்சைப் பறிகொடுத்தாள். குடும்பத் தலைமைபூண்ட குருவிகள் பொறுப்புணர்ச்சியுடன் விரைந்து தொழில் செய்து, பிள்ளைகளை வளர்த்து, அமைதியாக இன்புற்று வாழ்வது அவள் நெஞ்சிற் சிறிதே பொருமையையும் தூண்டியது என்னலாம். குஞ்சுகள்மீது குருவிகள் காட்டிய பரிவு அவள் உள்ளத்தை உருக்கியது.

குருவிக் குடும்பம் ஒழுங்காக நடந்தது. அங்கே ஈதல்வேண்டும் என்னும் எண்ணம் இல்லை; புகழ்தேடும் ஆசை இல்லை; நிறைந்த பொருள் சேர்க்கும் விருப்பம் இல்லை; உலகினர் மதிக்க வாழும் வேட்கை இல்லை. அதனுல் அங்கே அமைதி நிலவியது; இன்பம் பொங்கியது. ஆனுல், கனிமொழியின் குடும்பமோ, தலைவனின் நீண்டநாட் பிரிவினுல் துன்புற்றுக் கலங்கியது.

**கனிமொழியும் மங்கையும்**

இந்த வேறுபாட்டை எண்ணிக் கவலையில் மூழ்கியிருந்த கனிமொழி, தன் தோளை யாரோ தட்டுவதை உணர்ந்தாள்; திடுக்கிட்டுத் திரும்பினுள்; அண்டை வீட்டுத் தோழியான மங்கை நிற்பதைக் கண்டு, அன்புடன் வரவேற்ருள்; அவளறியாமல், மறைவாகத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆனுல், அது மங்கையின் கண்ணிற் படாமற் போகவில்லை. அவள் கனிமொழியோடு நெருங்கிப் பழகும் உயிர்த் தோழி; அவளது துன்

பங்களைத் தன் துன்பங்களாகக் கருதுபவள். வெற்றிவேலர் சென்றபின்பு, கனிமொழி நாளும் நாளும் மெலிவதைக் கண்டு அவள் கவலையுற்றாள்; கணவரின் பிரிவைத் தாங்கித் தாங்கிக் கனிமொழி யின் உள்ளம் ஒருநாள் வலிமை இழந்து விடவும் கூடும் என்று அஞ்சினாள். அன்று அவள் கண்ணீரை மறைவாகத் துடைப்பதைக் கண்டதும், ஆறுதல் கூறத் தொடங்கினாள்.

**செலவில் ஆறுதல்**

மங்கையை இடைமறித்துக் கனிமொழி பேசினாள்: "மங்கை, அவரது பிரிவை என்னால் தாங்க முடியாது என நீ கவலையுறுகிறாய். எங்கள் வீட்டில் ஒரு குருவிக் குடும்பம் இருக்கிறது. அது நடக்கும் அழகினைக் கேள்" என்று குருவிகளின் அன்றாட வாழ்க்கையைப்பற்றி அவளிடம் கூறினாள். கணவனும் மனைவியும் குழந்தைகளுமாக வாழும் அந்தக் குருவிக் குடும்பத்தின் அன்பை எடுத்துக் காட்டினாள். "மங்கை! இது போன்ற குருவிக் குடும்பம் என் கணவர் சென்று தங்கியிருக்கும் ஊரிலும் இல்லாமல் இராது. குருவிகளின் பரிவுநிறைந்த வாழ்க்கையைக் காணும்போது அவர் என்னையும் என் மகனையும் நினைத்துக் கொள்வார். காலையில் வெளியே சென்று, மாலைக்குள் திரும்பிவிடும் குருவிகளைப் பார்த்து, நெடுநாள் குடும்பத்தைப் பிரிந்திருக்கும் தம்மை நொந்து கொள்வார். குருவிகள் தம் குஞ்சுகளோடு கொஞ்சுவதை அவர் பார்த்தால், எங்கள் பால்வண்ணனின் பால்வடியும் முகம் அவர் நினைவிற்கு வரும்; குழந்தையை எப்பொழுது காண்போம் என்று ஏக்கங் கொள்வார். எங்களது

வேண்டுகோள் இன்றியே, எங்களை அவருக்கு நினைவூட்டும் தூதாக, ஆங்கு அந்தக் குருவிக் குடும்பம் இருக்கும்.

"இங்கு என்னை நாள்தோறும் நெருப்பிலிட்டாற் போல வாட்டிவரும் இந்தப் பொல்லாத மாலை நேரம் அங்கும் இல்லாதிருக்குமோ? உறுதியாக இருக்கும். நான் தனித்திருந்து வருந்துவதுபோல் அவரும் அயல்நாட்டிலே அளவளாவத் துணையின்றித் தனிமை நோயால் வருந்துவார். குருவிக் குடும்பமும், மாலை நேரமும், தனிமை நோயும் அவரை விரைவாக இங்கே அனுப்பிவிடும் என்ற துணிவு இப்பொழுது எனக்கு உண்டாகிவிட்டது. ஆதலால், துன்பம் மறந்து ஒருவாறு அமைதியாக இருக்கின்றேன்," என்று கூறினாள்.

குருவிக் குடும்பத்தால் கனிமொழியின் மனம் ஒருவகை ஆறுதல் பெறுவதை அறிந்த மங்கை மகிழ்ந்தாள்; அறிவில்லாத அஃறிணை உயிர்கள் கூட ஆறறிவு படைத்த மனிதர்க்குத் துன்பம் குறைக்கும் தோழராய், ஆறுதல் அளிக்கும் அரு மருந்தாய் விளங்குவதை எண்ணி வியப்புற்றாள்.

## நூல் அறிமுகம்

இக்காட்சி **குறுந்தொகை** என்னும் அரும் பெறற் சங்க இலக்கியத்தில் 46-ஆம் எண்ணுள்ள பாடலில் **மாமலாடன்** என்னும் புலவர் பெருமகனால் சொல்லோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. குறுந்தொகை என்பது, நற்றிணை முதலிய எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று; நான்கு முதல் எட்டடி வரை உள்ள குறுகிய பாடல்கள் நானூறு கொண்டது; ஆதலின் இது குறுந்தொகை எனப்

பெயர் பெற்றது. இஃது இல்வாழ்க்கை (அகப் பொருள்) பற்றிய செய்திகளையே கூறுவது. சங்க காலப் புலவர் பலர் பாடிய பாக்களே இதன்கண் இடம் பெற்றுள்ளன. இல்வாழ்க்கைச் செய்தி களும், சிறந்த பழமொழிகளும், தமிழர் வாழ்க்கை பற்றிய பல்வேறு குறிப்புக்களும், தமிழ் வேந்தர், வள்ளல்கள் முதலியோர் பற்றிய குறிப்புக்களும் இந்நூலில் ஆங்காங்கு அமைந்துள்ளன.

# 5. பைந்தமிழ்ப் பாவை

## மலைக் காட்சி

யாரோ இருவருடைய பேச்சுக்குரல் காற்றில் மிதந்து வந்தது. குரல்வந்த திக்கில் பூங்குன்றன் நடந்து சென்முன். மரங்கள் அடர்ந்த மலைநாட்டின் ஊரில் வீட்டு முற்றங்கள் அழகாகக் காட்சி யளித்தன. முற்றங்களுக்கு எதிரே ஆங்காங்கு உலாவிக்கொண்டிருந்த மான் குட்டிகளையும் யானைக் குட்டிகளையும் பூங்குன்றன் பார்த்து மகிழ்ந்துகொண்டே சென்முன். அவன் வாழ்ந்த மலையோடு அவன் ஏறிச் சென்ற மலையை ஒப்பிட்டது அவன் மனம். அங்கும் இங்கும் ஒரே மலைக்காட்சிதான் இருந்தது. ஆனுல் அவனை இங்கு இழுத்துவந்த பேராற்றல் ஒன்று இருப்பதாக அவன் உணர்ந்தான். அஃது என்ன பேராற்றல்? பூங்குன்றன் ஒரு வீட்டு முற்றத்தைத் தொலைவில் பார்த்தவண்ணம் நின்முன். அங்கிருந்துதான் இனிய பேச்சுக்குரல் வந்தது. ஒரு மலைநாட்டு மங்கை தனது தோழியுடன் பேசிக் கொண்டிருந்தாள். மலைநாட்டின் புள்ளொலியும் அருவியோசையும் பூங்குன்றனுக்கு இனிமை யளிக்கவில்லை; அந்தப் பெண்ணின் பேச்சொலியே அவனுக்கு இனிமையளித்தது. அவள் இனிய பேச்சே அவனை அங்கு இழுத்துவந்த பேராற்றல் போலும்!

## பேச்சுக் குரல்

"தோழி! வரவர நான் குழந்தையாகிறேனும்! வீட்டில் அம்மா சொல்லுகிமுர். எனக்கு மணப்

பருவம் நடக்கிறது என்பதை அம்மா அறிய வில்லை.''

''அம்மாவுக்கு உன்னைப்பற்றித் தெரிந்தது உனக்கு உன்னைப்பற்றி என்ன தெரியும்? பாவை, அறியாப்பாவை என்று அம்மா சொல்லுவது உண்மைதான்.''

''போதும் உன் குறும்பு! சிறுபிள்ளைப் பரு வத்திற்கும் மணப்பருவத்திற்கும் உள்ள வேறு பாடு தெரியாது, உனக்கும் அம்மாவுக்கும்.''

### பாவையும் கோதையும்

இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பூங்குன்றன் ஒரு மரநிழலில் மறைந்துகொண் டான். அப்போது பாவை என்னும் அவ்வீட்டுப் பெண் வீட்டுக்குள் ஓடிச்சென்று இரண்டு உலக்கை களை எடுத்துக்கொண்டு வந்தாள்; முற்றத்தில் குவித்திருந்த நெல்லைக் கோதைக்குச் சுட்டிக் காட்டி அதைக் குற்றலாம் என்று கூறினாள்.

''பாவை! வீட்டுவேலை செய்ய எப்போது கற்றுக்கொண்டாய்?'' என்று கோதை கேட்டாள்.

''பெண்ணாகப் பிறந்த நான் மணப்பருவத் தில் வீட்டுவேலை செய்து பழகத்தானே வேண் டும்?'' என்று பாவை நயமாகப் பதில் அளித்தாள்.

''எப்போது உனக்கு மணம்?'' என்று கோதை இடைமறித்துக் கேட்டாள்.

### வள்ளைப் பாட்டு

பாவை அதற்குப் பதில் கூறாமல், நெல்மணி களை உரலில் இட்டு, சந்தன மரத்தாலான உலக்கை யைக் கையில் எடுத்தாள். பாவையின் நாணத்தை

அறிந்த கோதை யானைக் கொம்பாலான உலக்கை யைக் கையில் எடுத்துக்கொண்டாள். இருவரும் நெல்லைக் குற்றத் தொடங்கினர். வள்ளைப்பாட்டு என்னும் உலக்கைப் பாட்டைப் பாடலாம் என்று கோதை சொன்னாள். யார்மேல் பாடுவது என்றாள் பாவை. முருகன்மீது வள்ளைப்பாட்டுப் பாட வேண்டும் என்று கோதை தெரிவித்தாள்.

## இருவகை உணர்ச்சி

ஆம்! கோதை! நீ சொல்வது சரி! முரு கனைப் பற்றிச் சிறு வயதில் நான் பல பாடல்கள் பாடியுள்ளேன். அந்த இளம்பருவத்தில் முருகன் என்றால் தெய்வவுணர்ச்சி என் மனத்துள் தோன் றும். முருகன் நமது மலைநாட்டுத் தெய்வமல்லவா? ஆனால் இப்போது......'', என்று சொல்லி நிறுத்தி னாள் பாவை.

"இப்போது முருகனுக்கு என்ன?''

"கோதை! இப்போது முருகன் என்றால் தெய்வவுணர்ச்சி எனக்குத் தோன்றுவதில்லை. தூய அன்புணர்ச்சியே தோன்றுகிறது.''

"யார்மீது இவ்வளவு அன்பு? யார் அந்தப் பெருந்தகை?''

"அவர்தாம் பூங்குன்றனார்.''

"அந்த மலைநாடனையே இன்று வள்ளைப் பாட்டில் பாடப்போகிறாயா! பாவை!''

"இல்லை! கோதை! முருகனைப் பாடுவது போல அவரைப் பாடுகிறேன்.''

**பூங்குன்றன் பெருமை**

இவ்வாறு சொல்லிக்கொண்டு, பாவை நெல் மணிகளை எடுத்துப் பாறையாகிய உரலில் இட்டாள். பின்னர்த் தன் தோழியுடன் மீண்டும் உரையாடத் தொடங்கினாள் :

"கோதை! நமது மலைநாடரின் மலைச்சிறப்பு உனக்குத் தெரியாது. அவரது மலையில், பாறையிலிருந்த கருங்குரங்கைப் பார்த்துப் பயந்து மான் குட்டிகள் மலைச் சரிவிலே ஏறி இறங்கி ஆடல் பயிலும்; மானின் காதுபோன்ற மூங்கில் முளையின் பாளை கீழே விழும்; புலியின் காலடிபோன்ற வாழைக்குலை தொங்கும். இத்தகைய நாட்டையுடைய பெருந்தகை, ஆற்றாதார்க்குத் தம் பொருளை வழங்கும் ஈகையுடையவர்; தம்மால் பொருள் வழங்க முடியாதபோது தம் உடலையே துறக்கும் பெருமை யுடையவர்."

கோதை அதைக்கேட்டுச் சிரித்துக்கொண்டிருந்தாள். அவள் சிரிப்புக்குக் காரணம் பாவைக்கு விளங்கவில்லை. 'ஏன் சிரிக்கிறாய்?' என்று அவள் தன் தோழியைக் கேட்டாள்.

"பாவை! இத்தகைய மலைநாடன், முருகனா பூங்குன்றனா என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது," என்று தோழி உரைத்தாள்.

அப்போது பாவை மீண்டும் தன் உள்ளத்தின் உணர்வுகளைத் தோழிக்குப் புலப்படுத்தினாள் :

"தோழி! நான் பாடும் மலைநாடர் பூங்குன்றனாரே! முருகனைப் பாடுவதுபோல அவரைப் பாடுவதில் எனக்குப் பேராவல்! எனது இளம் பருவத்தில் முருகன் ஒரு தெய்வம்; இப்போது முருகன் என் தலைவனுக்கு ஒப்பான தலைவன்."

மரநிழலில் மறைந்திருந்த பூங்குன்றன், தன் எழிற்பாவை தன்னிடம் கொண்டிருந்த அன்பை நினைந்து மகிழ்ந்தான் ; இனியும் அங்கு இருக்கக் கூடாது என்று தான்வந்த வழியில் திரும்பத் தொடங்கினான். காற்றில் மிதந்துவந்த வள்ளைப் பாட்டின் ஒலி அவன் செவிகளைக் குளிரவைத்தது.

*　　*　　*

## மலைநாட்டுச் சமூகம்

பூங்குன்றன், பாவையின் மலைநாட்டிற்கு வருவதை ஊரார் பலர் அறிந்தனர் ; பாவையின் வீட்டாரும் அச்செய்தியைக் கேள்வியுற்றனர். பூங்குன்றனும் பாவையும் சந்திக்க இயலாத துன்ப நிலை ஏற்பட்டது. பாவை வருந்தி உடல் மெலிந் தாள். பாவையின் தாய் தன் மகளுக்குச் சித்தம் மாறிவிட்டது என்று நினைத்தாள். அதற்காக வேலனைக் கூப்பிட்டு வெறியாட்டு நிகழ்த்த விரும் பினாள். கோதைக்கு இச்செய்தி தெரிய வந்தது. அவள் பாவையிடம் இதனை உணர்த்தினாள். பாவை வெறியாட்டை நகையாடினாள் ; தாயின் மூடப்பழக்கத்தைச் சொல்லிச் சிரித்தாள். மலை நாட்டுச் சமூகத்தில் மூத்தவர் இட்டதே சட்டம். சமூகத்தின் பழக்கவழக்கங்கள் முறைதவறி நடப் பதை வீட்டுக்கு மூத்தவர் விரும்புவதில்லை. எனவே பெண்ணொருத்தியின் நடத்தையில் மாறுதல் ஏற் பட்டதாக அவர்கள் அறிந்தால், வெறியாட்டு நிகழ்த்தித் தெய்வத்திடம் குறிகேட்பது வழக்கம். பாவையின் தாய் அந்த மலைநாட்டுச் சமூகத்தில் நான்கு பேர் கூடிப் போற்றும் நற்றமிழ்க் குலக் கொடி. அவள் பேச்சு, சமூகத்தார் நெஞ்சில்

திருகாணிபோலப் பதிந்தது. ஆனால் தன் மகள் பூாவைக்கு அது நெஞ்சில் இட்ட நெருப்பாகச் சுட்டது என்பதைத் தாய் எண்ணிப் பார்க்கவில்லை.

**வேலன் வெறியாட்டு**

ஒரு நல்ல நாளில் பாவையின் வீட்டு முற்றத்தில் வேலன் வந்து நின்றான். வேலனை விருந்தாக வரவேற்றாள் வீட்டுத் தலைவி. சிறிது நேரத்திற்குள் அகிற்புகை முற்றமெங்கும் மணங் கமழ்ந்தது. முற்றத்தின் எதிரே மரநிழலில் மறைந்திருந்த பூங்குன்றன் மூக்கிலும் அகிற்புகை நுழைந்தது. பூங்குன்றன் மனம் வெதும்பியது. கவலையுற்ற அவன் நெஞ்சில் இருமல் இடர்விளைத்தது. வேலன் வெறியாடினான். உடுக்கையின் ஒலி பக்கத்து வீட்டுப் பசுங்கன்றுகளை மருளச் செய்தது.

**பாவையின் வாட்டம்**

வீட்டுத் தாழ்வாரத்தில் பாவை மனங்குன்றி உட்கார்ந்திருந்தாள். கோதையின் பாடு சொல்லி முடியாது. பாவைக்கும் அவள் பரிந்து பேச வேண்டும்; நற்றாய்க்கும் நலந்தேடித் தரவேண்டும்; ஊராரை உபசரித்து வீட்டில் இருத்தவேண்டும். யாழிசை போன்ற இனிய உரையாடலைப் பாவையிடம் பேசும் கோதை ஏனோ முகவாட்டம் உற்றிருந்தாள். பாவை தனது அழகுக் கண்களைப் பூங்குன்றன் நின்ற மரநிழலின் திசையில் திருப்பிய போது, கோதை அவளிடம், "அங்கே உற்றுப் பார்க்காதே!" என்று கடிந்துகொண்டாள். நரம்பு அறுந்து இசைகெட்ட யாழ்போல் இருந்த தோழி

கோதையும், கைவல்ல கலைஞன் செய்த மட்பாவை உடைந்து தனது உயிர்ப்புக் குன்றியதுபோல் இருந்த தலைவி பாவையும் வேலனது வெறியாட்டில் மனம் பற்றுமல் துயருற்றனர்.

## பாவையின் வருத்தம்

"அதோ! முருகன் வந்திறங்கினான், பார்! வேலன் ஏதேதோ வாய் பிதற்றுகிறான்; வலிப்புக் கண்டவன் போலத் துடிக்கிறான்; அவன் உடுக்கை வீச்சும், துடுக்குப் பேச்சும், மிடுக்குப் பார்வையும் பிடிக்கவில்லை எனக்கு; வேல் முருகனுக்கு வெறி பிடிப்பது என்றால் இதுதான் போலும்!" என்று பாவை வருத்தமும் சினமும் தோன்றக் கூறினாள்.

அவ்வேளை, பாவையின் தாய் தாழ்வாரத்தைப் பார்த்தாள். உடனே கோதை, "என்ன பாவை! முருகனைப் பழி தூற்றுகிறாயே!" என்று பாவையிடம் கடிந்துரைத்தாள்.

பாவைக்குக் கோதையின் இரக்கவுள்ளம் தெரியும். இருதலைக் கொள்ளியாக அவள் இடர்ப்படுவதை நன்கு உணர்ந்திருந்தாள். அவள் மனம் வெறியாடும் வேலனைப் பழித்தது; அந்த முருக வழிபாட்டையே பகைத்தது.

"இவனா வெற்றிவேல் முருகன்! இல்லை; வெறியன்," என்று பாவை பலவாறு கடுஞ் சொற்களைப் பொழிந்தாள்.

## பாவையின் பண்பு

வெறியாட்டு இன்னும் முற்றுப் பெறாத வேளையில் பூங்குன்றன் எழுந்து புறப்படலானான். அதைக் கண்ட தோழி கோதை ஒருவரும் அறியாத

வாறு விரைந்து சென்று, வீட்டில் நடந்த வெறி யாட்டு நிகழ்ச்சியையும், பாவை முருகனைக் கூறிய பழிப்புரையையும் எடுத்துக் கூறினாள். விரைவில் தோழியிடம் விடை பெற்ற பூங்குன்றன் மலை நாட்டு வழியில் நடந்தவாறே சிந்திக்கத் தொடங் கினான். பாவை தன் குழந்தைப் பருவத்தில் முருகன்மீது பாட்டுப் பாடி மகிழ்ந்தாள்; மணப் பருவத்தில் முருகனை யொத்த தலைவனை முருக னோடு ஒப்பிட்டுப் பேருவகை பூத்தாள்; ஆனால் மீண்டும் முருகனுக்குப் பெருமை தராமல் பேசி னாள். தெய்வத்தின் நிலையில் வைத்த முருகனை ஒரு மானிடத் தலைவனாக்கிப் பின்னர் அவனை ஒரு வெறியனாக்கிய பாவையின் மனத்தியல்பை அவன் எண்ணினான். பெண்ணின் குழந்தைப் பருவம் உலகில் இல்லாத அதிசயத்தைக் கண்டால் வியப் படையச் செய்யும்; பெண்ணின் மணப்பருவம் தான் மணக்க விரும்பும் தலைவனிடம் இல்லாத அதிசயத்தை உலகில் எங்குமே காணாது. தெய் வத்தின் அதிசயப் பெருமை கூடத் தலைவனது பெருமைக்கு முன்னால் நிற்க முடியாது என்று பூங்குன்றன் தன்னுள் கூறிக்கொண்டான்.

* * *

### புதுவாழ்வு

பாவையின் வீட்டில் வெறியாட்டாலும் நல்ல பலன் ஏற்படவில்லை. துள்ளித் திரியும் பருவத்தி லிருந்து அந்த வீட்டில் வளர்ந்த பாவைக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. பூங்குன்றனது மலை நாடே அவள் கனவிலும் நனவிலும் இடம் பெற்றது. பூங்குன்றனோடு வாழவேண்டும் என்ற

வேட்கை கொழுந்துவிட்டு எரிந்தது. தோழி கோதையின் துணையிருக்கும் போது அவளுக்குக் குறை ஏது? ஒரு நாள் பூங்குன்றன் பாவையை அழைத்துக்கொண்டு தனது மலை நாட்டிற்குச் சென்றான். அங்கே அவர்கள் புதுவாழ்வைத் தொடங்கினர். பாவையின் வீட்டாரும் மலைநாட்டாரும் பூங்குன்றனைப் பழி தூற்றினர்; பாவை பண்பிலாள் என்று சொல்லி அரற்றினர்.

## பிரிவு

பூங்குன்றன்-பாவை வாழ்க்கையில் பிரிவே ஏற்படவில்லை. ஆனால் ஒருநாள் வேற்றிடத்திற்குச் சென்று பொருள் தேடி வருவதாகப் பூங்குன்றன் பாவையிடம் கூறினான். அது கேட்ட பாவைக்கு உள்ளம் தளர்ந்தது. முடிவில் பூங்குன்றன் தன் கடமைமேற் சென்றான். அவ்வாறு சென்றவன் நெடுநாட் கழித்தும் வாராமையால் பாவை மிகவும் வருந்தினாள்.

## தெய்வந்தொழாள்

பாவையின் வருத்தத்தைக் கண்ட கோதை, "வருந்தாதே பாவை! தலைவன் வருகைக்காக ஞாயிற்றுத் தேவனைக் கும்பிட்டு வேண்டிக்கொள்; வருணனை வணங்கிக் கேள்; காற்றுச் செல்வனைப் போற்றி வழிபடு. நாம் போவோம், வா," என்று சொல்லிக் கூப்பிட்டாள்.

பாவைக்குக் கோதையின் பேச்சு வெற்றுரையாக இருந்தது. ஞாயிற்றையும், மழையையும், காற்றையும் தெய்வங்களாகக் கும்பிடுதல் தனக்குப்

பண்பன்று என்று அவள் நினைத்தாள்; எனவே தோதையிடம் அவள் கூறினாள்:

"தோழி! என் தலைவனை அல்லாமல் வேறொரு தெய்வத்தை நான் வழிபடமாட்டேன். வருணனே ஆயினும் முருகனே ஆயினும் என் தலைவனுக்கு ஒப்பானவன் யாருமில்லை. இத் தெய்வங்களை வழி படுதல் என் கற்புக்கு இயைவதோ?"

## பூங்குன்றன் வருகை

அதன்பின் கோதையால் ஒன்றும் பேச முடிய வில்லை. குழந்தைப் பருவத்தில் தெய்வ நினைவில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த பாவையா அப்படிப் பேசினாள் என்று அவள் வியப்படைந் தாள். சில திங்கள் கழித்துப் பூங்குன்றன் வீடு திரும்பினான். பாவையின் உள்ளம் தழைத்தது; உயிர் தளிர்த்தது. பிரிவுக் காலத்தில் பாவை செய்தனவற்றைக் கோதை தலைவனிடம் முறை யிட்டாள்; ஞாயிற்றுத் தேவனையும், வருணனையும், காற்றுச் செல்வனையும் கும்பிட மறுத்த பாவையின் வியப்பான மனப்போக்கை எடுத்துரைத்தாள். பூங்குன்றன் பாவையின் மனத்தியல்பைத் தன் னுள் பாராட்டினான்; தமிழ்ப் பெண்ணின் கற்பு மேன்மையை எண்ணி மகிழ்ந்தான்.

## நூல் அறிமுகம்

பாவை தமிழ் நாட்டுப் பெண்; இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பாவை வாழ்ந்த வரலாற்றை நல்லந்துவனார் என்ற நற்றமிழ்ப் புலவர் கலித்தொகை என்னும் நூலில் பாலைக் கலி என்ற பகுதியில் 16-ஆம் பாட்டில் நமக்குக்

கூறுகிறார். சிறு வயதில் தெய்வத்தைப் பெருஞ் சக்தியாக நினைத்துத் தொழுது, மணப்பருவத்தில் தனது அன்புடைய தலைவனைத் தெய்வத்திற்கு ஒப்பாக வைத்து, பின்னர்த் தலைவனது பெருமையே பெருமை என்று நினைத்துப் போற்றி, மணவாழ்க்கையில் தெய்வந்தொழாது கணவனைப் பேணும் தமிழ்ப் பெண்டிரின் பண்பாட்டைக் கலித்தொகையின் பல பாடல்கள் நமக்கு இன்றும் யாழிசையின் பண்போடு பாடுகின்றன.

# 6. நிலாப் பேச்சு

## தமிழன் திருமணம்

அன்று திங்கள் உரோகிணியுடன் கூடிய நன்னாள். அந்த நன்னாளில் தான் தமிழ் மக்கள் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வந்தனர் என்பதை நன்கு அறிந்த நற்சேந்தன் குடும்பத்தாரும், பூங்கொடியின் குடும்பத்தாரும் அந்நாளையே திருமண நாளாகக் குறித்தனர். நற்சேந்தன் காளைப் பருவத்தினன்; வீரஞ் செறிந்த தோளினன்; பூங்கொடி தனது பெயருக்கு ஏற்ப மெல்லியல்; புன்னகை பூத்துக் குலுங்கும் பண்பாடு மிக்கவள். அவரிருவரும் ஒருவரையொருவர் தாமே கண்டு அன்பு கொண்டனர். ஒத்த பருவமும், ஒத்த உள்ளமும் வாய்ந்த அவர்களது அன்பு நிறைவைக் கண்ட பெற்றோரும் உற்றோரும் விரைந்து மணத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

திருமண நாளில் உழுந்தினால் செய்த களியும் சோறும் படைக்கப்பட்டன; மணப்பந்தலின் கீழே புதுமணல் பரப்பப்பட்டது; குத்து விளக்குகள் சுடர்விட்டு ஒளிர்ந்தன. வைகறைப் போதில், தலையில் குடங்களையும் பெரிய பாத்திரங்களையும் ஏந்திக்கொண்டு முதிய பெண்டிர் வந்தனர்; குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசியர் நால்வர் மணமகளை நீராட்டினர்; நெல்மணிகளைத் தூவினர். இவ்வாறு திருமணம் முடிந்தவுடன் சுற்றத்தார் பலருங்கூடி மணமகள் பூங்கொடியைச், "சிறந்த இல்லக்கிழத்தி ஆவாயாக!" என்று வாழ்த்தி, மண

மக்களைத் தனி மனையில் புதுவாழ்வு நடத்துமாறு செய்தனர்.

* * *

## நாம் பிரியோம்

மண வாழ்க்கையில் மகிழ்ந்த சேந்தனும் பூங்கொடியும் ஒரு நாள் பழநிமலைக்குச் சென்றனர். பழநிமலையில் முருகனது அழகுச் சிலை கண்களுக்கு விருந்தாக அமைந்தது. அங்குள்ள முருகன் கோவிலில் சிற்பியர் பலர் பல சிலைகளைச் செதுக்கிக் கொண்டிருந்ததைச் சேந்தன் பூங்கொடிக்குக் காட்டிக் கொண்டு வந்தான்.

அங்கொரு கலைஞன் அரக்கையும் கல்லையும் கூட்டிச் சாணை பிடித்துக் கொண்டிருந்தான். பூங்கொடி, "இந்தச் சாணையின் இயல்பு என்ன?" என்று சேந்தனிடம் கேட்டாள். அதைக் கேட்ட சிற்பி, "ஐயா! அரக்கையும் கல்லையும் கூட்டிச் செய்த இந்தச் சாணை மிக்க உறுதியானது; இதனைப் பிரிக்க முடியாது!" என்று சேந்தனிடம் பதிலிறுத்தான். பூங்கொடி அக்காட்சியை வியப்போடு பார்த்தாள். அப்போது சேந்தன் தன் மனைவியிடம், "பூங்கொடி! அரக்கும் கல்லும் கூட்டிச் செய்த சாணையைப் போல நாம் என்றும் பிரியாது வாழ்வோம்," என்று அன்பு ததும்பக் கூறினான். பூங்கொடியின் உள்ளம் எல்லையற்ற மகிழ்ச்சி எய்தியது.

* * *

## போருக்காகப் பிரிவு

பூங்கொடியின் நினைவில் திருமணக் காட்சியும், பழநிமலைக் காட்சியும் என்றும் நீங்கா நிலை

ம்மையில் இடம் பெற்றன. ஓராண்டு கழிந்தபின்பு அவள் ஒரு புதல்வனைப் பெற்றெடுத்தாள்; அவனைச் • சீராட்டி வளர்த்து வந்தாள். ஒருநாள் சேந்தன் அவளிடம் திடுக்கிடும் செய்தியைக் கூறினான்; பழநிமலையில் 'நாம் பிரியோம்' என்று கூறியவன், "போருக்காகப் பிரிந்து செல்லுகிறேன்!" என்று கூறினான். பூங்கொடிக்குப் பிரிவை நினைத்துப் பார்க்கவும் இயலவில்லை. சேந்தன், "இது நமது அரசனது ஆணையல்லவா? நாட்டுக் கடமைதானே எனது போர்க் கடமை! சென்று வருகிறேன்! பூங்கொடி!" என்று விடை கேட்டான். பூங்கொடி, "கார்காலத்தில் மீண்டும் வருவீர்களல்லவா?" என்று சொல்லி, விடை கொடுத்து அனுப்பினாள்.

போருக்காகச் சென்ற சேந்தன் கார்காலம் தொடங்கிய பின்னரும் வரவில்லை. அவன் வழி மேல் விழிவைத்த பூங்கொடி பிரிவாற்றுமையால் வருந்தியிருக்கிறாள். சேந்தன் எங்கே? அவன் இன்னும் ஏன் வரவில்லை?

* * *

### வெற்றியோடு மீளல்

அதோ! அந்தப் பரந்த வெளியை அடுத்த பாதையில் ஒரு தேர் செல்லுகின்றது. அத்தேரில் ஒரு கட்டிளங்காளை வீற்றிருக்கிறான். அவன் முகத்தில் வீரத்தோற்றமும் வெற்றிப் பெருமிதமும் விளங்குகின்றன. பாதையின் இருபுறமும் வீரப் படைமறவர் வீறுநடையுடன் போர்க்களத்தினின்று வருகின்றனர்; வெற்றிபெற்ற தமது மன்னனை வாழ்த்தி முழக்கமிடுகின்றனர். "பகை

வரை ஒழித்தோம்; பகைவர் செல்வத்தைக் கப்ப மாகப் பெற்றோம்,'' என்று வீரர் முழக்கும் கூக் குரலைத் தேரூர்ந்து செல்லும் சேனைத் தலைவன் கேட்டு மகிழ்கிறான். அவனது போர் நெஞ்சம் பூரிப்புக் கொள்ளுகின்றது; ஆரவாரம் எழுப்பு கின்றது. அச் சேனைத்தலைவன் யார்? ஆம்! அவன் சேந்தன்தான்! போர் முடிந்து பூங்கொடி யைக் காண மீண்டும் வருகின்றான்.

'' தலைவ! மேல்வானத்தில் மழைமேகம் குவிந் துள்ளது. கார்காலத்தின் மாலை நேரத் தூறல் பெய்யத் தொடங்குகிறது,'' என்று தேர்ப்பாகன் தலைவன் சேந்தனிடம் கூறுகிறான்.

'' தேர்ப்பாக! உனது தேர் இங்குமங்கும் ஏன் சாய்கின்றது? நான் விரைந்து வீடு செல்ல வேண்டும். இன்னும் விரைவாகத் தேரைச் செலுத்து!'' என்று சேந்தன் பாகனுக்குக் கட் டளையிடுகிறான்.

**மனமாற்றம்**

சீரான ஓவியம் போன்ற அந்தப் பாதை சேறாகக் காட்சியளிக்கிறது. சேற்றில் தேர் உருளை கள் அழுந்துகின்றன. தேரின் புற அலங்காரம் மழையில் நனைகின்றது. பாகன் தேரை விரை வாகச் செலுத்துகிறான். சேந்தனது ஆரவாரப் போர் நெஞ்சம் இப்போது கார்காலத்து மழைக் காட்சியில் ஈடுபடுகின்றது. முன்னர் இருந்த ஆரவாரம் அவன் நெஞ்சில் இப்போது இல்லை. கார்காலத்தின் காட்சி அவன் நெஞ்சில் வீட்டு நினைவை எழுப்புகிறது. வீட்டில் தன் மனைவி யிடமும் புதல்வனிடமும், '' எப்போது போர்

முடியுமோ அப்போதே காணவருகிறேன்" என்று அவன் சொல்லிவந்திருக்கிருன். போர் புகைந்த நெஞ்சம் அன்புபொலிந்த நெஞ்சமாக மாறுவதை அவன் தன்னுள் கண்டு வியப்படைகிருன்.

## காட்சியும் கருத்தும்

வளைந்துவளைந்து செல்லும் பாதை ஊரை நெருங்கி வருகின்றது. ஆங்காங்கே சிற்சில வீடுகள் தோன்றுகின்றன. அவ்வீடுகளின் முற்றங்களின் முன்னிலையில் மல்லிகை மொட்டுகள் தலை காட்டுகின்றன. செக்கர் ஒளிபடர்ந்த மேற்கு வானத்தில் மெல்லிய இருள்திரை மூடுகின்றது. அவ்வேளை, பாதையின் இருபுறமும் மேய்ச்சலுக்குப் போய்த் திரும்புகின்ற பசுக்களைச் சேந்தன் பார்க்கிருன். கன்றுகள் பசுக்களைத் தொடர்ந்து வருகின்றன. தாய்ப் பசுக்கள் தமது கனைக்கின்ற குரலோடு கன்றுகளைப் பார்த்து மடியில் பால் சுரக்கின்றன. இந்த அன்புக் காட்சியைக் காணுகின்ற படைத்தலைவனது நெஞ்சம், கற்பனைச் சிறகடித்துத் தனது வீட்டை நோக்கிப் பறந்து செல்லுகின்றது. பாதையில் பசுக்களை மேய்த்துக் கொண்டு செல்லும் இடையர்கள் தம் கைகளில் கோலும் புல்லாங்குழலும் வைத்திருக்கின்றனர். இலை தழைகள் பறிப்பதற்காகச் சிறு துரட்டிகளும் அவர்களிடத்தில் இருக்கின்றன. புல்லாங்குழலின் ஓசையையும், பசுக்களின் கழுத்துமணி யோசையையும் கேட்ட சேந்தன் தனது வீட்டைப்பற்றிச் சிந்திக்கிருன்.

சேந்தனுக்கு வயது இருபத்தைந்து இன்னும் முடியவில்லை. தன் மனைவியும், ஒரு மகனும் வாழ்

கின்ற குடும்பத்தில் அவன் தன்னுளத்தை வைத்திருக்கிறான். அவனிடம் நெஞ்சத்தின் இருவகைக் கூறுகள் புலப்படுகின்றன. அவனது ஒரு நெஞ்சம் போரை நாடுவதை அவன் கண்டான்; அவனது மற்றொரு நெஞ்சம் வீட்டில் தன் குடும்பத்தை நாடுவதை இப்போது அவன் காண்கிறான். போர்க்களத்தில் தனது அரசனது பெருமையைக் காக்கும்பொருட்டு அவன் தனது கடமையை ஆற்றத் தலைப்பட்டான்; அதற்காகத் தனது போர் நினைவை அவன் துணையாகக்கொண்டான். இப்போது வீட்டில் தன் இல்லறத்தைக் காக்கும் பொருட்டு அவன் வீட்டுக்குச் செல்லுகிறான். அதற்காகத் தனது குடும்ப நினைவை அவன் துணையாகக் கொள்கிறான். கடமை பூண்ட போர் நினைவும் அன்புபூண்ட குடும்ப நினைவும் ஒரே நெஞ்சின் இரண்டு பயிர்களாக அவனுக்குத் தோன்றுகின்றன.

## நிலாவை அழைத்தல்

இப்போது வீட்டில் தன் புதல்வனுடன் மனைவி எவ்வாறு பொழுது போக்கியிருப்பாள் என்று அவன் உள்ளம் சிந்தனை செய்கின்றது. அந்த இரவில் புதல்வன் தூங்கியிருக்கமாட்டான்; பூங்கொடி அவனைத் தூங்கவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறாள். தன் புதல்வனது அழுகையை நிறுத்தும் பொருட்டுப் பல ஆறுதல் மொழிகள் சொல்லிக்கொண்டிருக்கிறாள். "எங்கே அப்பா! அப்பா இல்லையென்றால் எனக்கு அம்மா வேண்டாம் போ!" என்று அச்சிறுவன் சொல்லி அழுகிறான். அப்பாவை விரும்பும் மகனிடத்தில்

வாவென்று நிலவை அவள் அழைக்கிருள். 'நிலா! நிலா! ஓடி வா!' என்று அவள் சொல்லி அழைக்கலாம்; நிலவுக்குப் புகழ்ச்சிமொழி கூறி அழைத்தால் அது வருவது திண்ணம் என்பது அவள் எண்ணம். எனவே, 'முகிழ்க்கின்ற வெண்ணிலாவே! ஒளிதிகழும் குறையாத் திங்களே! என் மகனை நினைந்து இங்கே வா!'' என்று பூங்கொடி அன்போடு நிலவைக் கூப்பிடுகிருள். இவ்வாறு சொல்லியபடி அவள் கண்களைச் சிமிட்டுகிருள்; கைவிரலை நீட்டி நிலவை அழைக்கிருள்.

### பூங்கொடி மனநிலை

தனது புதல்வனை அமைதிப்படுத்தும் அவளுள்ளும் அமைதியோடு இல்லை. பூங்கொடிக்கும் துயரம் உண்டு. ஆனால் தன் துயரத்தை அவள் மறைத்துக்கொள்ளுகிருள். புதல்வனது வருத்தத்தை ஆற்ற முற்படுகின்ற பூங்கொடியின் நெஞ்சம் தனது தலைவனது பிரிவாற்ருமையை நினைந்து வருந்துகிறது. இவ்வாறு வருந்துவது பூங்கொடியின் ஒரு நெஞ்சம்; மற்ருெரு நெஞ்சம் அந்த ஆவலையும் துயரையும் அடக்கித் தனது புதல்வனது ஆவலை நிலாப்பேச்சில் திரும்புகின்றது.

### நாகரிகக் குடும்பம்

குழந்தையுள்ளம் மிக மெல்லியதன்ருே? குழந்தையின் உளவியலை அறிந்து வாழ்வது தாயின் கடமையன்ருே? பூங்கொடி நாகரிகம் வாய்ந்த பெண்; தன் குழந்தையைப் பண்போடு வளர்க்கிருள். இக்காலத்தில் சில குடும்பங்களில் குழந்தைகளைக் கொடிய முறையில் நடத்துகின்றனர்.

அப்பா தமது அலுவலகத்திற்குச் செல்லப் புறப் பட்டால், வீட்டுக் குழந்தை, "எங்கே அப்பா! போகிருய்!" எனக் கேட்பது இயற்கைதான். "சீ! விலகிப்போ! வெளியே போகும்போது 'எங்கே போகிருய்' என்று அபசகுனமாகக் கேட்கிருயே!" என்று தன் குழந்தையைத் தந்தை கடிந்து கொள் கிருர். அன்பைக் கொட்டி வளர்க்கும் பிள்ளை அப்போது எச்சில் பண்டமாக அவருக்குத் தோன்றுகிறது. அப்பா வெளியே போய்த் திரும் பும்போது, வீட்டுக் குழந்தை ஆவலாக அவரை வரவேற்கிறது; அவர் வாங்கிவந்த பொருளைப் பார்த்து ஆவலுறுகின்றது. அப்போது, "என்ன பேராசை!" என்பார் தந்தை. குழந்தை அதை மேலும் கேட்டு அழுகையைத் தொடங்குகிருன். மீண்டும் தந்தை, "ஏன் பிணக்குச் செய்கிருய்? முரட்டுப் பயல்!" என்று அதட்டுவார். அப்பா வெளியே போயிருக்கும்போது குழந்தை தனது அம்மாவிடம், "அப்பா எங்கே?" என்று அன் பொழுகக் கேட்பான். இதற்குத் தாய், "ஏன் கரைகிருய்? இவ்வளவு நேரமாகியும் வாராத அவ ரிடமே நீயும் தொலைந்து போ!" என்று கடுமை யாகச் சொல்வதுண்டு. இத்தகைய குடும்பக் காட்சிகள் நாகரிகமுடையனவல்ல. பூங்கொடியின் குடும்பம் நாகரிகமாக விளங்குகிறது. அவள் தன் புதல்வனது கவலையை மாற்றுவதற்கு நிலவைச் சுட்டிக்காட்டி அதனைப் புகழ்ந்து பேசி அழைக் கிருள். அவள் குழந்தையைக் கடிந்துகொள்ள வில்லை; அவனுடன் விளையாட நிலவு வருமென்று பொய்யுரை கூறி, அமைதிப்படுத்துகிருள்.

## நிலாப்பேச்சு

இத்தகைய நாகரிகப் பெண்ணுன பூங்கொடியை எண்ணியபடி சேந்தன் தேரூர்ந்து வருகிருன். தான் வழியில் பார்க்கின்ற பசுவும் கன்றுகளும் அவன் நெஞ்சில் தன் மனைவி, புதல்வன் ஆகியோருடைய நினைவை எழுப்புகின்றன. பூங்கொடியின் நிலாப்பேச்சு அவனுக்கு இனிமை பயக்கின்றது. தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளனுகிய பண்ணனது தோட்டத்து நெல்லிக்கனியைத் தின்று நீர் குடித்து அதன் இனிய சுவையை அவன் உணர்ந்திருக்கிருன். வீட்டில் பூங்கொடி தன் புதல்வனிடத்தில் கூறும் நிலாப்பேச்சு அந்தச் சுவையைக் காட்டிலும் இனிமை மிக்கது என்று• அவன் எண்ணி மகிழ்கிருன். போர் முடிந்து வீடு திரும்புகின்ற அவன், வீட்டில் பூங்கொடியின் நிலாப் பேச்சை நினைக்கிருன். அவனது போர் நினைவை மாற்றிக் குடும்ப நினைவை உண்டாக்குவது எது? பூங்கொடியின் நெஞ்சத்து உயர்வையும் நாகரிகத்தையும் எடுத்துக் காட்டுவது எது? பூங்கொடி உரைத்த இனிய நிலாப்பேச்சு என்பதில் ஐயமுண்டோ?

> ''முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!
> பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
> வருகுவை யாயின் தருகுவென் பால்,''

என்று அவள் தனது புதல்வனது அழுகையை மாற்றுவதற்குக் கூறுகின்ற நிலாப்பேச்சு, சங்க நூல்களில் ஒன்ருன அகநானூறு என்னும் நூலில் 54-ஆம் பாடலில் காணப்படுகிறது.

**நூல் அறிமுகம்**

அகநானூறு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்களின் நிலையை நமக்குச் சித்திரித்துக் காட்டுகிறது. போர்க்காலத்தில் குடும்பத் தலைவன் வீட்டைவிட்டுப் போர்க் களம் சென்றிருக்கிறான் ; வீட்டில் குடும்பத் தலைவி தனது புதல்வனுடன் கணவன் வருகைக்காகக் காத்திருக்கிறாள். இவ்வாறு ஒரு வினையின் பொருட்டுச் சென்ற தலைவனது வருகைக்கு இல்லக் கிழத்தி காத்திருப்பதை ‘முல்லை’ என்னும் ஒழுக்கம் எனக் கொண்டு தமிழ்ப் புலவர் பாடியுள்ளனர். இத்தகைய ஒழுக்கநிலைப் பாடல்கள் தமிழர் நாகரிகத்தைச் சொல்லோவியங்களைப்போல இன்றும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

# 7. அறிவும் ஆற்றலும்

## 1. தூது சென்ற தையலார்

### முன்னெச்சரிக்கை

"பெருமானே! தொண்டைமான் நின்மீது படையெடுத்து வர முயல்கிறுன் என்பதைக் கேட்டவுடனே சினங் கொள்ளல் ஆகாது. அக்கூற்று உண்மையா என்பதை முதலில் ஆராய்தல் வேண்டும். அஃது உண்மையாயின் நாம் முன்னெச்சரிக்கையுடன் இருத்தலே சிறந்தது. முதலில் அக்கூற்று உண்மையா என்பதை நான் அறிந்து வருவேன். நீ அமைதியாக இரு," என்று அதியமானிடம் ஔவையார் கூறினர்.

### அதியமான் பண்பு நலம்

அதியமான் கொங்குநாட்டில் தகடூர்ப் பகுதியை ஆண்டு வந்தவன்; அவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; புலவரையும் பாணரையும் கூத்தரையும் ஆதரித்தவன். ஒரு நெல்லிக் கனியைத் தான் உண்டால் நீண்ட நாள் உடல் வலிமை பெற்றிருக்கலாம் என்பதை நன்கு அறிந்திருந்தும், அம்மன்னன் அதனைத் தான் உண்ணுது, தன் தாய்மொழிக்குத் தொண்டு செய்து வந்த ஔவையாருக்கு ஈந்து மகிழ்ந்தவன். அப்பெருமகனது தியாகத்தைப் பாராட்டிய ஔவையார் அவனது அவைக்களப் புலவராகவே இருந்து அவனை மகிழ்விப்பாராயினர்; பண்பு நலம் மேம்பட்ட அதியமானுக்காக அவர் தொண்டைமானிடம் தூது செல்லவும் முற்பட்டார்.

### தூது சென்ற பெருமாட்டி

தன்னை நோக்கித் தமிழ்ப்புலமை சான்ற பெருமாட்டியார் வருவதைக் கேள்வியுற்ற தொண் டைமான், அவரை முகமலர்ச்சியுடன் வரவேற் ருன். அறுசுவை யுண்டி அமைவுற அளித்தான். விருந்துண்ட வீரப்பெண்மணியார் வேந்தனேடும் அந்தப்புர அரசியரோடும் நெடுநேரம் உரையாடி ஞர்; இறுதியில் அரண்மனையின் பல பகுதிகளைப் பார்வையிட்டார். தொண்டைமான் அவரைத் தன் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்ருர். அங்கு வரிசை வரிசையாக வேல்கள் நிறுத்தப்பட் டிருந்தன. அவை புத்தம் புதியவையாகக் காணப் பட்டன. அவற்றின்மீது நெய் பூசப்பட்டிருந்தது. ஒவ்வொரு வேலின்மீதும் மயிற்பீலியும் மாலையும் காட்சியளித்தன. அவற்றின் தோற்றத்தைக் கொண்டு அவை போர் முகத்தை அறியாதவை என்பதை ஔவையார் அறிந்துகொண்டார்.

### தொண்டைமான் வேல்கள்

ஔவையார் தன் படைக்கலக் கொட்டிலைப் பொறுமையோடு பார்வையிடுவதைப் பார்த்த தொண்டைமான், அவர் தன்னைப் பாராட்டுவார் என்று நம்பினுன். நல்லிசைப் புலமை மெல்லிய லாராகிய ஔவையார் புன்முறுவலோடு அவனை நோக்கி, "அரசே! இவ்வேல்கள் 'புதியனவாகச் செய்யப்பட்டவை; இவை நெய் பூசப்பெற்றுள் ளன; பீலியும் மாலையும் அணிந்து அழகுறக் காணப்படுகின்றன. ஆனல் எம் அரசனுகிய தகடூர் வள்ளலுடைய வேல்கள் போரில் பயன் படுத்தப்பட்ட காரணத்தால் ஓரமும் நுனியும்

ம்முங்கிவிட்டன. அவை கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன,'' என்று வஞ்சப்புகழ்ச்சியாகப் பேசினர்.

இப்பேச்சினல் அவர் அறைந்த உண்மை யாது?

**வஞ்சப் புகழ்ச்சி**

காஞ்சி மன்னனுடைய வேல்கள் புத்தம் புதியனவாக இருக்கின்றன என்ற கூற்ருல், அவன் அதுகாறும் போர் புரியாதவன் என்பதும், அவன் வேல்கள் போரில் பயன்படுத்தப்படவில்லை என்பதும், அவன் போர் அநுபவம் இல்லாதவன் என்பதும் மறைமுகமாகக் குறிக்கப்பட்ட உண்மைகள். அதியமானுடைய வேல்கள் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன என்ற கூற்ருல், அதியமான் அடிக்கடி போர் செய்பவன் என்பதும், அவன் வேல்கள் பழுதடைகின்றன என்பதும், அவன் போர் அநுபவம் மிக்கவன் என்பதும் மறைமுகமாக அறிவிக்கப்பட்ட உண்மைகளாகும். மேலோட்டமாகப் பார்த்தால், ஒளவையார் பேச்சுத் தொண்டைமானைப் புகழ்வது போலவும் அதியமானை இகழ்வது போலவும் காணப்படும். ஆனல் உண்மை அஃதன்று. ஒளவையார் தமது பேச்சில் அதியமானைப் பழிப்பது போலப் புகழ்ந்தார் என்பதையும், தொண்டைமானைப் புகழ்வதுபோலப் பழித்தார் என்பதையும் அறிக.

## 2. வீரத்தாய்

### தாயின் வீர மொழி

"என் செல்வ மகனே! என் குடும்பத்திற்கு நீ ஒருவனே விளக்காக இருக்கின்றாய். நீ இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபொழுது உனது தந்தையார் பாண்டியர் மேற்கொண்ட போரில் தம் வீரத்தைக் காட்டி விண்ணுலகை அடைந்தார். அன்று முதல் இன்று வரை உன்னை என் உயிராகக் கருதி வளர்த்துவருகிறேன். இவ்வகன்ற உலகில் நீயே எனக்கு உறுதுணை; நானே உனக்கு உறு துணை; இன்றே உன்னை விட்டுப் பிரியும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சோழன் நம் நாட்டின்மீது படையெடுத்து வந்துளான். 'வீட்டுக்கொரு வீரன் வேண்டும்' என்று பாண்டியன் பறையறை வித்துள்ளான். நமது குடியோ மறவர் குடி. போரில் வீரம் காட்டி இறப்பதையே இன்பப் பேறு கக் கருதுவது நம்மவர் இயல்பு. உன் பாட்டனார் போரில் புகழ் பெற்றவர்; உன் தந்தையார் போரிலே உயிர் விட்டவர்; உன் மாமன்மார் போரில் விழுப்புண்பட்டு விழுமிய பெருமை பெற்றவர். இவர் வழிவந்த நீயும் இன்று போர்க்களம் சென்று நம் மரபினர் புகழை நிலைநிறுத்துவாயாக. மைந் தனே! போரில் முன் வைத்த காலைப் பின் வையாதே. இறக்க நேரின், மார்பில் புண்பட்டு மடி; புறங்காட்டி ஓடாதே; புறத்தில் புண் பட்டு இங்கு வாராதே. நமது மறவர் மரபுக்கு அழியாப் புகழைத் தேடு; சென்று வா," என்று வீராயி தன் ஒரே மகனான வீரப்பனை நோக்கிக் கூறினாள்.

### அன்பும் வீரமும்

அவள் முகத்தில் ஒருகால் தாயன்பு புலப்பட்டது; மற்றொருகால் வீர உணர்ச்சி காணப்பட்டது. அவள் மறவர் மகளல்லவா? அவள் தன் தாயன்பை வெளிப்படுத்தாது, போருக்குச் செல்லும் தன் மகனுக்கு வீர உணர்ச்சியை ஊட்டினுள். அவள் வயது அறுபது; தளர்ந்த நடையினள்; சுருக்கம் விழுந்த முகத்தினள். ஆயினும் மறக்குடி மகள் ஆதலால் வீர உணர்ச்சி அவளிடம் மிகுந்து காணப்பட்டது. போர்க்கோலம் கொண்டு தன் மைந்தன் புறப்பட்டுச் செல்வதைத் தன் கண் பார்வையில் இருந்து அவன் மறையுமட்டும் விழித்த கண் இமையாது நோக்கி நின்றுள். அவன் மறைந்தவுடன் அவள் விழிகளில் இருந்து சிறு முத்துக்கள் போல நீர்த் துளிகள் விழுந்தன. அவை தாயன்பைக் காட்டும் அடையாளம். அவ்வமயம் அவளது வீர உணர்ச்சி உள்ளத்தில் இருந்து பொங்கி எழுந்ததோ என்னவோ தெரியவில்லை. அவள் உடனே தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

### முதுகில் புண்ணு?

சில நாட்கள் கழிந்தபின் ஒருநாள் காலைநேரத்தில் வீரன் ஒருவன் வீராயி வீட்டிற்கு வந்தான்; ''நின்மகன் புறப்புண்பட்டுப் போரில் இறந்தான்,'' என்று புகன்று அகன்றுன். அவ்வீரன் கூறிய சொல் வீராயிக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததைப் போல இருந்தது. அவள் மைந்தன் இறந்ததற்காக மனம் கலங்கவில்லை; அவன் முதுகில் புண்பட்டு இறந்தான் என்ற உரையே அவளை

வருத்தியது. "தந்தை மறவன்; தாய் மறத்தி. இவ்விருவருக்கும் பிறந்த மகன் புறப்புண் பட்டா இறப்பது? கேட்க வெட்கமாய் இருக்கின்றதே! என் கணவன் கையாண்ட வாளை எடுத்துக் கொண்டு போர்க்களம் புகுவேன்; என் மைந்தன் உடலத்தைப் பார்ப்பேன்; வீரன் கூறியபடி என் அருமை மகன் புறப் புண்பட்டு இறந்தது உண்மை யாயின், அவனுக்குப் பாலீந்த மார்பினை இவ் வாளால் அறுத்து எறிவேன்," என்று சினத்துடன் செப்பினுள்.

## விழுப்புண்பட்ட வீரன்

வீராயி வீட்டை விட்டு அகன்ருள்; பேய் பிடித்தவள் போலக் கடுகி நடந்தாள். தள்ளாத கிழவி வாளேந்தி விரைந்து செல்வதைக் கண்டோர் வியப்புடன் நின்றனர். காற்றில் கூந்தல் அசைய, கையில் ஏந்திய வாள் பளபள வென்று மின்ன, வீராயி விரைந்து நடந்தாள்; மாலையில் போர்க் களம் புகுந்தாள். அவள் ஊரில் இருந்து வந்து போர் புரிந்துகொண்டிருந்த வீரர்கள் அவள் மகனது ஆவியற்ற உடலைக் காட்டினர். வீராயி தன் மைந்தன் உடலைப் புரட்டிப் புரட்டிப் பார்த் தாள்; பகைவன் எறிந்த வேல் அவனது அகன்ற மார்பில் பட்டு முதுகையும் துளைத்திருந்ததைக் கண்டாள். அவ்வளவில் அவள் உள்ளத்தில் ஒருவ ராலும் கரைசெய்ய அரியதொரு பேருவகை கொண்டாள்; அவள் முகம் அன்று அலர்ந்த செந் தாமரையினை வென்றது; என் வீரமகன் உண்மை யில் வீரப்பனே. இவன் மார்பில் புண்பட்டே இறந்தனன். இவனைப் பெற்ற யான் பேறு பெற்ற

வ்ளே. என் மைந்தன் மறவர் குல மாணிக்கம்'' என்று கூறிக்கொண்டே விரைந்து வீடு திரும்பிஞள்.

## 3. வீர வேந்தன்

### நெடுஞ்செழியன் வீரமுழக்கம்

''நான் வயதில் இளைஞகை இருப்பதைக் கொண்டு என்னை எளிதில் வெற்றிகொள்ளலாம் என்று இவர்கள் கருதி விட்டனர்போலும்! ஒருவனை வெல்ல எத்துணையர்? சோழன் என்னைப் போன்ற முடிமன்னன்; சேரனும் என்னைப்போலவே முடியுடை வேந்தன்; இவ்விரண்டு பேரரசரும் இவர் தம் நண்பரான சிற்றரசர் ஐவரும் ஆக எழுவர் எனது நாட்டின்மீது படையெடுத்துள்ளனர். அதாவது, ஒருவன்மீது எழுவர் படையெடுப்பு. இது வீரத்துக்கு அழகா? இவர்களைக் கண்டதும் நான் அஞ்சி நடுங்குவேன் என்று எதிர் பார்த்தனர் போலும்! இப் பகைவரை யான் வெல்லேனயின், என் குடிகள் நிற்க நிழல் இன்றி, ''எம் அரசன் கொடுங்கோலன்'' என்று என்னை இகழ்வாராகுக; மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருமக்கள் எனது நாட்டைப் பாடாது ஒழிவாராக! குடிகளைத் தொன்று தொட்டுக் காத்துவரும் பாண்டியர் மரபில் இருந்து யான் மாறிப் பிறப்பேன் ஆகுக,'' என்று பாண்டியன் நெடுஞ்செழியன் வீரமுழக்கம் இட்டான்.

## அழியாப் பெயர்

இவ்வரசன் வயதில் இளையவன்; ஆண்மையில் முதியவன்; ஆளும் திறத்தில் உயர்ந்தவன்; ஒழுக்கத்தில் சிறந்தவன்; தமிழ்ப் புலவர்களைத் தன் உயிர்போலப் பாதுகாத்துவந்தவன்; நூலறிவிலும் நுண்ணறிவிலும் மிக்கவன்; கவிபாடும் ஆற்றல் பெற்றவன். இப்பெருமகன் தன்னை எதிர்த்து வந்த சேர சோழரையும் ஐம்பெரு வேளிரையும் தலையாலங்கானம் என்னும் சோழ நாட்டு ஊரில் முற்றிலும் முறியடித்தான்; 'அதனால் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்னும் அழியாத பெயரைப் பெற்றான்.

## நூல் அறிமுகம்

நம் பண்டைத் தமிழருடைய வீரம், கொடை, அரசியல் அறிவு, ஒழுக்கம் முதலியவற்றை அறிவுறுத்தும் இத்தகைய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பாடல்கள் நானூறு கொண்டது புறநானூறு என்பது. அதில் அறம், பொருள், வீடு என்னும் புறப் பொருள் பகுதிகள் பற்றிய செய்திகள் அடங்கியுள்ளன. புறநானூறே பழந்தமிழர் பண்பாட்டை உள்ளவாறு விளக்கும் ஒப்பற்ற நூல். இந்நூலில் முடியுடை மூவேந்தர், வணிகர், வேளாளர் முதலிய பலதிறப்பட்ட புலவர் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இப்புலவர்கள் இற்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்டவர். இப்புலவர் பெருமக்களுடைய் உயர்ந்த கருத்துக்கள் நமது வாழ்வைச் செம்மைப்படுத்துவனவாகும்.

# 8. பூம்புகார்ப் பொற்கொடி

## 1. காவிரிப்பூம்பட்டினம்

**மருவூர்ப்பாக்கம்**

சோழநாட்டு மக்களைத் தன் நல்ல நீரால் வாழ்விக்கும் காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த பெருநகரம் **காவிரிப்பூம் பட்டினம்.** அஃது ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன் சோழர் தலைநகராகவும் கடற்றுறைப் பட்டின மாகவும் விளக்கமுற்றிருந்தது. கடற்கரை ஓரத் தில், கடல் வாணிகத்தின் பொருட்டு வந்து தங்கி யிருந்த அயல்நாட்டு வணிகர் வளமனைகள் இடம் பெற்றிருந்தன. கப்பலிலிருந்து வரும் பண்டங் களை இறக்கவும் தமிழ்நாட்டுப் பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றவும் ஏற்ற வசதிகள் கடற்கரை யில் அமைந்திருந்தன. அயல்நாட்டுப் பண்டங் கட்குச் சுங்கம் விதிக்கும் சுங்கச் சாவடி இருந்தது. கருங்கடல் வழியே வரும் கப்பல்களுக்குக் 'கரை இது' என்று அறிவிக்கும் கலங்கரை விளக்கமும் கவின்பெற நின்றது. ஏற்றுமதிப் பொருள்களும் இறக்குமதிப் பொருள்களும் சோழனது புலி இலச் சினையைத் தாங்கி நின்றன.

கடற்கரையின் மற்றொருபால் மக்கள் தங்கு தற்குரிய இடம் செம்மைப்படுத்தப்பட்டிருந்தது. கடற்காற்றை நுகரும் மக்களுக்கும் கடலில் நீராட விரும்பும் மக்களுக்கும் அஃது ஏற்ற இடமாக அமைக்கப்பட்டிருந்தது.

பட்டு நூலாலும் பருத்தி நூலாலும் எலிமயி ராலும் நுண்ணிய உடைகளை நெய்துவந்து நெச

வாளர் தெருக்கள் ஒருபால் இடம் பெற்றிருந்தன. விலையுயர்ந்த மணிகளும் பொன்னும் சேர்த்து வைக்கப்பெற்ற தெருக்கள் ஒருபால் இருந்தன. நெல் முதலிய கூலவகைகள் இருக்கும் தெருக் களும், கள் விற்பவர், மீன் விற்பவர், உப்பு விற்ப வர், பலவகை இறைச்சிகளை விற்பவர், கற்பூரம் முதலிய மணப்பொருள்களை விற்பவர் வாழ்ந்த தெருக்கள் ஒருபால் இருந்தன. ஆட்டு வாணிகர், தச்சர், ஓவியர், கொல்லர், சிற்பர், உருக்குத் தட்டார், இரத்தினப்பணித் தட்டார், மட்பாண்டத் தொழிலாளர், சிப்பித் தொழிலாளர், தோல் தொழி லாளர், கிழி நெட்டி இவற்றைக்கொண்டு வாடாத மாலை முதலியவற்றைச் செய்பவர் எனப் பலதிறப் பட்ட தொழில் புரிந்த மக்கள் வாழ்ந்த வளம் பொருந்திய தெருக்கள் கடற்கரையைச் சார்ந்த மருவூர்ப்பாக்கத்தை அழகு செய்தன. இசையில் வல்ல பாணர், கூத்தர் முதலியோர் வாழ்ந்த தெருக் களும் அங்கு இருந்தன.

## பட்டினப்பாக்கம்

மருவூர்ப்பாக்கத்தை அடுத்துப் பட்டினப் பாக்கம் அமைந்திருந்தது. அங்கு அரசமரபினர் வாழும் தெருக்கள், தேரோடும் தெரு, கடைத்தெரு, மாடமாளிகைகள் நிறைந்த வணிகர் தெரு, மறைய வர் தெரு, வேளாளர் மருத்துவர் சோதிடர் என் போர் வாழ்ந்த தெருக்கள் அடுத்தடுத்து அமைந் திருந்தன. 'அப்பால் முத்துக்கோப்பவர், சங்கு அறுப்பவர், பலவகைக் கூத்துக்களை ஆடும் நடன மாதர், பலவகை இசைக் கருவிகளை இசைப்பவர், குதிரைவீரர், தேர்ப்பாகர், காலாட்படையினர்

முதலியோர் வாழ்ந்த தனித்தனித் தெருக்கள் பட்டினப்பாக்கத்தில் பாங்குற அமைந்திருந்தன.

## தெருக்கள்

இவ்விரண்டு நகரப் பகுதிக்கும் இடையில் மரங்கள் அடர்ந்த சோலை இருந்தது. அங்குப் பல வகைக் கடைகள் இடம் பெற்றிருந்தன. நகரத் தெருக்கள் அகன்றும் காற்றோட்ட வசதிக்கு ஏற்ப வும் அமைந்திருந்தன. பெரும்பாலான வீடுகள் வளமனைகளாகக் காட்சியளித்தன. சில மாளிகை களின் சுவர்களில் தேவர்கள், மக்கள், விலங்குகள், பறவைகள் இவற்றைக் குறித்த சுதை உருவங் களும் ஓவியங்களும் காணப்பெற்றன. மானின் கண்போன்ற துளையிடப்பெற்ற சாளரங்கள் மாளிகைகளில் இருந்தன. வளமனைகளில் வாழும் பெண்டிர், தென்றல் காற்று வீசும் சாளரங்களுக்கு எதிரில் நின்று, அங்காடித் தெருவில் மாதர்கள் பாடுதலையும் விழா நடைபெறுதலையும் கண்டு களித்தனர். மாளிகையின் மேற்பகுதி நிலவு காயத்தக்க திறந்த பகுதியாக அமைந்திருந்தது.

## நறுமலர்ச் சோலைகள்

நகரத்தில் ஆங்காங்கே அழகிய சோலைகள் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் தண்ணீரை நிரப்பவும், நிரப்பப்பெற்ற தண்ணீரை வெளி யேற்றவும் வல்ல இயந்திர அமைப்பைக் கொண்ட குளத்தைத் தன்னகத்தே பெற்ற பூஞ்சோலை ஒன்று. அஃது அரசர் அமைச்சர் முதலியோர் பொழுதுபோக்கத் தங்குமிடமாக இருந்தது. உவவனம் என்பது மற்றொன்று. அவ்வனத்தில்

பளிங்கு மண்டபம் ஒன்று இருந்தது. தன்னகத்துள் இருப்பவர் ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்தம் உருவத்தைமட்டும் வெளிப்படுத்த வல்லது அப்பளிங்கு மண்டபம்.

### கோவில்கள்

நகரத்தில் ஆங்காங்குப் பல கோவில்கள் அமைந்திருந்தன. அவற்றுள் சிவன்கோவில், திருமால் கோவில், பலராமன் கோவில், இந்திரன் கோவில், சந்திரன் கோபில், அருகன் கோவில், புத்தர் கோவில் என்பன குறிக்கத்தக்கன. ஒவ்வொரு சமயத்தார்க்கும் உரிய மடங்கள் இருந்தன. அம்மடங்களில் துறவிகள் இருந்து சமய அறிவுரைகளை ஊட்டிவந்தனர்.

இசையரங்கு, நடன அரங்கு, நாடக அரங்கு எனப் பலவகை அரங்குகள் காவிரிப்பூம்பட்டினத்தை அழகு செய்தன.

## 2. திருமணம்

### திருமண அழைப்பு

இங்ஙனம் சீரும் சிறப்பும் பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் தெருவில் ஒருநாள் யானை மீது பெண்கள் சிலர் பவனி சென்றனர். அப்பெண்கள் பலவகை அணிகலன்களை அணிந்து கொண்டிருந்தனர். சந்தனம், குங்குமம், மலர்கள் இவற்றையுடைய தட்டுக்களைக் கரிகளின்மீது வைத்திருந்தனர். அப்பெண்மணிகள் குறிப்பிட்ட சில வீடுகட்கு எதிரில் யானைமீதிருந்து இறங்கி, வீடுகளுள் நுழைந்தனர்; இனி நடக்கவிருக்கும்

திருமணம் ஒன்றினுக்கு வருமாறு அவ்வவ் வீட்டாரை அழைத்தனர். இங்ஙனம் அப்பெண்மணிகள் யானைமீது ஊர்வலமாகச் சென்று நகரப் பெருமக்களைத் திருமணத்துக்கு அழைத்தனர். அத்திருமணம்தான் கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடைபெறவிருந்த திருமணம்.

**மாசாத்துவான்-மாநாய்கன்**

கோவலன் தந்தை சிறந்த உள்நாட்டு வணிகர். உள்நாட்டு வணிகர் எருதுகள்மீது பண்டப் பொதிகளை ஏற்றிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று வாணிகம் புரிதல் வழக்கம். இங்ஙனம் வணிகர் சிலர் பண்டப் பொதிகளோடு சேர்ந்து செல்லுதல் 'சாத்து' எனப்படும். இத்தகைய சாத்துக்கள் பலவற்றுள் சிறந்த ஒன்றுக்குத் தலைவனாக இருந்த காரணத்தால், கோவலன் தந்தை 'மாசாத்துவான்' எனப் பெயர் பெற்றான். அவனைப்போலவே செல்வ வளத்திற் சிறப்புற்று விளங்கிய மற்றொரு வணிகன் **மாநாய்கன்** என்பவன். அவன் மகளே தமிழ் மாதர் கற்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய கண்ணகி என்பவள். இவ்விரண்டு பெருவணிகர் பிள்ளைகட்கும் திருமணம் நடைபெற இருந்தது.

**திருமணச் செய்திகள்**

திருமணத்தன்று மாநாய்கன் மாளிகை மிக்க சிறப்புடன் விளங்கியது. குறித்த நேரத்தில் முரசம், மத்தளம் முதலிய பலவகை இயங்கள் ஒலித்தன. நகரப் பெருமக்கள் பலரும் அங்குக் குழுமியிருந்தனர். பேரழகு பொலிய அலங்கரிக்கப்பட்ட பந்தலில் கோவலனும் கண்ணகியும்

திருமணக் கோலத்தில் வீற்றிருந்தனர். அவர்கள் தீவலம் செய்தனர். அப்பொழுது பெண்மணிகள் சிலர் வாசனைப் பொருள்களையும் மலர்களையும் தட்டுக்களில் ஏந்தி நின்றனர்; சிலர் மங்கலவாழ்த்துப் பாடினர்; சிலர் பலவகைச் சாந்துகளை ஏந்தி நின்றனர்; சிலர் சாம்பிராணி முதலிய புகைப் பொருள்களைத் தாங்கி நின்றனர்; சிலர் பலவகை மலர்மாலைகளைக் கைகளில் பிடித்திருந்தனர்; சிலர் முளைப்பாலிகை ஏந்தி நின்றனர். திருமணச் சடங்குகள் ஒன்றன்பின் ஒன்ருக நிறைவேறின. இறுதியில் வாழ்வரசியர் சிலர், "நீங்கள் இப்பொழுது கோத்துள்ள கை நெகிழாதபடி என்றும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் அஃபோடு வாழ்வீராக," என்று வாழ்த்தினர். பின்னர் அரச வாழ்த்துடன் திருமணம் திருவுடன் நிறைவேறியது.

## 3. மாதவி அரங்கேற்றம்

### நடன அரங்கம்

காவிரிப்பூம்பட்டினத்து அரங்குகளுள் நடன அரங்கு ஒன்று என்று முன் சொல்லப்பட்டதன்றே? ஒருநாள் அவ்வரங்கம் மிகுதியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. குறித்த நேரத்தில் சோழப் பெருவேந்தனும் அமைச்சர் முதலிய அரசாங்க உயர் அலுவலரும் வணிகப் பெருமக்களும் பிற பெருமக்களும் அங்குக் குழுமியிருந்தனர். அரங்கத்தில் ஆடலாசிரியன், இசை ஆசிரியன், கவிஞன், தண்ணுமை ஆசிரியன், குழலாசிரியன், யாழாசிரியன்

என்போர் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்திருந்தனர்.

**மாதவி நடனம்**

குறித்த நேரத்தில் இளமங்கை ஒருத்தி நாடக அரங்கில் தோன்றினாள். அவள் யார்? அவளே 'சோழ நாட்டுப் பேரழகி' எனப் பெயர் பெற்ற **மாதவி** என்னும் மங்கை நல்லாள். நடிக மகளுக்குரிய ஒப்பனை முழுவதும் குறையின்றிச் செய்து கொண்ட அவள், நடனக்கலையில் ஏழாண்டுகள் பயிற்சி பெற்றவள்; அரங்கில் அமர்ந்திருந்த ஆசிரியர்களிடம் அன்பும் மரியாதையும் உடையவள். நடன மாதர்க்குரிய ஓவியம் முதலிய கலைகளில் வல்லவள். அப்பெண்ணரசி தன் வலக்காலை முன்வைத்து அரங்கத்தில் ஏறி ஆண்டுக் குழுமியிருந்தவர்க்கு வணக்கம் செலுத்தினாள். பின்னர் நடனக்கலைத் தொடர்பான பாடல்களில் பண்பட்ட முதுமகளிர் பின் இருந்து பாட, அப்பாடல்களுக்கு ஏற்ற அபிநயம் காட்டி ஆடத் தொடங்கினாள். அப்பொழுது குழல்வழி நின்றது யாழ்; யாழ்வழி நின்றது தண்ணுமை; தண்ணுமைப் பின்வழி நின்றது முழவு. ஒன்றுபட்ட இப்பல்லியங்களின் ஓசையும் பண்பட்ட மகளிர் பாடலும் மாதவியின் அபிநயமும் ஒன்றுபட்டன.

**பட்டமும் பரிசும்**

இவ்வாறு மங்கைப் பருவமுடைய மாதவி முதன்முதல் நடித்துக் காட்டிய திறத்தைச் சோழ வேந்தனும் பெருமக்களும் கண்குளிரக் கண்டு வியப்புற்றனர். வேந்தன் மாதவியின் நடனக்கலை

அறிவை நன்கு பாராட்டினன்; வயதில் இளமையும் கலையறிவில் முதுமையும் எய்தியிருந்த அந் நடனவரசிக்கு, அரசமாலையும் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னும் பரிசளித்தான்; 'தலைக்கோலி' என்னும் பட்டத்தையும் வழங்கினன். அன்று முதல் சோணாட்டு நடனமாதருள் மாதவி தலைமணியாகத் திகழ்ந்தாள்.

## 4. இந்திரவிழா

### மாதவியின் வாழ்வு

மாதவியின் அரங்கேற்று விழாவைக் கண்டு வியந்தவருள் கோவலன் ஒருவனவன். அவன் கலைச்சுவைஞன்; யாழ் வாசிப்பதிலும் பாடுவதிலும் வல்லவன். கலையறிவு வாய்ந்த கலையரசியாகத் திகழ்ந்த மாதவியிடம் மட்டற்ற காதல் கொண்டான். அதனால் கண்ணகியைத் துறந்து மாதவியிடமே வாழலானன். அவனது கூட்டுறவால் மாதவி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். அவளுக்கு ஒரு பெண்மகவு பிறந்தது. கோவலன் அக்குழந்தைக்கு மணிமேகலை என்று பெயரிட்டு மகிழ்ந்தான்.

### இந்திரவிழா

காவிரிப்பூம் பட்டினத்தில் ஆண்டுதோறும் இந்திரனுக்கு விழாக் கொண்டாடப்பட்டது. எல்லாக் கோவில்களிலும் அவ்விழா 27 நாட்கள் நடைபெற்றது. நகரத்திலிருந்த எல்லாக் கோவில்களிலும் விழாக்கள் நடைபெற்றன. அரசனும் அரசியல் அலுவலாளரும் பிறபெருமக்களும் எல்லா

விழாக்களிலும் கலந்து கொண்டனர். மாதவி என்ற மாதர் திலகம் தன் நடனக்கலையால் அனைவரையும் மகிழ்வித்தாள்; இந்திரவிழாவினையும் சிறப்பித்தாள்.

## கோவலன் வெறுப்பு

இந்திர விழாவின் முடிவில் பூம்புகார் நகரத்தார் தத்தம் பரிவாரங்களுடன் கடலாடுதற்குச் சென்றனர். கோவலனும் மாதவியும் கடற்கரையை அடைந்தனர்; புன்னைமர நிழலில் தங்கி உரையாடிப் பொழுது போக்கினர். பின்பு கோவலன் மாதவியின் கையிலிருந்த யாழை அவள்தர வாங்கிப் பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு யாழை வாசித்தான். அவன் பாடிய பாக்களைக் கேட்ட மாதவி, 'இவன் வேறு மகளிர்பால் விருப்புடையன் போலும்' என்று எண்ணி மனம் நொந்தாள்; அவன் கையிலிருந்த யாழை வாங்கினாள்; தான் வேறு குறிப்பில்லாதவளாக இருந்தும், கோவலன் வேறு குறிப்புள்ளவனாகத் தனக்குத் தோன்றிய காரணத்தால் தானும் வேறு குறிப்புடையவள் போலச் சில வரிப்பாட்டுக்களைப்பாடி யாழை வாசித்தாள். அதனைக்கேட்ட கோவலன் அவளைத் தவறாகக் கருதினான். உடனே வெறுப்புற்று அவளோடு பேசாது அகன்றான்.

## கண்ணகியின் உள்ளன்பு

மாதவியை அகன்ற கோவலன் நேரே தன் வளமனையை அடைந்தான். தன் பிரிவாற்றாது வாடிய முகத்துடன் இருந்த கற்பரசியாகிய கண்ணகியைக் கண்டு, "பொய்யன்பு கொண்ட

பரத்தையின் கூட்டுறவால் என் பொருளெல்லாம் இழந்தேன். அஃது எனக்கு மிக்க நாணத்தைத் தருகிறது" என்று சிறுகுரலில் செப்பினான். அதனைக் கேட்ட கண்ணகி, மாதவிக்குக் கொடுத்தற்குப் பொருள் இல்லாமையால் அவன் தளர்ந்து சொன்னான் என்று கொண்டாள். "என்னிடம் இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டருள்க" என்று பணிவுடன் பகர்ந்தாள். கோவலன், "மதுரையை அடைந்து இச்சிலம்பை வாணிக முதலாகக் கொண்டு வாணிகம் செய்து மிக்க பொருளீட்டத் துணிந்தேன். நீயும் உடன்வருதல் வேண்டும்" என்றான். இவ்வகன்ற உலகில் கற்புடைய மகளிர்க்குக் கணவனே உயிர் என்று எண்ணிய கண்ணகி மிக்க மகிழ்ச்சியோடு அவனுடன் செல்ல இசைந்தாள். அன்றிரவே கடையாமத்தில் கோவலன் கண்ணகியை அழைத்துக் கொண்டு ஒருவரும் அறியாதபடி புறப்பட்டு மதுரைநோக்கி நடக்கலானான்.

## 5. தமிழராற்றல்

### கனக விசயர் பழிப்புரை

"அரசே! வடநாட்டில் நடந்த திருமணம் ஒன்றிற் கூடியிருந்த கனகன் விசயன் முதலிய வடநாட்டு வேந்தர்கள், 'எங்களுக்கு முற்பட்ட காலத்தில் தமிழரசர் இமயம் வரைப்படையெடுத்து வந்ததாகக் கேள்வியுற்றோம். நாங்கள் வாழுகின்ற இக்காலத்தில் தமிழ்வேந்தர் வருவராயின், உண்மையில் அவர் ஆண்மையுடையவரே' என்று உரையாடிக் கொண்டிருந்தனர்", என இமயமலை அடி

வ்ாரத்திலிருந்து தென்னுடு போந்த முனிவர் சிலர் ஞேரன் செங்குட்டுவனிடம் கூறினர்.

## செங்குட்டுவன் வஞ்சினம்

அதுகேட்ட செங்குட்டுவன் சினந்து தன் படைத்தலைவனை நோக்கினுன். “நம் சேர நாட்டை அடைந்து விண்ணுலகெய்திய திருமா பத்தினியாகிய கண்ணகி தேவிக்குக் கோவில்கட்ட விழைந்தேன். அவள் திருவுருவத்தைச் செதுக்கு வதற்குரிய கல்லைப் பொதிய மலையிலிருந்து கொண்டுவருவதைவிட இமயத்திலிருந்து கொண்டு வருதலே சிறப்புடையது. ‘தமிழராற்றலைக் காண் போம்’ என்று நாப்பறையடித்த கனக விசயரது போராற்றலைக் காண்போம்” என்று கூறினுன்.

## செங்குட்டுவன் வெற்றி

சேரப் பெருவேந்தனது படைகள் ஆர்த் தெழுந்தன. அவை அணி அணியாக வடக்கு நோக்கிச் சென்றன. சேரவேந்தன் ஆந்திரப் பேரரசன் உதவியால் கங்கையாற்றைக் கடந்து வட கோசலத்தை அடைந்தான். அங்குக் கனகன் விசயன் முதலிய வடநாட்டு வேந்தர்கள் பெரும் படையுடன் வந்து அவனை வளைத்தனர். போர் கடுமையாக நடந்தது. யானைக்கூட்டத்துள் சிங்கம் பாய்வதை ஒப்பச் செங்குட்டுவன் பகை வரின்மீது பாய்ந்து வாட்போர் புரிந்தான். மன்னனே முன்னின்று போர்புரிவதைக்கண்ட தமிழ்மறவர் திறம்படப் போராடினர். போர்க் களத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சேரன் செங் குட்டுவன் வாளொடு தோன்றினுன். வில்வீரத்தில்

சிறந்த சேரவீரர் எதிரிகளை முறியடித்தனர். இறுதியில் சேரர் பெருமான் வாகை சூடினன். 'தமிழராற்றலைக் காண்போம்' என்று வீம்பு பேசிய கனகனும் விசயனும் சிறைப்பட்டனர். கண்ணகியின் உருவத்தைப் பொறித்தற்கு உரிய கல் கங்கைநீரில் தூய்மை செய்யப்பட்டது; பின்னர் கனகவிசயர் முடித்தலைகள்மீது வைக்கப் பெற்று வஞ்சி மாநகர்க்குக் கொண்டுவரப்பட்டது.

### கண்ணகி கோவில்

பூம்புகார்ப் பொற்கொடி என்று போற்றப் பெற்ற கண்ணகிக்குச் சேரநாட்டில் கோவில் கட்டப்பட்டது. அக்கோவிலில் அவளது உருவம் பொறிக்கப்பட்ட சிலை நாட்டப்பட்டது. கண்ணகி விழாவில் சோழ பாண்டியரும், இலங்கைக் கயவாகு வேந்தனும், மாளுவ நாட்டு மன்னரும் பிறரும் கலந்து கொண்டனர். "செங்குட்டுவன் வாழ்க" என்று கண்ணகித் தெய்வம் வாழ்த்துக் கூறியது.

### நூல் அறிமுகம்

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள் சிலப்பதிகாரம் என்னும் காவியத்தில் காணப்படுபவை. சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி வரலாற்றை எடுத்துக் கூறுவது. கோவலனும் கண்ணகியும் சோழநாட்டில் பிறந்து வளர்ந்தவர்; பாண்டிய நாட்டில் பிழைக்கச் சென்றவர். இறுதியில் கண்ணகி சேரநாடு சென்று தெய்வத்தன்மை எய்தினள். எனவே, சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் பற்றிய செய்திகளும், முடியுடை மூவேந்தரைப்பற்றிய செய்திகளும், மூன்று நாடு

க்களிலுமுள்ள குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களைப் பற்றிய விவரங்களும், ஆங்காங்கு வாழ்ந்த மக்களுடைய பழக்க வழக்கங்கள், நாகரிகம், பண்பாடு, சமய நிலை முதலியனவும் இப்பெருங் காப்பியத்தில் இடம் பெறலாயின. இந்நூல் மூன்று நாடுகளின் தலைநகரங்களைப் பற்றிப் போதுமான விளக்கங் கள் தருகின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப் பெற்ற இக்காவியம் ஒன்றே பண்டை நாடகத் தமிழுக்குச் சிறந்த இலக்கியமாக இலங்குகிறது. இத்தகைய சிறப்புக்கள் வேறு எந்தத் தமிழ் நூலுக்கும் இல்லை என்று உறுதியாகக் கூறலாம். இந்நூலின் நடை இனிமையும் எளிமை யும் வாய்ந்தது; சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்தது. இந்நூல் இத்தகைய சிறப்புக்களால் படிப்பவர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ள வல்லது. இதன்பால் உள்ளத்தைப் பறிகொடுத்த காரணத்தாற்றான் காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்று இதனைப் பாராட்டி வியந்தார்.

# 9. பலசுவைக் காட்சிகள்

## 1. தெருக்காட்சி

**களிமகன் செயல்**

காவிரிப்பூம் பட்டினத்துத் தெரு ஒன்றில் சமண முனிவன் ஒருவன் மெதுவாக நடந்து சென்ருன். அவன் கையில் உறி ஒன்று இருந்தது. அதில் குண்டிகை இடம் பெற்றிருந்தது. அவன் நுண்ணிதாய்த் திரண்ட பிரம்பினை வைத்திருந் தான். அவன் அருகன் கோவிலில் இருந்த துறவி; நாணத்தையும் ஆடையையும் முற்றும் துறந் தவன்; உண்ணு நோன்பு மேற்கொண்டவன்; தான் நடக்கும்போது வழியில் கண்களால் காண இயலாத சிற்றுயிர்களுக்குத் துன்பம் நேருமோ என்று அஞ்சி மெதுவாக நடந்து வந்தான். அவன் நீராடாத மேனியன்.

அவ்வழியே ஒரு கட்குடியன் வந்தான். குடி போதையில் அறிவிழந்திருந்த அவன் அச்சமண முனிவனை நோக்கி, "வாரும் அடிகளே, உம்மு டைய மலர்போலும் திருவடிகளை வணங்கினேன். எம்பெருமானே, அடியேன் மொழிவதைக் கேளும்: அழுக்குச் செறிந்த உடலிற் புகுந்த உம்முடைய உயிர் புழுக்கத்தினை உண்டாக்கும் அறையில் அகப்பட்டோரைப் போல உள்ளம் வருந்தாதபடி, எம் தலைவர் உரைத்ததாகிய இம்மை இன்பத்தினை யும் மறுமை இன்பத்தினையும் முடிவு இல்லாத முத்தி இன்பத்தினையும் தன்னிடத்திலிருந்து தரத்தக்க இனிய மதுவில் கொலை என்பதும் உண்டோ? உண்மைத் தவமுடைய பெரியீர், இம்மதுவை

உண்டு தெளிவு பெறும். உமது தவநெறி இதனி னும் சிறந்த பயனைத் தருவது என்று தெரிந்தால், இத் தேறலையும் எம்மையும் அகற்றிவிடும்,'' என்று கூறி, மதுவைக் கலயத்தில் ஏந்திக்கொண்டு அம் முனிவன் பின்னே சென்றான். இக்காட்சியில் ஈடு பட்ட பொதுமக்கள் அக்களிமகனைப் பின் தொடர்ந்து சென்றனர்.

### பித்தன் செயல்

மற்றொரு தெருவில் ஒருவன் சென்று கொண் டிருந்தான். அவன் அலரிப் பூவால் திரணையாகக் கட்டப்பட்ட மாலையை அணிந்திருந்தான்; ஈர்க்கு அரும்புகளால் கோக்கப்பட்ட தாரினைப் போட்டி ருந்தான். கந்தல் துணியை உடுத்திருந்தான்; அத் துணியில் சுள்ளிகளை ஒடித்துக் கட்டியிருந்தான். வெண்ணீறும் சந்தனமும் உடல் முழுவதும் பூசி யிருந்தான். பயனில்லாத சொற்களைப் பலரோடும் கூறிக்கொண்டு வழி நடந்தான். அவன் அழுதும், தொழுதும் விழுந்தும், எழுந்தும், அரற்றியும், அலறியும், சுழன்றும், ஓடியும், அழன்றும், ஆடி யும், ஒரு பக்கமாக ஒதுங்கியும், பதுங்கியும் அலைந் தான். தன்னிழலையே கண்டு சீறினான். அவனு டைய செயல்களைக் கொண்டு அவன் ஒரு பித்தன் என்பதை அறிந்து, மக்கள் பலர் வருத்தத்தோடு அவன் செயல்களைப் பார்த்து வியந்தனர்.

### பேடிக்கூத்து

வேறொரு தெருவில் பெருங்கூட்டம் கூடியிருந் தது. அக்கூட்டத்தின் நடுவில் ஒருவன் கூத்தா டிக் கொண்டிருந்தான். அவன் சுருண்ட தாடி

யையும் இருண்ட அழகிய கூந்தலையும் உடைய வன்; பவளம் போன்ற சிவந்த வாயும் ஒளி வீசும் வெண்ணிறப் பற்களும் பெற்றவன். செவ்வரி படர்ந்த பெரிய கண்களை உடையவன்; வெள்ளிய சங்கினால் செய்த காதணியை அணிந்தவன்; கரிய தாய் வளைந்த புருவத்தினை உடையவன்; பிறை போன்ற நெற்றியினை உடையவன்; காந்தள் மலர் போன்ற சிவந்த கையை உடையவன்; பூரித்த மார்பை உடையவன்; அவன் முழந்தாள் அளவாக உடையை உடுத்திருந்தான். வாணன் என்னும் அசுரனது சோ நகரத்தின் தெருவில் நின்று, நில மளந்த நெடுமாலின் மகனை மன்மதன் முன்பு ஆடிய பேடிக் கோலத்தையுடைய பேடு என்னுங் கூத்தினை ஆடிக் காட்டினன். ஆடவன் இவ்வாறு பேடிக்கோலம் கொண்டு கூத்தாடுதல் நகைச் சுவையை ஊட்டுவதாகும். ஆதலால் பொது மக்கள் இச்சுவையில் ஈடுபட்டுக் கூத்தினைக் கூர்ந்து கவனித்தனர்.

### ஓவியக் காட்சி

சில தெருக்களில் மிக உயர்ந்த வளமனைகள் கட்டப்பட்டிருந்தன. அவற்றில் இருந்த பெரிய மாடங்கள் தெய்வ வழியினை உடையன. மாடங் களின் சுவரில் தேவர் முதலாக எல்லா வகை உயிர் களையும் ஒப்புமை காட்டிப் பண்பட்ட ஓவியக்காரர் செய்த ஓவியங்கள் இருந்தன. அவை செய்வினைத் திறத்தால் காண்பார் விழிகளைத் தம்பால் ஈர்த்தன. இவ் ஓவியங்கள் தீட்டப்பெற்ற வளமனைகளுக்கு முன்புறத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி யிருந்தனர்.

### சிறுதேர் உருட்டல்

திருவிழா நடைபெற்ற மிகப் பெரிய தெருவில் பெண்மணிகள் சிலர் பிள்ளைகளை வைத்து விளையாடினர். அப்பிள்ளைகள் பொன் கயிற்றில் கோத்த மணிக்கோவையை அணிந்திருந்தனர். அவர் தம் தலையலங்காரம் பார்ப்போர் விழிகட்கு விருந்தளித்தது. அப்பிள்ளைகள் வடிவு திருந்தாத மழலைச் சொற்களைப் பேசினர். அவர்தம் வாயிலிருந்து உமிழ்நீர் உறைந்தது. அந்நீர் அவர்கள் மார்பில் அணிந்திருந்த ஐம்படைத் தாலியை நனைத்தது. அவர் தம் இடையில் அழகிய ஆடை சுற்றப்பட்டிருந்தது. அவர்கள் கழுத்தில் அணிந்திருந்த் மணிக்கோவை உடம்போடு அசைந்தாடியது. அவர்கள் உடல் முழுவதும் ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்திருந்தனர். அவர்கள் விளையாடுவதற்குப் பொன் தேர் வைக்கப்பட்டிருந்தது. அத்தேரின்மீது யானை உருவம் அமைக்கப்பட்டிருந்தது. அப்பிள்ளைகளை வைத்திருந்த பெண்மணிகள் அவர்களை அந்த யானைமீது ஏற்றி, "ஆலின் கீழ் அமர்ந்த சிவபெருமான் மைந்தனாகிய முருகவேளின் விழா கால் கொள்ளுதலைக் காணுங்கள்" என்று கூறினர். அவர்களைச் சுற்றிலும் சிலர் நின்று வேடிக்கை பார்த்தனர்.

## 2. பொழில் காட்சி

### பாட்டும் கூத்தும்

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ வேந்தன் அரண்மனை கண்கவரும் வனப்புடன் விளங்கியது. அவ்வரண்மனைக்குள் அரசன் பொழுது போக்கத்

தக்க எழில் நலம் மிகுந்த பூம்பொழில் ஒன்று அமைந்திருந்தது. வானளாவிய மரங்கள் செறிந்த அப்பொழிலில் உள்ள மரக்கொம்புகளில் தும்பிகள் வேய்ங்குழலிசைத்தன. மலர்களில் இருந்த தேனை உண்ட வண்டினங்கள் யாழிசையை ஒத்து ரீங்காரம் செய்தன. வரிகளையுடைய குயில்கள் பாடின. அழகிய மயில்கள் தோகை விரித்து ஆடின. பூம்பொழில் நடுவே பன்மலர்ப்பந்தர் அழகு செய்தது. அப்பொழிலில் அமைந்த செய்குளத்தில் நன்னீர் நிரம்பியிருந்தது. அக்குளத்தில் அன்னப் பறவைகள் இன்ப வாழ்க்கை வாழ்ந்தன. மடப்பம் பொருந்திய மயிற்பேடையும் ஆண் மயிலும் சேர்ந்து ஒருபால் ஆடிக்கொண்டிருந்தன. அவற்றோடு தன் பேட்டினைப் பிரிந்த அன்னப் புள்ளும் ஆட்டத்தில் கலந்துகொண்டது. இங்ஙனம் மூன்றும் சேர்ந்து ஆடிய கூத்து, நீலமணி போன்ற நிறமுடைய கண்ணனும் வெண்ணிறங் கொண்ட பலதேவனும், நப்பின்னையும் சேர்ந்து துவாராபதியின் ஒரு மன்றத்தில் ஆடிய குரவைக் கூத்தை ஒத்திருந்தது.

## கடுவனின் காதல்

கோங்க மரமும், மாமரமும் அடுத்தடுத்து வளர்ந்திருந்தன. அதனால் கோங்கம் பூவினுடன் மாங்கனி சேர்ந்திருந்தது. அம்மாங்கனிக்குப் பக்கத்தில் பேரழகுடைய மயில் ஒன்று அமர்ந்திருந்தது. அழகிய மலர்களையுடைய பூஞ்சோலையில் உள்ளிடத்தில் மணிகளால் ஆகிய ஊஞ்சல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அவ் ஊஞ்சலில் அரசமகளிர் அமர்ந்து ஆடுவது வழக்கம். அவர்

க்ள் இல்லாதபொழுது கடுவன் தன் மந்தியை அவ் வூஞ்சலில் ஏற்றி ஆட்டுவது, கண்டு மகிழத்தக்க காட்சியாகும்.

**தம்பியும் தமையனும்**

பொழிலின் ஒருபால் பசிய இலைகள் நெருங்கிய மூங்கில் வளர்ந்திருந்தது. அதனையடுத்து வெண்ணிறப் பூக்கள் நெருங்கிய வெண்கடம்ப மரம் வளர்ந்திருந்தது. இவ்விரண்டும் ஒன்றையொன்று அடுத்து நின்றமை பச்சைமாமலை போல் மேனியையுடைய கண்ணன் வெண்ணிறமுடைய பலராமனோடு நின்ற காட்சியை ஒத்திருந்தது.

**நடன அரங்கம்**

அப்பொழிலில் மற்றொருபால் நடன அரங்கம் இருந்தது. சோழ வேந்தன் அன்று அப்பொழிலில் பொழுது போக்க வருவதை அறிந்து, கதை தழுவாது ஆடுதலையுடைய கூத்தினொடு பாட்டின் பொருள் தோன்றக் கைகாட்டும் அபிநயத்தினை அறிந்த விறலியர் அவ்வரங்கில் அமர்ந்திருந்தனர். ஆடலாசிரியர், இசையாசிரியர், மத்தள ஆசிரியர், வேய்ங் குழலுடன் மிடற்றோசை பொருந்தும்படி தாள அறுதி செய்வோர், பின்பாட்டுக்காரர் எனப் பலதிறப்பட்டவரும் அங்குக் கூடியிருந்தனர். புனல் விளையாட்டின்போதும் நடனத்தின்போதும் ஊசலாடும்போதும் அறுபடும் முத்து மாலைகளைக் கோப்போர் அச்சோலையில் இருந்தனர். சந்தனம் பூசுவோரும், தொய்யிற் குழம்பை எழுது வோரும், மலர் மாலைகளைக் கட்டுவோரும், அரச மாதரின் கூந்தலுக்கு நறுமணங்களை ஊட்டு

வோரும், வட்டக் கண்ணுடிகளை ஏந்தி நிற் போரும் ஆகிய அரண்மனைப் பணிப் பெண்கள் பலர் அங்குக் குழுமி இருந்தனர்.

### இயற்கையும் செயற்கையும்

அரண்மனைப் பூம்பொழிலில் குருந்த மரமும், செம்முல்லையும், அழகிய பூக்களையுடைய செருந்தி யும், மணம் வீசுகின்ற முல்லையும் ஒருபால் வளர்ந் திருந்தன. குறுகிய கால்களையுடைய' கீரிப்பிள்ளை கள், நீண்ட காதுகளையுடைய முயல்கள், பிறழ்ந்து பாயும் விழிகளையுடைய மான்கள், துள்ளிக் குதிக் கின்ற கலைமான்கள், கண்ணைக் கவரும் ஆடுகள் ஆகிய பலவும் ஆங்காங்கு விளையாடிக்கொண்டிருந் தன. பூம்பொழிலின் ஒருபால், நீரை நிறைக்க வேண்டுமாயின் நிறைத்துப் போக்க வேண்டு மாயின் போக்குதற்குரிய இயந்திரம் அமைந்த கிணறு ஒன்று இருந்தது. அதனையடுத்துச் செய் குன்று ஒன்று உயர்ந்து காணப்பட்டது. அதன் மீது மணந்தரும் மலர்ச்செடிகள் பயிராக்கப்பட் டிருந்தன. அச்செய் குன்றிலிருந்து அருவி ஒன்று கீழ்நோக்கிப் பாய்ந்தது. செய்குன்றின் மீது மலர்ப்பந்தர் ஒன்று பேரழகுடன் காட்சி யளித்தது. பொழிலில் ஆங்காங்கு பளிங்கறைகள் அமைந்திருந்தன.

### மணிமண்டபம்

அரசன் அரசியோடு வீற்றிருந்து பொழிலி னது இன்பத்தை நுகர்வதற்கென்று அமைந்த மண்டபம் விரும்பிக் காணத்தக்கது. அம்மணி மண்டபம் பசும்பொன்னுல் இயன்றது. மகத நாட்டுப் பிறந்த மணி வேலைக்காரரும், மகாராட்

புரத்திற் பிறந்த பொற்கொல்லரும், அவந்தி நாட்டுக் கொல்லரும், யவன நாட்டுத் தச்சரும், தமிழ் நாட்டுக் கட்டட அறிஞருடன் கூடி அம்மண்டபத்தை நன்முறையில் அமைத்தனர். அதன்கண் பவளத்தாற் சமைத்த தூண்களும், பலவகை மணிகளாலாகிய போதிகைக் கட்டைகளும் காணப்பட்டன. அம்மண்டபத்தைச் சுற்றிலும் முத்து மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மண்டபத்தின் மேற்கூரை அரிய வேலைப்பாடு கொண்டது. அது பொன்னால் வேயப்பெற்றது. மண்டபத்தின் தரை பசும்பொன் தகட்டால் பொலிவுற்று விளங்கியது.

## நூல் அறிமுகம்

இத்தகைய வருணனைகள் பலவற்றை மணிமேகலையென்னும் பெருங்காப்பியத்தில் காணலாம். ஐம்பெரும் காப்பியங்கள் என்று பாராட்டப்படும் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பவற்றுள் மணிமேகலை ஒன்று. இஃது ஒரு பௌத்த காவியம். இதனைச் செய்தவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர். இந்நூல் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவது. இதன்கண் முப்பது காதைகள் உள்ளன. இந்நூலில் பலவகை இயற்கை வருணனைகளும், பௌத்த சமயக் கொள்கைகளும், அக்காலத் தமிழர் பழக்க வழக்கங்களும் பிறவும் இடம் பெற்றுள்ளன. பாவன்மையிற் சிறந்த சாத்தனார் இந்நூலை இனிய எளிய தமிழ் நடையில் பாடியுள்ளார்.

## 10. போர்க்களக் காட்சி

**கவிஞர் :** அன்பர்களே! வாருங்கள்! வாருங்கள்! நமது கருணுகரத்தொண்டைமான் தலைமையில் நம் சோழ நாட்டு வீரர்கள் செய்திருக்கின்ற செயல்களைக் கண் திறந்து காணுங்கள்! இச் கலிங்கப் போர்க்களத்தில் நாம் காலடி எடுத்து வைத்தபொழுது நமக்கே ஒரு புத்துணர்ச்சி தோன்றுகிறதன்ரே ?

அதோ! ஒரு பெண்மணி துன்பம் தேங்கிய முகத்துடன் அங்கு நிற்பவரைப் பார்த்து, "என் கணவர் எங்கே? அவர் காணப்படவில்லையே! அவர் இறந்துவிட்டாரோ? சொல்லுங்கள்," என்று கேட்டு அழுகின்ருள். அங்கு நிற்பவர் பதில் கூறவில்லை. அம்மங்கைநல்லாள் பிணம் தின்னும் பேயினிடம் போகின்ருள். அப்பேயும் பதில் பேசவில்லை. அதனுல் அவள் வருந்திய முகத்துடன் அங்கும் இங்குமாக அலைகின்ருள். அவளது துன்பத் தோற்றம் நமக்கு எவ்வளவு வருத்தத்தை உண்டாக்குகின்றது!

இங்கு மற்ருெரு மங்கையைப் பாருங்கள்: இறந்து கிடக்கும் தன் கணவனது உடலைக் கண்டதும் பித்துப் பிடித்தவள்போலாகி அப்பிணத்தின் அருகே விழுகின்ருள்; பிணம் பேசாது என்பதையும் மறந்து பேசத் தொடங்குகிருள்; "நீ வாய் மடித்துக் கோபத்துடன் கிடக்கிருயே! பகைவன் மீது கொண்ட சீற்றத்தை என்மீதும் செலுத்துகிருயோ? நீ பேசாதிருப்பதற்குக் காரணமென்ன? சொல்," என்று உருக்கமாகக் கேட்கின்ருள்.

அவளது குரலில் அவலம் நிறைந்திருக்கின்ற தல்லவா ?

உங்களுக்கு எதிர்ப்புறத்தில் நோக்குங்கள் : ஏந்திழையாள் ஒருத்தி தன் கணவனது தலை மட்டும் களத்தில் கிடப்பதைப் பார்க்கிருள் ; "பொரு தடக்கை வாளோடு வெற்றிப் பெருமிதத் தோடு போர்க்களத்திலிருந்து நீ திரும்பி வரு வாய் ; உனது வீரப்பொலிவைக் கண்டு மகிழலாம் என்று ஆசை கொண்டிருந்தேனே ! நெடுநேரமாகி யும் நீ வரவில்லையே என்று ஏங்கி, உன்னைச் சந் திக்க இங்கு ஓடோடி வந்தேன் ; மலைமலையாகக் குவிந்துகிடக்கும் பிணங்களைப் புரட்டிப் பார்த் தேன். ' உன் பொன்னுடலம் அகப்படவில்லையே ! அகன்ற உனது மார்பு எங்கே ? ஒளி பொருந்திய உனது வாள் எங்கே ? மலைபோன்ற உன் தோளெங்கே ? இயம்ப மாட்டாயா ?" எனத் துடி துடிக்கின்ருள்.

வீரவுள்ளம் படைத்த இளைஞர்களே ! என்னைத் தொடர்ந்து வாருங்கள் ; பல காட்சிகளைக் காணலாம்.

[இளைஞர் பின் தொடர்ந்து செல்கின்றனர். கவிஞர் ஒவ்வொரு காட்சியாக விளக்குகின்ருர்.]

### வெண்காகம்

கருமை நிறம்கொண்ட காக்கைகள், வெண்மை நிறம்கொண்ட கொழுப்பினைப் போர்வையாகத் தம்மீது போர்த்துக்கொண்டிருக்கின்றன. இக் கொழுப்பு, வயிறு கிழிக்கப்பட்டு இறந்த வீரர் களின் கொழுப்பாகும். இவற்றைப் போர்த்துள்ள

கரிய காகங்கள் வெண்ணிறக் காக்கைகளாகக் காட்சியளித்தல் காணுங்கள்! காணுங்கள்!

**செம்மேகம்**

வீரர் ஒருவரோடு ஒருவர் போர் செய்தபோது அவர்தம் வாள்பட்ட உடற்பகுதியிலிருந்து இரத்தம் பீறிட்டு மேல்நோக்கி அடித்தது. அங்ஙனம் மேல்நோக்கிச் சென்ற குருதி கருநிற மேகத்தையும் செந்நிறமாக மாற்றிவிட்ட அற்புதத்தைப் பாருங்கள்!

**தாமரைப் பொய்கை**

கரிகள், பரிகள் இவற்றின் உடலிலிருந்து வெளிப்பட்ட இரத்தமும், வீரர் உடலிலிருந்து வெளிப்பட்ட குருதியும் குளத்து நீர்போலத் தேங்கிக் கிடக்கிறது. ஒடிந்து கிடக்கும் தேரில் சிறிய மொட்டுக்கள் அரும்புகளைப்போல் காண்கின்றன. மயிற்பீலியாலான குடைகள் வட்டமான இலைகளைப் போல் விளங்குகின்றன. இந்தப் புதுவகைப் பொய்கையின் பொற்பினை யாரே புகலவல்லார்!

**தீப்புகும் திருவன்னாள்**

தனக்கு உறுதுணையாக இருந்த யானை இறந்து கிடக்கிறது. அதன்மீது நிறுத்தப்பட்டிருந்த கொடிக்கு அந்த யானையைவிட்டுப் பிரிய மனமில்லை. அதனால் அதுவும் ஒடிந்து யானையோடு விழுந்து மாய்கின்றது. இந்நிகழ்ச்சி, கணவன் இறந்ததும் வாழ விரும்பாத பெண், நெருப்புப் படுக்கையை மலர்ப்படுக்கையாக மதித்து, அவனோடு இறப்பதைப்போல இருக்கின்றதன்றோ!

## ஏமாறும் ஏழைகள்

வீரர் சிலர் அரைமயக்கமுற்றுக் கிடக்கின்றனர். அவர்தம் ஊனினைத் தின்பதற்குப் பெரு விருப்பம் கொண்ட நரிகள் கூட்டம் கூட்டமாக அவர்களைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. பயன் என்ன? வீரர்கள் தம்மைச் சுற்றிச் சுற்றி நரிகள் வருகின்றனவே என்று மன இரக்கம் கொள்கின்றனரா? இல்லை, இல்லை. அவர்கள் அவற்றை விரட்டுகிறார்கள். ஈகையுள்ளம் இல்லாரை நச்சி ஏமாறும் ஏழைகள் கூட்டத்துக்கும் இந்த நரிக் கூட்டத்துக்கும் ஏதேனும் வேற்றுமையுண்டோ?

## விருந்தயரும் பெருந்தகையோர்

எண்ணிறந்த வீரர்கள் இறந்து கிடக்கின்றனர். பருந்துக் கூட்டமும் கழுகுக் கூட்டமும் இடைவிடாது வந்து அவர்தம் உடம்புகளை விருந்து உணவாக எண்ணிக் கொத்தித் தின்கின்றன. அந் நிலையிலும் தாமரை மலர்களைப் போன்ற அவர்தம் முகங்களில் வாட்டம் காணப்படவில்லை; மலர்ச்சியே காணப்படுகின்றது. இதற்கு எதனை உவமையாகக் கூறலாம்? வந்த விருந்தினரை முகம் மலர்ந்து, இன்சொல் கூறி வரவேற்று, இனிவரும் விருந்தை எதிர்நோக்கி மகிழ்ந்திருக்கும் செல்வரை இதற்கு உவமையாகக் கூறலாம்.

## கவிஞர் : படகோட்டி

எண்ணிறந்த கரிகளும் பரிகளும் வீரர்களும் போரிட்டு மடிந்த இக்களத்தில் குருதி வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இவ்வெள்ளத்தில் நிற்கும்

தேர் நீரில் நிற்கும் படகைப்போல் காட்சியளிக்கின்றது. தேர் என்னும் படகின்மீது நின்று கொண்டு மார்பில் தைத்த வேலைப் பிடுங்கித் துடுப்பாகக் கீழே ஊன்றிப் பிடித்துக்கொண்டிருக்கும் தேர் வீரர், படகோட்டியைப்போலக் காட்சியளிப்பதைப் பாருங்கள்.

**காளம் ஊதிகள்**

வீரர்கள் போர் புரியும்பொழுது பகைவர்விடும் அம்புகள் அவர்தம் தோள்களைத் துளைக்கின்றன; மார்பில் ஊடுருவுகின்றன. தொடைகளில் தைக்கின்றன. வேல்களும் அங்ஙனமே. வாயில் வேல் தைக்கப்பெற்ற வீரர், அவற்றைத் தம் வலக் கையால் பிடித்துக்கொண்டு கீழே விழுந்து மடிகின்றனர். வாயில் தைக்கப்பெற்ற வேலைக் கையில் பிடித்துக்கொண்டுள்ள வீரர், காளம் ஊதுகின்றவரைப் போலக் காணப்படுகின்றனர். இத்தகைய காளம் ஊதிகளைக் காணுங்கள். இப் போர்க்களம் விழிகட்கு எவ்வளவு விருந்தளிக்கின்றது!

இளைஞர்கள்: இல்லை, இல்லை. இப்போர்க்களம் விழிகட்கு மட்டும் விருந்து அளிக்கவில்லை. கருத்துக்கும் விருந்து அளிக்கின்றது. கவிஞரே! இதென்ன செத்துக் கிடக்கும் பருந்து! அதன் பக்கத்திலே கொழுப்பும் அம்பும் கிடக்கின்றன!

கவிஞர்: வேறொன்றுமில்லை. இஃது ஏமாந்த பருந்து.

இளைஞர்: ஏமாந்த பருந்தா! எப்படி?

கவிஞர்: கேளுங்கள்; இங்குக் கிடக்கும் அம்பின் தோற்றமே தெரியாமல் இக்கொழுப்பு அத்னை மூடிக்கொண்டு இருந்தது. உண்மை தெரி

யாத இப்பருந்து, 'இது நமக்கு ஏற்ற உணவு' ஏன்று எண்ணி மகிழ்ந்து, ஆவலோடு, அதைக் கொத்திக்கொண்டு மேலே பறந்தது. பாதி வழி செல்லும்பொழுது, கொழுப்பால் மூடப்பட்டிருந்த அம்பு பருந்தைப் பதம் பார்த்துவிட்டது.

இளைஞர் : கவிஞர் பெருமானே! நிகழ்ச்சியைத் தெரிந்துகொண்டோம்.

கவிஞர் : நமது சோழநாட்டில் நாம் கழைக் கூத்தாடிகளைப் பலமுறை பார்த்திருக்கிறோம் அல்லவா? அவர்கள் மூங்கிலை நட்டு அதைச் சுற்றிக் கயிறுகளைப் போட்டு இழுத்துக் கட்டியிருப்பார்கள். அந்த மூங்கில் போன்றவன் இங்கு வீழ்ந்து கிடக்கும் வீரன். இவ்வீரனின் உடம்பு முழுவதும் தைத்திருக்கும் வேல்கள் கயிறுகள் போன்று இருக்கின்றன அல்லவா?

அன்பர்களே! அங்குப் பாருங்கள். போரில் புறங்காட்டி ஓடிய வீரர்கள் சமணத் துறவிகளைப் போல வேடமிட்டுக்கொண்டு நம் வீரரிடமிருந்து தப்ப முயல்கின்றனர். வேறு சிலர் உடம்பெல்லாம் நீறு பூசிச் சிவனடியார் என்று கூறிக்கொண்டு தப்ப முயற்சி செய்கின்றனர். பாவம்! கலிங்க நாட்டு வீரரை இந்நிலைக்குக் கொணர்ந்த கலிங்க அரசனது அறிவீனம் எண்ணி இரங்கத் தக்கதாகும்.

இளைஞர் : புலவர் பெரும! இப்போர் நிகழக் காரணம் யாது?

கவிஞர் : அன்பனே, நமது சோழப் பேரரசராகிய குலோத்துங்கருக்குப் பல நாட்டு மன்னர்கள் திறை செலுத்தி வருகின்றனர். அங்ஙனம் ஆண்டுதோறும் திறைசெலுத்த வேண்டும் மன்ன

ருள் கலிங்க மன்னனும் ஒருவன். அங்ஙனமிருந்தும் இவ்வேந்தன் சில ஆண்டுகளாகத் திறை செலுத்தவில்லை.

நமது சோழர் பெருமான் தமது பெருநாட்டைச் சுற்றிப் பார்த்து வருகையில், காஞ்சி மாநகரில் உள்ள அரண்மனையில் தங்கினார். அப்பொழுது அரசர் பலர் வந்து பணிந்து, தாம்தாம் செலுத்தவேண்டும் திறைப் பணத்தைச் செலுத்தினர். "இன்னும் திறை செலுத்தாத வேந்தர் உளரோ?" என்று நம் பேரரசர் வினவினார். உடனே அரசாங்கக் கணக்கர் அடிபணிந்து, "கலிங்க வேந்தர் சில ஆண்டுகளாகத் திறை செலுத்தவில்லை," என்று கூறினர். உடனே குலோத்துங்கர் சீற்றம்கொண்டு தம் தானைத் தலைவராகிய கருணாகரத் தொண்டைமானை நோக்கினார். அந்நோக்கத்தின் குறிப்புணர்ந்த கருணாகரர் தம் வீரர்களை நோக்கினார். அவ்வளவே; உடனே கருணாகரர் நெற்றிப் பட்டத்தை அணிந்த தம் யானைமீது ஏறினார். தென்னாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவந்த பண்பட்ட சோழர் படை ஆர்த்தெழுந்தது; அணிவகுத்து நின்றது; கருணாகரர் யானைமீது முன் செல்ல, சோழர்படை கலிங்கம் நோக்கிப் பின் சென்றது; வழியில் பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, பெண்ணை, மண்ணாறு, கிருஷ்ணை, கோதாவரி முதலிய ஆறுகளைக் கடந்து சென்றது; இறுதியில் கலிங்க நாட்டினுள் சென்றது; தன் வழியிலிருந்த கலிங்க நாட்டுச் சிற்றூர்களையும் பேரூர்களையும் அழித்துக் கொண்டே சென்றது.

எதிர்பாராத இத்துன்ப நிலையைக் கண்ட

கலிங்கக் குடிகள் உடல் பதைக்க, உரை குழறத் தம் வேந்தனிடம் விரைந்தோடிச் சென்று சோழர் படை கலிங்க நாட்டிற் செய்துவரும் கேட்டினை விளக்கினர்.

### காவலன் சீற்றம்

அரியணைமீது இளஞ்சிங்கம் வீற்றிருந்தாற் போலப் பெருமிதத்துடன் கொலு வீற்றிருந்த கலிங்க மன்னன் கலகலவென நகைத்தான்; அவனது மீசை துடித்தது. புருவங்கள் நெற்றி முற்றச் சென்றன. விழிகள் சிவந்தன. அவன் தன் அமைச்சரை நோக்கி, "என்ன வேடிக்கை! சோழப் பெருவேந்தரது படை இவ்வளவு ஆண்மை யுடன், நமது நாட்டிற்குள் புகுந்து நாட்டைப் பாழ் படுத்த அதற்கு எங்ஙனம் துணிச்சல் வந்தது? இக் கலிங்கநாடு கானரணும் மலையரணும் கடலர ணும் உடையது என்பதை அறிந்தும் அப்படை துணிந்து இங்கு வந்திருத்தல், அதன் அறிவீனத் தையே காட்டுகின்றது. அப்படைக்கு நல்ல பாடம் கற்பிப்பது நமது கடமை" என்று போர்க் கெழுந்தான்.

### அமைச்சன் அறிவுரை

அப்பொழுது அவன் அமைச்சருள் அறிவாற் றல் மிக்க எங்கராயன் என்பவன் எழுந்து பணிந்து, "பெருமானே, சோழப் பேரரசரது படை மிக்க வன்மை வாய்ந்தது. அப்படை பாண்டியரை வென்றது; சேரரை அடிமைப் படுத்தியது; மேலைச் சளுக்கியரை அலற வைத்தது; பிற தென் னாட்டு அரசர்களை எல்லாம் தலைவணங்கச் செய்

தது ; அப்படையை நடத்தி வந்துள்ள கருணகரத் தொண்டைமான் இணையற்ற பெருவீரன். ஆத லால் நாம் சோழர் படையை வெல்லுதல் எளி தன்று. கருணகரருடன் நட்புக் கொண்டு திறை செலுத்துவதே நேர்மையானது,'' என்று அறி வுரை புகன்றான். மூர்க்கனும் முதலையும் கொண் டவை விடா அல்லவா ? கலிங்க மன்னன் அமைச் சன் அறிவுரையைக் கேட்கவில்லை ; தன் படை களைத் திரட்டிக் கொண்டு சோழர் படையை எதிர்த் தான். அதன் விளைவே **கலிங்கப்போர்**. கலிங்க வீரருள் பெரும்பாலோர் உயிரிழந்தனர். ஒரு சிலர் பலவகை வேடங்களில் தப்பிப் பிழைத்தனர். ஒரு சிலர் சோழ வீரர்க்கு முதுகுகாட்டி ஓடினர். முதுகிட்ட இக்கலிங்க வீரரைத் தாக்காது விட் டனர் சோழவீரர். முதுகுகாட்டி உயிர் பிழைத்த கலிங்கவீரர் உயிர் கொடுக்கும் அறம் புரிந்த புற முதுகின் பேருதவியை மறவாது எண்ணி எண்ணி இன்புற்று அம்முதுகிற்கு என்றும் நன்றி செலுத் திக்கொண்டு வாழ்ந்தனர். சிங்கம் போன்ற கருண கரர்க்கு முன் பூனை போன்ற கலிங்க மன்னன் எதிர் நிற்றல் இயலுமோ ? போரில் தோற்றோடிய கலிங்கக் காவலன் மலைக்குகை யொன்றில் ஒளிந்து கொண்டனன். பாவம் ! சோழர் படை அவனை அங்கும் விடவில்லை. அவனைப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டது.

கலிங்கப் போர்க்களத்தில் கரிகளும் பரிகளும் உயிரிழந்தன ; வீரர்கள் ஆவிதுறந்தனர். கலிங்க நாடு ஆண்கள் இல்லாத நாடாயிற்று. அரசனது அறிவீனத்தால் கலிங்கநாடு போர்க்களமாயிற்று. பிணங்களைத் தின்னும் பேய்கள் போர்க்களத்தில்

சோழர் பெருமானை வாழ்த்திப் பாடுகின்றன; நடனமாடுகின்றன. அவை,

“பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருநைக் கரையனை வாழ்த்தினவே
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
கங்கை மணாளனை வாழ்த்தினவே.”

**இளைஞர் :** இன்பக் கவிஞரே, கவிஞன் வாழ்வின் பயனாக விளங்குகின்றான் என்பதை இப்பொழுதுதான் உணருகின்றோம். மணமில்லாத மலர், தலைவன் இல்லாத நாடு, கவிஞன் இல்லாத வாழ்க்கை பயனற்றவை. வாழ்வில் கவிதைச் சாறு கொடுத்து உணர்ச்சியை ஊட்டுகிறான் கவிஞன் என்பதை உணருகிறோம். காலத்தைப் பொன் போலக் கருதும் நீங்கள் எங்கள் கருத்து வளர்ச்சியில் நாட்டம் கொண்டு, எங்களுடன் போர்க்களத்துக்கு வந்து பலவிளக்கங்கள் கொடுத்தது குறித்து நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கவிஞர் :** உங்களுக்கு எம் நல்வாழ்த்து உரியது.

## நூல் அறிமுகம்

மேலே விளக்கப்பட்ட போர்க்களக் காட்சி “கலிங்கத்துப்பரணி” என்னும் தமிழ் நூலிலிருந்து கொடுக்கப்பட்டதாகும். இந்நூலைப் பாடிய புலவர் பெருமான் சயங்கொண்டார் என்பவர். அவர் முதற் குலோத்துங்க சோழனது அவைக்களப் புலவர். அவ்வேந்தப் பெருமான் கி. பி. 1070-முதல் 1120 வரை சோழப் பேரரசனாக இருந்தவன். அவன் காலத்தில் நிகழ்ந்த கலிங்கப்

போரை விளக்கிக் கூறுவதே கலிங்கத்துப்பரணி என்னும் நூலாகும். இந்நூலில் சோழ அரசர் வரலாற்றுச் செய்திகளும், போரைப்பற்றிய குறிப்புக் களும், போர்க்கள வருணனைகளும், காளி கூளி களின் (பேய்களின்) உரையாடல்களும், போர்க் களத்தில் கூளிகளின் ஆரவாரமும் வாழ்த்தும் இன்னபிறவும் புலவர் பெருமானால் நன்கு விளக்கப் பட்டுள்ளன. தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வரிய நூலைப் படித்து இன்புறக் கடமைப் பட்டவராவர்.

# 11. காதலும் கடமையும்

## 1. காதல் மணம்

**காதலர் சந்திப்பு**

மிதிலை நகரத்தில் அகன்ற தெருக்கள் பல உண்டு. அவற்றுள் ஒரு தெருவின் வழியே ஒரு நாள் மாலையில் முனிவரொருவரைப் பின் தொடர்ந்து கட்டிளங் காளையர் இருவர் சென்றனர். முனிவர் ஏறத்தாழ ஆறடி உயரம் இருந்தார். அவரது பருத்த தோள்களும், விரிந்த மார்பும், பொலிவுற்ற முகமும் அவர் அரச மரபினர் என்பதை அறிவித்தன. அவரது காவி உடையும், கண்கவர் தாடியும், நரைத்த சடை முடியும் அவரை முனிவர் என்று கருதச் செய்தன. அவர் யார்? அரசராக இருந்து முனிவராக மாறிய **விசுவாமித்திரரே** அவர். அவரை அடுத்துச் சென்ற இளைஞர் இருவருள் மூத்தவன் கரிய செம்மல்; மற்றவன் உயரத்திலும் உடலமைப்பிலும் அவனினும் இளைஞனாகத் தோற்றமளித்தான்; அவன் செந்நிறத் தோன்றல்.

இம்மூவரும் நடந்து சென்ற தெரு அரச மரபினர் வாழ்ந்துவந்த தெருவாகும். மூவரும் அத்தெருவிலிருந்த வானளாவிய மாடங்களையும் கூடங்களையும் கண்டு சென்றனர். ஒரு மாடத்தின் மீது அன்னப் பறவைகள் விளையாடிக்கொண்டிருந்தன. கரிய செம்மல் அவற்றைக் கண்ணுற்றான். அன்னங்களின் விளையாட்டைப் பார்த்த வண்ணம் வளமனை மேல் முற்றத்தில் நின்று கொண்டிருந்த ஓர்

இளநங்கை தெருவிற் சென்று கொண்டிருந்த கரிய செம்மலை உற்று நோக்கினுள். அவ்விளை ஞனும் அம்மங்கை நல்லாளை மலர் முகத்தோடு நோக்கினுன். அவனது நடை தளர்ந்தது. இதற்குள் முனிவரும் மற்ருேர் இளைஞனும் முன்னேக்கிச் சென்று கொண்டிருந்தனர். தனித்த நிலையில் மெதுவாக நடந்து கொண்டே கரிய செம்மல், அன்னப் பறவைகளைப் பார்க்கும் குறிப்பில் அங்கயற் கண்ணியை அகங்குளிர நோக்கினுன். இவ்வாறு அண்ணலும் நோக்கினுன் ; அவளும் நோக்கினுள்.

## தனித்த நிலையிற் காதலர்

தன்னுடன் வந்த முனிவரும் தம்பியும் தன்னை விட்டு முன்செல்வதைக் கண்ட கரிய செம்மல் சிறிது விரைந்து நடந்தான். மாடிமீதிருந்த மங்கையர் திலகம் மாடியிலிருந்த கைப்பிடிச் சுவரைப் பற்றிக்கொண்டு, அக்கரிய செம்மலின் பின்னழகைப் பார்த்து நின்ருள். சிறிது நேரத்திற்குள் அவ்வீரன் அவள் பார்வையினின்று மறைந்தான்.

இவ்வாறு மிதிலை நகரப் பெருந்தெருவில் முனிவர் பின்னே நடந்து சென்ற இளைஞர் யாவர்? அவர் இருவரும் அயோத்தி அரசனுன தசரதனுக்குத் தவமைந்தர். அவருள் கரிய செம்மலே **இராமன்** என்பவன் ; செந்நிறத் தோன்றல் **இலக்குவன்**. இவ்விருவரும் முனிவரது வேள்வி காக்க வந்தனர். விதேக நாட்டு வேந்தனுன சனக மன்னன் மகளான **சீதைக்குத்** திருமணம் என்று கேள்வியுற்று, முனிவர் இளைஞர் இருவரையும் மிதிலைக்கு அழைத்து வந்தார். வந்த அன்றிரவு மூவரும் ஒரு முனிவரது தவச்சாலையில் தங்கினர்.

விசுவாமித்திரர் அங்கிருந்த முனிவருக்கு இளை ஞரை அறிமுகப்படுத்தினர்.

இராமன் அன்றிரவு முழுவதும் உறங்கவில்லை. கன்னி மாடத்துக் கட்டழகியின் உருவம் அவன் விழிகட்கு எதிரில் நின்றது. "இவள் யார்? இவள் என் வாழ்க்கையை வளப்படுத்தும் துணைவியாக அமைவாளோ?" என்று இராமன் ஏங்கினன். அதே இரவில் சீதை இருந்த கன்னிமாடத்திலும் சிலர் தூங்கவில்லை. அவர்கள் யார்? அவர்கள் சனகன் தவ மகளான சீதையும் அவள் பணிப் பெண்களுமே ஆவர். "என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அக்கட்டழகர் யாவர்? அவரை என் வாழ்க்கைத் துணைவராகப் பெறுதல் வாய்க் குமோ? என்று சீதை தன்னுள் ஏங்கினள்.

## வில்லும் வேந்தரும்

மறுநாட் காலையில் மிதிலை நகரம் பேரழகுடன் விளங்கியது. சனகன் வைத்திருந்த சீரிய வில்லினை ஒடித்துச் சீதையை மணக்க வேண்டும் என்று மட் டற்ற ஆவலுடன் அரசர் பலர் அந்நகரில் குழுமி யிருந்தனர். குறித்த நேரத்தில் மிகப்பெரிய மண் டபத்தில் பலநாட்டு வேந்தர்கள் தம்மை அலங் கரித்துக்கொண்டு வீற்றிருந்தனர். கோசிக முனி வரோடு சென்ற இராமனும் இலக்குவனும் அம்மணி மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்.

வந்திருந்த வேந்தருள் ஒவ்வொருவரும் வில்லை வளைத்து விதேகன் மகளை மணம் புரிந்து இன் புற்று வாழலாம் என்று மனக்கோட்டை கட்டினர்; ஒவ்வொருவராக வந்து வில்லை வளைத்து ஒடிக்க முயன்றனர்; அம்முயற்சியில் பலவாறு அவமானப்

பட்டுத் தம் இருக்கையை அடைந்தனர். இங்ஙனம் மணிமுடி தரித்த மன்னர் அனைவரும் வில்லை வளைத்து ஒடிக்க முடியாது திணறியதைக் கண்ட இராமன், கலகலவென நகைத்தான். அவ்வமயம் அருந்தவ முனிவரான கோசிகர் அவனைக் குறிப் பாக நோக்கினர். அந்நோக்கத்தின் குறிப்பை உணர்ந்த இராமன் எழுந்தான் : எவராலும் அது காறும் வளைக்க முடியாதிருந்த வில் இருந்த இடத்தை நோக்கி அரியேறு போல நடந்தான் ; அவ்வில்லினை எடுத்தான். பிறகு என்ன நடந்தது என்பதை ஆண்டிருந்தோர் அறியவில்லை. வில் ஒடிந்தபொழுது உண்டான ஓசையே அவர்தம் செவிகளைத் துளைத்தது.

## எல்லையற்ற உவகை

ஒரு வீரன் வில்லொடித்தான் என்ற செய்தி சீதைக்கு எட்டியது. "ஒடித்தவர் யார் ?" என்று அம்மங்கை ஆவலோடு கேட்டாள். அப்போது அவள் உள்ளம், தான் முன்னுள் கண்ட கரிய செம்மலாகிய இராமன்மீது பதிந்திருந்தது. அவ் விளைஞனே ஒடித்திருப்பானே என்று தன்னுள் எண்ணினுள். அவ்வமயம் செய்தி கூறவந்த அவளது தோழி, "ஒரு முனிவரோடு இளைஞர் இருவர் வந்தனர். அவ்விருவருள் காயாம்பூவண்ண ராக இருந்தவரே வில்லை ஒடித்தார்," என்று கூறி னுள். அவள் கூறியது, சீதைக்குச் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தாற் போல எல்லை யற்ற இன்பத்தை அளித்தது. அவளது உள்ளத் தில் ஒருவராலும் கரைசெய்ய அரியதொரு பேரு வகைக் கடல் பெருகியது. அவள் முகம் அன்

மலர்ந்த செந்தாமரை மலரினை வென்றது. தன் உ...ளங் கவர்ந்த கள்வனே தன் வீரத்தைக் காட்டித் தன்னை மணந்து கொண்டான் என்பதை எண்ண எண்ண, அவள் பேருவகை பெற்றாள்.

### தமிழ் மரபு

இக்காட்சியை நமது தமிழ்ப்பெரும் புலவராகிய கம்பர் பெருமான் தாம் இயற்றிய 'இராம காதை' யில் அழகுற விளக்கியுள்ளார். இராமன் வில்லை ஒடிப்பதற்கு முன் சீதையைக் கண்டு காதல் கொண்டதாக வடமொழியில் இராம காதை வரைந்த வான்மீகி முனிவர் கூறவில்லை. தமிழ் நூல்களில் திருமணத்திற்கு முன், காதலர் தம் களவு மணத்தைக் கூறுதல் மரபு ஆதலின், தமிழராகிய கம்பர் தமிழர் திருமண முறையை இராமனது திருமணத்தில் புதுவதாகப் புகுத்தி 'மிதிலைக் காட்சிப் படலம்' என ஒரு படலத்தைத் தாமே கற்பித்துக் கொண்டார். இங்ஙனம் தமிழ் நெறி பற்றி அவர் புதியனவாக அமைத்துக் கொண்ட காட்சிகள் இராம காதையில் பல உண்டு.

## 2. கடமை யுணர்ச்சி

### இராவணன் இழைத்த தீமை

இராவணன் எல்லாக் கலைகளிலும் வல்லவன்; சிறந்த சிவபக்தன். அவனுக்குத் தேவரும் மக்களும் அஞ்சி நடந்தனர். இத்தகைய பெரியோன், 'பிறன் மனைவி நயத்தல்' என்னும் குற்றத்திற்கு ஆட்பட்டான்; இராமன் மனைவியான சீதையை விரும்பி அவளது பேரழகில் ஈடு

பட்டான்; அவளை மனைவியாக்க விரும்பினான்; அவளைக் கொணர்ந்து, இலங்கையில் சிறை வைத்தான்.

மனைவியை இழந்த இராமன் வானரர்களின் துணையைக் கொண்டு, சீதை சிறை வைக்கப்பட்டிருந்த இடத்தைக் கண்டறிந்தான். சீதையைக் காணச் சென்ற அநுமன் இலங்கைக்கு எரியூட்டி மீண்டான். எழில் மிகுந்த இலங்கை மாநகரம் அநுமன் மூட்டிய எரியால் அழகிழந்தது. இராமன் இராவணன்மீது போர் தொடுத்து இலங்கையை வெல்லத் துணிந்தான்.

**கும்பகருணன் அறிவுரை (I)**

இராவணன் மனம் வருந்தி, மேற்கொண்டு யாது செய்யலாம் என்பதை அறியத் தன் அமைச்சரையும், தம்பியரையும், படைத் தலைவரையும், தன் மைந்தனை மேகநாதனையும் அழைத்து யோசனை கேட்டான். பலர் பலவாறு கூறினர். கும்பகருணன் இராவணனுக்கு அடுத்த தம்பியாவான். அவனுக்குப் பின்னவன் வீடணன்.

கும்பகருணன் அறநெறி பிறழாதவன். அவன் தானாகப் போருக்குப் போவதில்லை; வந்த போரையும் விடுவதில்லை. அவன் பெருவீரன்; அஞ்சா நெஞ்சினன்; நற்பண்புகள் அனைத்தும் உருக் கொண்டாற் போன்றவன். அவன் தமையனைத் தன் உயிரெனக் கருதினான்; அவனது நலத்தைத் தன்னலமாக மதித்தான். அப்பெரியோன் தனது யோசனையைக் கேட்ட தமையனை நோக்கி, "அண்ணா, பிரமதேவனை முதல்வனாகக் கொண்ட நம் குலத்தில், நீ ஒப்பற்றவன். நீ சாம

வேதத்தினைப் பழுதறப் படித்தவன். ஆயின், பிறன்மனை நயத்தல் என்னும் பெருங் குற்றத்திற்கு ஆட்பட்டு விட்டாய். ஓவியம் போல் மிக்க அழகாக அமைந்திருந்த இலங்கை மாநகர் எரியால் பழுது பட்டது என்று மனம் வருந்துகிறாய். பிறன் மனைவியைச் சிறையில் வைத்த செயல் ஏற்றதோ? அழகிய நகரம் அழிந்து விட்டதே என்று கவலைப் படுகின்றாய். உனது உயிர் என்று சொல்லத்தக்க மனைவிமார் உன்னை எப்பொழுதும் இன்புறுத்தக் காத்துக்கொண்டிருக்கின்றனர். அந்நிலையில், நீ வேறொருவன் மனைவியை விரும்பி அவள் பாதங் களில் பலமுறை பணிதலும் அவள் மறுத்துக் கூறு வதைக் கேட்டிருத்தலும் உனக்குப் புகழைத்தரும் செயல்கள் ஆகுமோ? என்று இரக்கமின்றிப் பிறன் மனைவியை வலியத் தூக்கி வந்து சிறை வைத் தாயோ, அன்றே அரக்கர் புகழ் அழிந்து விட்டது. ஐயனே, அற்பத் தொழிலைச் செய்தவர் புகழ் பெறுதல் முடியுமோ? பிறன் மனைவியைச் சிறை யில் அடைத்தோம்; அச்செயலோடு நற்புகழையும் விரும்புகிறோம்; மானத்தைப் பற்றி வளமாகப் பேசுகிறோம். நமது இச்செயல் நன்றாகுமா?

"அருமை அண்ணா, நீ பெரியோர் செய்யும் செயலைச் செய்தாயில்லை; நமது மரபுக்கு இழிவு தரும் செயலைச் செய்து விட்டாய்; இந்நிலையில் சீதையை விட்டுவிடின், இராமனுக்கு அஞ்சி விட்டு விட்டோம் என்று எல்லோரும் நம்மை ஏளனம் செய்வர். சீதையை விடாமையால் அம்மானிடர் நம்மைப் போரில் வென்றிட நாம் இறத்தல் நல்லது. அவ்வாறு இறப்பதனால் பழி உண்டாகாது. பெரு வீரனான இராமனை எதிர்த்து நிற்க வேண்டுவதே

முறை. இப்பொழுது இதைவிட நாம் செய்யத் தகுவது வேறு இல்லை. இராமனுக்குப் படை வன்மை வரவர மிகுதிப்படும். அங்ஙனம் மிகுதிப் படும் முன் நாம் உடனே போரை மேற்கொண்டு, முதலில் வானர வீரரை ஒழித்துவிட வேண்டும்,'' என்று அறிவுரை புகன்றான்.

## வீடணன் அடைக்கலம்

கும்பகர்ணனைப் பின்பற்றி வீடணனும் இராவணனுக்கு அறிவுரை கூறுகையில், ''பெரு வீரனான இராமனை எதிர்த்து நிற்றல் தவறு. அவன் மனைவியை அவனிடம் விடுத்துச் சமாதானமாகப் போவதே சிறந்த செயல்,'' என்று உரைத்தான். பின் விளைவை அறியாதிருந்த இராவணன் செவிகளில் இவ்வறிவுரை புகவில்லை. தமையனின் தகாத செயலை வெறுத்த தம்பியான வீடணன், இராமனிடம் அடைக்கலம் புகுந்தான்.

## கும்பகருணன் அறிவுரை (II)

இராவணன் பிடிவாதத்தால் போர் மூண்டது. போரில் இராவணனுக்கு உற்ற துணைவராக இருந்த அரக்கவீரர் பலர் இறந்துபட்டனர். உறங்கிக் கொண்டிருந்த கும்பகருணனை இராவணன் எழுப்பி, அவனுக்குப் போர்க் கோலம் புனைவித்தான்; பகைவர் நமது கோநகரத்தை முற்றுகை செய்துள்ளனர். நீ சென்று அவரை வென்று வா '' என்று அன்போடு கூறினான்.

சிறந்த ஒழுக்கமுடைய கும்பகருணன் அது கேட்டு மனம் வருந்தினான். அச்சீரியோன் தன் தமையனை நோக்கி, ''கொடிய போர் தோன்றி

விட்டதா? சீதையின் துயரம் இன்னும் நீங்க வில்லையா? நிலவுலகத்திலும் வானுலகத்திலும் வளர்ந்திருந்த உனது புகழ் போய்விட்டதா? அரக்கர்க்கு அழிவு காலம் வந்து விட்டதா? இப் போர் ஒரு பெண் காரணமாக எழுந்ததன்றோ? இது விதியின் செயலே! ஐயனே, உலகினைப் பேர்த்தெடுக்கலாம்; அவ்வுலகத்திற்கு வரம்பு அமைக்கவும் சொல்லலாம்; ஆனல் இராமனை வெல்லலாம் என்பதோ, சீதையை மனைவியாக்க லாம் என்பதோ நடவாத செயல்கள். புலத்திய முனிவரை முதல்வராகக் கொண்ட நமது மரபின் மேன்மை உன்னால் அழிந்தது. அறநெறி தவறி நடக்கும் உனக்கு வெற்றி எவ்வாறு கிடைக்கும்? உனது இத்தீச் செயலால் உன் சுற்றத்தாரைக் கெடுத்து விட்டாய். மனம், வாக்கு, செயல் என்னும் மூன்றாலும் தூய்மை உடையவரிடமே அறம் தங்கியிருக்கும். அம்மூன்றும் உன்னிடம் தவறி விட்டன. ஆதலால் அறம் என்பது உனக்கு அஞ்சி ஒளித்துக் கொண்டது.

பெருமானே, யான் உனக்கு ஒன்று கூறு வேன்; நீ அதனைத் தெரிந்துகொள்வது நல்லது. அதனை விரும்பாது விடுவையாயின், நீ அழிந்தவ னாகவே கருதிக்கொள். நமது மாநகரத்தை அழித்த குரங்கு இராமனுக்குத் துணையாக இருக்கின்றது. சீதையும் சிறையிலே இருக்கின்றாள். வாலியைக் கொன்ற அம்புகள் காத்துக்கொண்டிருக்கின்றன. அவற்றை ஏற்கும்படி நாமும் இருக்கின்றோம். இனி நமக்கு என்ன குறை இருக்கின்றது! சீதையை விட்டு இராமனைச் சரணடைந்து, அவ னிடம் அடைக்கலம் பூண்ட வீடணனோடு அளவ

ளாவி இருத்தல் உயிர் பிழைப்பதற்குரிய வழி யாகும். அவ்வாறு செய்யாவிடின், நீ செய்ய வேண்டும் வேறு செயல் எது? அணி அணியாகச் சேனைகளை ஏவி அவை மாண்டொழிவது கண்டு நீ இங்கு இருந்து வருந்துதல் தக்கதன்று. நமது வலிமை முழுவதையும் ஒன்று சேர்த்துப் பகைவர் மீது செலுத்துவதே ஏற்ற செயல்'' என்று விளக்க மாக உரைத்தான்.

அவ்வுரையைக் கேட்ட இராவணன் பொங்கி எழுந்தான். சீற்றத்தால் அவன் விழிகள் சிவந்தன. அவன் கும்பகருணனை நோக்கி, "நான் உன்னை யோசனை கேட்கவில்லை. எனக்கு அறிவுரை கூற நீ அறிவு படைத்த அமைச்சன் அல்லை; நீ பகை வர்க்கு அஞ்சுகிறாய்; உனது வல்லமையை இழந்து விட்டாய். மானிடர் இருவரை வணங்கி அவர்க்கு அடிபணிந்து நிற்கும் குரங்கையும் கும்பிட்டு உயிர் வாழ்தல் என்னால் இயலாது. அஃது உனது தம் பிக்கும் உனக்குமே ஏற்ற செயல். நீ எழுந்து செல்; என் முன் நில்லாதே; நானே போருக்குப் போவேன்,'' என்று எழுந்தான்.

## இறுதி உரை

தமையனது சீற்றம் கண்ட தம்பி உள்ளம் குழைந்தான். சகோதர வாஞ்சை அவன் உள் ளத்தைக் கொள்ளைகொண்டது. அவன் தன் தமையனின் பாதங்களைப் பணிந்தான். "அண்ணா, என் பிழையைப் பொறுத்துக்கொள்; நான் இறுதி யாகக் கூறுவதைக் கேள்: நான் போருக்குச் செல்கின்றேன். வெற்றி பெற்று இங்கு மீண்டு வரு வேன்என்று சொல்லமாட்டேன். விதி நிற்கின்றது;

போர்க்களம் செல்லுமாறு என்னைப் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. நான் பெரும்பாலும் போரில் இறப்பேன். நான் இறந்த பின்பாவது நீ சீதையை விட்டுவிடுதல் நல்லது. இந்திரனுக்குப் பகைவனாகிய மேகநாதன் இலக்குவன் அம்பினால் இறப்பது திண்ணம். நமது படை காற்றினால் வீசப்பட்ட துரும்புபோல எதிரிகட்கு முன்னர்ப் பறந்து போகும். இந்நிகழ்ச்சிகட்குப் பின்னராவது நீ நற்செயலைச் செய்ய வேண்டுகிறேன். என்னை வெல்லும் பகைவர் உன்னை வெல்லுதல் உறுதி. ஆதலால், நான் இறந்த பின்னராவது சீதையை விட்டுவிடு.

பெருமானே, "நான் இனி உன் முகத்தில் விழித்தல் அருமையாகும். ஆதலால், நான் இன்று வரை அறிந்தோ அறியாமலோ குற்றங்கள் செய்திருந்தால், அவற்றைப் பொறுத்தருளும்படி இப்பொழுதே வேண்டுகிறேன். நான் விடைபெறுகிறேன்," என்று இராவணனும் கண் கலங்கும்படி உருக்கமாக உரைத்துப் போர்க்களம் புகுந்தான்.

## மானவீரன் மனவுறுதி

சீரிய ஒழுக்கமுடைய கும்பகருணனைத் தன் பக்கம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இராமன் கருதினான்; அதனால் வீடணனைக் கும்பகருணனிடம் அனுப்பினான். வீடணன் தன் தமையனைக் கண்டு, "அண்ணா, கொடிய தமையன் பொருட்டு நீ ஏன் உயிரைவிட வேண்டும்? நீ இராமனை அடைந்தால், இராவணன் இறந்தபின் இலங்கைக்கு நீயே அரசனாகலாம். யான் உன் அருகி

லிருந்து உதவி புரிவேன்,'' என்று இதமாக இன் மொழி இயம்பினுன்.

ஒழுக்கத்திற் சிறந்த கும்பகருணன் தன் தம்பியை மார்போடணைத்து, விழிநீர் வார, அவனை ஆசீர்வதித்தான்; பின்பு அவனை நோக்கி,

'' தம்பி, பின் விளைவு அறியாது தலைவன் தீய செயலைச் செய்யக் கருதினுல், அவனைத் திருத்து தல் நமது கடமை; திருத்த முடியவில்லையாயின், நாம் அவன் பகைவரைச் சேர்தல் முறையன்று. அவனது உணவையுண்ட நாம் அவனுக்கு முன் பாகப் போரில் இறத்தலே ஏற்புடைய செயல். தேவரும் பிறரும் போற்றும்படி ஒப்பற்ற நிலையில் வாழ்ந்த தமையன் உறவினரும் தம்பியும் இல்லா மல் மாள்வது முறையன்று. மேலும், இலங்கை நகரத்தின் செல்வத்தை நிலையென்று எண்ணி, என்னை இதுகாறும் விரும்பி வளர்த்த என் தமை யனைக் கொன்ற பகைவனை வாழ்த்திக்கொண்டு, புண்பட்ட மனத்தோடு வாழ்தல் என்பது, கூற்றை யும் ஆட்கொண்ட என்ஞல் இயல்வதன்று,'' என்று தன் கருத்தைத் தெற்றெனப் புலப்படுத்தினுன்.

## சிறந்த கதா பாத்திரம்

மனவலி படைத்த கும்பகர்ணன், தன் தமைய னுக்காகவே போர் செய்து செஞ்சோற்றுக் கடன் கழித்தான். அப் பெருவீரன் தனது அறிவுரை யாலும் நேரிய ஒழுக்கத்தாலும் செய்ந்நன்றி யறிதல் என்னும் சீரிய பண்பினுலும் இராமகாதை யில் சிறந்த கதாபாத்திரமாக விளங்குகின்றுன்.

**நூல் அறிமுகம்**

இத்தகைய நற்பாத்திரங்களின் சிறப்புக்களையும் தமிழ்ப் பண்பாட்டுச் செய்திகளையும் கம்பராமாயணத்தில் பல இடங்களில் காணலாம். இராமாயணம் வடநாட்டுக் கதையே. ஆயினும், தமிழ்ப் புலவராய கம்பர், அதனைத் தமிழ் மரபிற்கேற்பத் திருத்தியும் புதுக்கியும் அமைத்துள்ளார். இவற்றுக்கு மேலாக, அவரது செய்யுளும் கற்போர்க்கு இன்பம் பயப்பதாகும். கம்பருடைய கடவுள் கொள்கை, அரசியல் அறிவு, வாழ்க்கை அனுபவங்கள், புலமைத் திறன் முதலியவற்றை இராமகாதையில் கண்டு களிக்கலாம்.

# 12. அன்பின் சிகரம்

**முத்தநாதன் சூழ்ச்சி**

"என் செய்வது! எத்துணை முறை படையெடுத்தாலும் இவனை வெல்ல முடியவில்லையே! ஒவ்வொரு முறையும் என் படை இக்கோவலூர் மன்னன் படைக்கு எதிர் நிற்க ஆற்ருது சரிந்து விடுகின்றதே! இவனை வெல்லாவிடின், நமது நாட்டவர் நம்மை எள்ளி நகையாடுவரே! இவனை நேரில் படையெடுத்து வெல்வதென்பது அரிது. இவன் உயிரோடிருக்கும் வரை இவன் படைகளை வெல்வதும் அரிதே. ஆதலின், முதலில் இவனை ஒழிக்க வழிதேட வேண்டும்..................ஆம், அதுவே ஏற்ற வழி. இவ்வேந்தனைக் கொல்ல அதுவே தக்க வழி"

என்று தன்னுள் கூறிக்கொண்டான். இங்ஙனம் கூறிய இவன் யாவன்? இவன் திருக்கோவலூர் நாட்டையடுத்த ஒரு சிற்றரசன். இவன் பெயர் **முத்தநாதன்** என்பது.

**திருக்கோவலூர் அரசர்**

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு மலைநாட்டை (தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியை) ஆண்டு வந்தவர் மலையமான்கள் என்பவர். அவருள் முத்தநாதன் காலத்து அரசராக இருந்தவர் ஒரு சிறந்த சிவனடியார்; அவர் பொறுமைக்கு இருப்பிடமானவர்; வாய்மை, நடுவு நிலைமை, இன்னா செய்யாமை முதலிய நற்பண்புகளுக்கு நிலைக்களமானவர். அப்பெரியார் தாமாக எந்நாட்டின்மீதும் போருக்குப் போனதில்லை;

தம்மைத் தேடிவந்த போரையும் விட்டதில்லை. அவர் போரில் வெற்றியைத் தவிர மற்ருென்றை அறியார். அவர் சிவபெருமான்மீதும் அவனடியார்மீதும் எல்லையற்ற அன்பும் மதிப்பும் உடையவர். சிவனடியார் தம்மைத் தேடித் தமது அரண்மனைக்கு எந்த நேரத்தில் வந்தாலும் அவர்களைத் தடை செய்யாது விடல் வேண்டுமென்று அரண்மனைக் காவலர்க்கு ஆணையிட்டிருந்தார். அவர்களையே சிவபெருமாளுகக் கருதிப் பணிந்து போற்றுவார். அவர்கள் வேண்டியவெல்லாம் கொடுப்பார். இவ்வாறு அடியார்மாட்டு அவர் காட்டிய அன்பு தமிழ் நாடெங்கணும் பரவி, அவரைச் சிறந்த சிவபக்தராகக் கருதுமாறு செய்தது. 'சிவவேடமே மெய்ப்பொருள்' என்று மதித்திருந்த காரணத்தால் அவர் மெய்ப்பொருள் நாயனுர் எனப் பெயர் பெற்ருர்.

## அடியவர் வேடம்

இந்த ஆணையை வஞ்சகநெஞ்சினனுன முத்தநாதன் நன்கு அறிவான். அவன் ஒரு நாள் சிவனடியார் வேடத்திற் சென்று அவர் உயிருக்கு உலை வைக்க உறுதிகொண்டான்; தன் உடம்பெல்லாம் நீறு பூசினுன்; பொய்ச்சடை முடியைத் தலையிற் கட்டிக் கொண்டான்; உடைவாளைத் துணியில் வைத்து மடித்துப் புத்தகக் கட்டுப்போல அமைத்துக் கையில் பிடித்துக் கொண்டான்.

## வேடத்தின் வெற்றி

இங்ஙனம் பொய்வேடங்கொண்ட கொடியோன் அரண்மனையில் இருந்த பல வாயில்களையும்

கடந்து, இறுதியில் அரசர் அமர்ந்திருந்த அறைக் கதவை நெருங்கினான். அங்குத் தத்தன் என்ற வாயிலோன் நின்றிருந்தான். அவன் முத்த நாதன் என்னும் பொய்யடியானைத் தடுத்து நிறுத்தி, "அரசர் துயில் கொள்ளுகிறார். சமயம் தெரிந்து தெரிவிப்பல்," என்று கூறினான். வஞ்சக வேடத்தான் அவனை முறைத்துப் பார்த்து, "யான் அரசர்க்கு உறுதி கூற வந்துளேன். நீ இங்கேயே நில்," என்று கூறிக்கொண்டே அறையுள் நுழைந் தான். வாயிலோனும் வஞ்சகனும் பேசிய பேச் சின் ஒலியால் மன்னர் துயிலுணர்ந்தெழுந்தார். அரச மாதேவி அருகில் இருந்தாள். வந்தவர் சிவ னடியார் என்று நம்பிய வேந்தர் பெருமான், கது மென எழுந்து, இரண்டு கைகளையும் குவித்த வண்ணம் வஞ்சகன் எதிரே சென்று வணங்கி வரவேற்றார்; தாங்கள் இங்கு வந்தது அடியேன் செய்த பெரும் பேறாகும். தாங்கள் இங்கு எழுந் தருளிய காரணம் யாதோ?" என்று பரிவுடனும் பணிவுடனும் வினவினார்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கீழ்மகனான முத்தநாதன், உத்தம வேந்தரை நோக்கி, "என் கையிலுள்ளது ஆகம நூல்; இஃது உங்கள் நாயகனான சிவபெருமான் அரு ளியது. இஃது எங்கும் கிடைக்காத ஒன்று. இதனை உமக்கு இயம்பக் கொணர்ந்தேன்," என்று இதமாகக் கூறினான். அவன் கூற்றை மெய்யென நம்பிய மெய்ப்பொருளார், உள்ளத்தில் உவகை பூத்து, "அப்படியா! என் தவப்பயனே பயன். எம்பெருமான் அருளிச் செய்த இந்த ஆகமத்தை அடியேனுக்கு வாசித்துக் காட்டி விளக்கம் செய்ய

வேண்டுகிறேன்,'' என்று பணிவன்போடு வேண்டினார். முத்தநாதன், “அரசே! நின் கோப்பெருந்தேவியை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிடு. நீ தனிப்பட்ட முறையில் இந்த ஆகமத்தைக் கேட்க வேண்டும்,'' என்றான். உடனே வேந்தர் தம் பக்கலில் நின்றிருந்த கோப்பெருந்தேவியை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டார்.

அரசரிட்ட தவசின்மேல் பொய்வேடத்தான் அமர்ந்தான். மன்னவர் அவனுக்கு எதிரில் தரையில் அடக்க ஒடுக்கத்துடன் உட்கார்ந்து, “ஆகமப் பொருளை அருள் செய்க,'' என்றார். வஞ்சகன் தான் கொண்டுவந்த புத்தகக் கட்டை அவிழ்ப்பவன் போல, உடைவாள் மூடப்பெற்றிருந்த துணியை மெல்ல மெல்ல நீக்கினான். மிகத் தூய்மையான ஆகமத்தை அவன் கையில் எடுப்பதாக நம்பிய அரசர், உட்கார்ந்தபடியே தலைகுனிந்து அவனை வணங்கினார். அவ்வாறு அவர் வணங்கும் போது அவன் உடைவாளை எடுத்து மன்னவர் விலாவிற் பாய்ச்சி மறைத்து முடித்தான். அவ்வளவே: வேந்தர் மண்மேற் சாய்ந்தார். குருதி பெருக்கெடுத்து ஓடியது. அந்நிலையிலும் அவர் கைகுவித்து அக்கொடியோனை வணங்கியபடியே இருந்தார்.

### அன்பின் சிகரம்

வஞ்சகன் தன்னை மீறி அறையுள் நுழைந்தது முதல் தத்தன் என்ற வாயிற் காவலன் அவ்வஞ்சகன் செயலை நோக்கியபடியே இருந்தான். எனினும் இமைப்பொழுதில் அக்கொடியவன் செய்த கொடுஞ் செயலை அவனால் தடுக்க முடியவில்லை.

அவன் உடனே காற்றெனக் கடிது பாய்ந்து, வஞ்சகனை வெட்டி வீழ்த்த வாளை ஓங்கினான். அதனைக் கண்ணுற்ற மெய்ப்பொருளார், "தத்தா, இவர் சிவனடியார்; நம்மவர்," என்று கூறித் தம் கையால் தடுத்தார். வேதனை அடைந்து வீழ்ந்த வேந்தரால் இவ்வாறு விலக்கப்பட்ட தத்தன், அவரைத் தலையால் வணங்கி, "யான் இப்பொழுது செய்ய வேண்டுவது ஆணையிடுங்கள்," என்றான். உடனே வேந்தர், "இவர் எம்பிரான் அடியார். இவர் என்னைக் குத்திவிட்டார் என்ற காரணத்தால் இவருக்கு யாரும் ஊறு செய்தலாகாது. இவர் இந் நகர் விட்டுப் போகத் தக்க வசதி செய்," என்று கூறினார்.

## இணையிலாப் பெரியார்

இதற்குள் இச்செய்தி காட்டுத்தீப் போல எங்கும் பரவியது. வீரர் பலர் "அரசர்க்குத் தீங்கிழைத்த பொய் வேடத்தானைக் கொல்வோம்," என்று ஆரவாரம் செய்தனர். அப்பொழுது அப்பொய் வேடத்தானை வெளியே அழைத்து வந்த தத்தன், அவர்களை நோக்கி, "இவரை யாரும் எதிர்க்கலாகாது. இது நம் அரசர் ஆணை," என்றான். உடனே வீரர் விலகி வழிவிட்டனர். வஞ்சகக் கொடியோன் வளநகர்க்கு வெளியே யாதொரு எதிர்ப்புமின்றி விடப்பட்டான். தத்தன் வீடுவந்து மன்னரைப் பணிந்து, "அடியவர் ஊரை விட்டு அகன்று விட்டார்," என்றான். அதுகேட்ட அரசர் முகமலர்ந்து, "எனக்கு இன்று நீ செய்த இவ்வுதவி பிறர் எவர் செய்ய வல்லார்!"

என்று தத்தனை நோக்கிக் கூறிக்கொண்டு உயிர் துறந்தார்.

தம் உயிரைப் போக்க முயன்றவர்மீது பாய்ந்து ஊறு விளைத்தலே எவரும் செய்யத் தக்க செயலாம். ஆனால் இப்பெரியார் இதற்கு முற்றிலும் மாறுபட்டவராக நடந்துகொண்டார்; வந்தவர் சிவனடியாரென்று அவர் நம்பினர்; சிவனடியார் தம்மை உடைவாளால் குத்தியதும் இறைவன் தூண்டுதலால் என்று நம்பினர்; இறைவன் தூண்டு தலால் வந்த அடியாரைத் துன்புறுத்தலாகாது என்பது அவர் கருத்து. இத்தகைய சீரிய மனப் பண்பு அவர்பால் காணப்பட்ட காரணத்தாற்றான் அவர் பெயர் சுந்தரர் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையில் ஏற்ற இடம் பெற்றது.

## 2. அப்பரும் அந்தணரும்

### மெய்யன்பு

"அந்தணரே, நீர்வைத்துள்ள தண்ணீர்ப் பந்தற்கு உம்முடைய பெயரை வையாமல் வேறொரு பெயர் வைத்திருப்பதற்குக் காரணம் யாது?" என்று ஒரு முதியவர் ஓர் அந்தணரைக் கேட்டார். அந்த அந்தணர் **அப்பூதி** என்னும் பெயரினர். அவர் முதியவரைச் சினந்து நோக்கி, "என்ன! வேறொரு பெயரா! அப்பெயர் யாருடையது என்பது உமக்குத் தெரியாதா? பல்லவ வேந்தன் இயற்றிய கொடுமைகளிலிருந்து இறைவனருளால் தப்பிப் பிழைத்த திருநாவுக்கரசரைப் பற்றி நீர் கேள்விப் பட்டதில்லையா? தமிழ்நாடு முழுவதும் அவர் பெயர்

பரவியுள்ளதே! 'அப்பர்' என்றும் அவர் அழைக்கப்படுவார். அப்பெரியார் பெயரை அல்லவோ யான் தண்ணீர்ப் பந்தற்கும் என் மக்களுக்கும் என் வீட்டுப் பொருள்கள் எல்லாவற்றுக்கும் வைத்து வழங்கி வருகிறேன். சிவனடியாராகத் தோன்றும் நீர் அப்பெயரை அறியாதவர் போல 'வேறொரு பேர்' என்று கூறியது வியப்பளிக்கின்றது. அவர் பெயரைக் கேள்விப்பட்டிராத நீர் யார்? உமது ஊர் எது?'' என்று கேட்டார்.

## உண்மை வரவேற்பு

அம்முதிய சிவனடியார்தாம் அந்தணரால் போற்றப்பட்ட திருநாவுக்கரசர். அவர், அந்தணர் தம்மீது கொண்டிருந்த அளவற்ற அன்பை எண்ணி யெண்ணி மகிழ்ந்தார்; அவரை அன்போடு நோக்கி, "அந்தணரே, உம்மால் பாராட்டப்படும் அத்திருநாவுக்கரசன் இந்த ஏழைதான்,'' என்று மெதுவாகக் கூறினர். 'உடனே அவர், "என்ன! அப்பெரியாரா தாங்கள்! யான் அறிவின்றிச் சினந்து கூறியவற்றைப் பொருட்படுத்தாதீர்கள். யான் உங்கள் அடைக்கலம்,'' என்று கூறிக்கொண்டு வீட்டுள் ஓடினர்; சிறிது நேரத்தில் மனைவி மக்களுடன் வந்து திருநாவுக்கரசரைப் பணிந்தார். அவர் பாதங்களை நன்னீரால் தூய்மை செய்தார்; அந்நீரை அனைவர் மீதும் தெளித்தார்; தாம் வாயிலும் ஊற்றிக் கொண்டார்; "பெருமானே, தாங்கள் இன்று இங்கு 'அமுது அருந்த வேண்டும்,'' என்று வேண்டினர். திருநாவுக்கரசர் அவரது உள்ளன்புக்கு உருகி அமுதருந்த இணங்கினர்.

**அளவற்ற அன்பு**

விருந்து தயாராகி விட்டது. அந்தணரின் மூத்த மகன் வீட்டுத் தோட்டத்தில் வாழை இலையை அறுக்கச் சென்ருன். அவன் பெயர் மூத்த திருநாவுக்கரசு என்பது. அவன் இலையை அறுக்கும்போது மரத்திலிருந்த விடநாகம் ஒன்று அவன் கையைத் தீண்டிவிட்டது. ஆயினும் அடியவர் உணவு உண்ணக் காலம் தாழ்த்தலாகாது என்ற எண்ணத்தால் அம்மைந்தன், மயக்க உணர்வொடு ஓடிவந்து இலையைத் தாயினிடம் கொடுத்துவிட்டுத் தரையில் விழுந்தான். பெற்ருேர் உற்றதை உணர்ந்தனர்; உண்மையை உணர்ந்தால் அடிகள் உண்ண மாட்டார் என்று எண்ணி, வீழ்ந்த மைந்தனைப் பாயில் சுருட்டி, ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, அடிகளுக்கு உணவு படைத்தனர்.

**விடம் நீக்கிய திருப்பதிகம்**

அடிகள் ஆசனத்தில் அமர்ந்து உண்பதற்கு முன் அனைவர்க்கும் திருநீறு வழங்கினுர். மூத்த மைந்தனைக் காணுமையால், "மூத்தவன் எங்கே?" என்று அந்தணரைக் கேட்டார். அந்தணர், "இப்போது இங்கு அவன் உதவான்," என்று பதிலளித்தார். உடனே அடிகள் அந்தணர் முகத்தை உற்று நோக்கினுர். "அந்தணரே, என் மனம் தடுமாறுகிறது. உண்மையை ஒளியாமல் உரையும்," என்ருர். அந்தணர் நடந்ததை நவின்ருர். உடனே அடிகள் உடல் பதறினுர். "இதனை அப்பொழுதே என்னிடம் சொல்லலாகாதா?" எனக் கடிந்து கொண்டு, மைந்தனை எடுத்துவரச் சொன்னுர். இறைவனை நினைந்து, அரவின் விடம் நீங்கத்தக்க திருப்பதிகம் ஒன்றை உள்ளம் உருகப் பாடினுர்.

பாடல் முற்றுப் பெறுவதற்குள் மூத்த திருநாவுக்கரசு விழிகளைத் திறந்து பார்த்தான்; தன்னை அடிகள் அன்போடு நோக்குவதைக் கண்டு, உள்ளக் கிளர்ச்சியுடன் எழுந்து, அவர்தம் மலரடிகளைப் பணிந்தான். அடிகள் அவ்விளைஞனை மார்போடு அணைத்துக்கொண்டு ஆசி நல்கினர். பெற்றோரும் மற்றோரும் அக்காட்சியைக் கண்டு மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தனர்.

## நூல் அறிமுகம்

இத்தகைய சிறப்புடைய வரலாறுகள் பல வற்றைத் தன்னகத்தே கொண்டது பெரிய புராணம் என்னும் பெருங்காப்பியம். இது கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இயற்றப் பட்டது. இதனைப் பாடியவர் அநபாய சோழனது முதலமைச்சரும் பெரும்புலவருமாகிய **சேக்கிழார் அருள்மொழித் தேவர்**. இவரைச் சேக்கிழார் என்று சுருக்கமாகக் குறிப்பிடுவது வழக்கம். பெரிய புராணம் சுந்தரர் வரலாற்றைத் தலைமை யாகக் கொண்டது; அவரால் பாடப்பெற்ற நாயன்மார் வரலாறுகளை இடையிடையே பெற் றுள்ளது. கி. பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்து மறைந்த நாயன் மார் அறுபத்துமூவர் வரலாறுகளையும் இந்நூலில் விரிவாகக் காணலாம். சைவசமயக் கொள்கை களும், பௌத்த சமயக் கருத்துக்களும் சமண சமயக் கருத்துக்களும் இதன்கண் விரிவாக இடம் பெற்றுள்ளன. இனிய எளிய செந்தமிழ் நடை யில் இந்நூற்பாக்கள் அமைந்துள்ளன.

# ILAKKIYA ARIMUGAM

(TAMIL)

BY

DR. M. RAJAMANIKKAM,
M.A., L.T., M.O.L., PH.D.

THENNATTU PATHIPPAKAM
16, BROADWAY :: MADRAS-1